633

மாத வெளியீடு விஜய - ஆடி

சக்தி



மலர் - 5 இதழ் - 1 அணா நான்கு

Special House
For all kinds of Sweets

NEHRU CAFE

PROPRIETOR: K. SESHAGIRI RAO

43, NYNEAPPA NAICKEN STREET

JAWAHARNAGAR

P. T., MADRAS

TEL. No. 4298

★ பலிதத்தினால் தலைசிறந்து விளங்கும் ரேடியோ ரிஸீவர்களை "ஹைக்யூ" என்று ரேடியோ எஞ்சினீர்கள் கருதுகிறார்கள்.

சகல ரேடியோ உலகை கேட்கலாகும் இந்த ரேடியோ ரிஸீவர்கள் இன்றே கிடைக்கும்.

7 வால்வ் மாடல்	5 வால்வ் மாடல்
1024 A. C./D. C.	1020 A. C./D. C.
1026 A. C.	1022 A. C.

HIS MASTERS VOICE

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட், மதராஸ்.

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரேடியோ

அனுமதி பெற்ற எச். எம். வி. ரேடியோ வியாபாரிகள் :—

மஹமத் இப்ராஹிம் & கம்பெனி, மதராஸ்.
தி இந்தியா எலக்ட்ரிக் & ரேடியோ கம்பெனி (டி. எஸ். வி. & சன்ஸ்), கோயம்புத்தூர்.
வின்ஸன்ட் & கம்பெனி லிமிடெட், திருச்சினாப்பள்ளி.
வி. எஸ். ராஜகோபாலன் & கோ, பெங்களூர்.
சாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.
ஏ. வி. லக்ஷ்மி நாராயண செட்டி, கும்பகோணம்.
யுனைடெட் டிஸ்டிரிபியூடர்ஸ், மதுரை.
பிரிமியர் எலக்ட்ரிக் கம்பெனி, கொயிலோன்.
சங்கர ரங்கய்ய செட்டி & ஸன்ஸ், திருநெல்வேலி.
ஸுபேதார் பு. பச்சையப்பா & ஸன்ஸ், வேலூர்.

யுத்தகால முதலீடுகள் !

★

யுத்தமும் அதன் விளைவான பொருளாதார நெருக்கடிகளும் அசாதாரண சம்பவங்கள் அல்ல. ஆனல், அவை மனிதவர்க்க சரித்திரத்தில் தோன்றி மறையும் அம்சங்கள். அவை லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியைப் பாதிக்க முடியாது. லைப் இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியின் மதிப்பு ஸ்திரமானது; ரொக்கமாக மாற்றக் கூடியது; கடன் வாங்கவும் பொருத்தமானது; லாபம், வருமான வரி விலக்கு உண்டு; இதனல் யுத்த காலத்தில் மற்றெதிலும் முதல் போடுவதைவிட லைப் இன்ஷ்யூரன்ஸ் மிகச் சிறந்தது.

மனதில் அழுத்தமாகப் பதியும் புள்ளி விவரங்கள்

...ள்ள பாலிஸிகள்	ரூ. 17 கோடிக்குமேல்			
...ண்ட்	ரூ. 3	கோடி	10	லட்சத்துக்குமேல்
... ஆஸ்திகள்	ரூ. 3	,,	56	,,
...ப்பட்ட பாலிஸிகளின் மதிப்பு	ரூ. 1	,,	97	,,

...போனஸ்
...த்தில் 1000-க்கு
- எண்டௌமெண்ட் அஷ்யூரன்ஸ் ரூ. 18/-
- முழு ஆயுள் அஷ்யூரன்ஸ் ரூ. 15/-

...வகச்சிறுகத் திரண்டுள்ள ஏராளமான லைப் பண்டுகள், சிலாக்கியமான முறையில் உபயோகிக்கப்படும். ஆஸ்திகள் இந்தியா எங்கும் கிழக்கிலும் விஸ்தரிப்புள்ள, ஸ்தாபனம் உடைய ஹிந்துஸ்தான், கடந்த காலத்திலும் இப்பொழுதும் எல்லா நெருக்கடிகளையும் வெற்றிகரமாகச் சமாளிக்கக்கூடிய சக்தி வாய்ந்ததாகும். அதன் பாலிஸிகள் பந்தோபஸ்தானவையாயும், சிலாக்கியமானவையாயும், லாபகரமானவையாயும்; ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி செய்யக்கூடியவாறு பலதரப்பட்டதாகும்.

நம்பிக்கையான சேவைக்கு பிரக்யாதி வாய்ந்தது

ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ்
இன்ஷ்யூரன்ஸ் சொஸைட்டி லிமிடெட்

ஹெட் ஆபீஸ் :
" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "
6-ஏ, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு, கல்கத்தா

சென்னை பிராஞ்சு :
" ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ் "
அரண்மனைக்காரத் தெரு, சென்னை

சக்தி மலர் 7

வெளி வந்துவிட்டது

ஸ்ரீ ஏ. கே. செட்டியார்

எழுதிய

அமெரிக்கா

[பிரயாண நூல்]

விலை ரூபா ஒன்று

சக்தி காரியாலயம்,

ஜி. டி. சென்னை.



காங்கிரஸ் ஹவுஸ்
வாஷிங்டன் டி. சி.

சக்தி மலர் 5

சிறை அனுபவங்கள்

ஆசிரியர்: கி. சடகோபன்

மனிதனுடைய உண்மைச் சொரூபத்தைக் காட்டிவிடக் கூடியது சிறைதான். அந்தச் சிறை நம் நாட்டில் எப்படி யிருக்கிறது என்பதை, உருக்கமாகவும் நகைச்சுவை யுடனும் வர்ணிக்கப்பட் டிருக்கிறது.

விலை அணு 12

சக்தி காரியாலயம்,

:: ஜி. டி. சென்னை ::

சக்தி மலர் 6

கூண்டுக் கிளி

முதலிய நாடகங்கள்

ஆசிரியர்: ஹரீந்திரநாத சட்டோபாத்யாயா
மொழிபெயர்த்தவர்: தி. ஜ. ர.

தெவிட்டாத இனிய நடை; அரிய கருத்துக்கள்; உள்ளத்தை அள்ளும் கற்பனை

விலை ரூ. 1

சக்தி காரியாலயம் :: ஜி. டி. சென்னை

M.K. தியாகராஜ
பாகவதர்
பாடிய

அசோக்-குமார்
டாக்கி பாட்டுகள்
CA.1431
உனக்கண்டு...
பூமியில் மானிட...
CA.1432
மனமே நீ ஈசன்..
ஸத்வ குண போதன்
ஓடியன் ரிகார்டுகளில்
கேளுங்கள்
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்
மவுண்ட் ரோட்..... மதராஸ்

பொருளடக்கம்

திரை விலகுமா ? ... 1
காலச் சுழல் ... 2
உல்லாசப் பேச்சு
'ரதி' ... 4
மந்திரக் கண்
'விஞ்ஞானி' ... 5
மாதவியின் உள்ளம்
கு. மதுரை முதலியார் ... 9
செல்லக் குழந்தை
எஸ். விசாலாக்ஷி ... 10
காந்தி வாக்கு ... 12
இன்னொரு முத்தம்
'ஆனந்தன்' ... 13
காலைக் காட்சி
'தாராபதி' ... 15
கனவுலகம் ... 16
ஜனநாயக அமெரிக்கா
எ. கே. செட்டியார் ... 17
வைர மோதிரம்
கு. ப. ராஜகோபாலன் ... 19
யோகி அரவிந்தர்
'ஸரவி' ... 21
ஸோவியத் ருஷியா
'சஞ்சாரி' ... 23
ருஷியப் படங்கள் ... 24
வனந்தர வீரர் வேவல்
'ஜேயார்' ... 27
கதம்பம் ... 28
தாகூரைப்பற்றி ஐரிஷ் கவிஞர்
வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ. ... 29
கலையில் சிறந்த திருப்பரன்குன்றம்
ஜே. எம். சோமசுந்தரம், பி.ஏ., பி.எல். ... 31
காலத்தேர்
சுவாமி சுத்தானந்த பாரதியார் .. 33
சிறைச்சாலை
லியோ டால்ஸ்டாய் ... 37
செடிகளுக்கு அதிசய உணவு
வ. சு. மணி ... 39
எனது சத்தியாக்கிரஹம்
டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் ... 40
அழையா விருந்து
'உல்லாஸி' ... 41
உடம்பும் மருந்தும் ... 44
பறித்த பூக்கள் ... 45
புத்தக உலகம் ... 46
பாலர் பாட்டு: செங்கதிர்ச் செல்வன்
'உமா' ... 47
,, கதை: கருணைமேகம்
'நீலா' ... 48

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து போலிகவே!

மலர் ௫: இதழ் ௧ விஷு—ஆடி

13 MAR 1942

திரை விலகுமா?

இந்திய வைசிராயின் நிர்வாக சபை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதே, இதன் மர்மமென்ன? இந்த விஸ்தரிப்புக்கு முன்னே, திரைக்குப் பின்னே என்ன நடந்தது? கடைசி நிமிஷத்திலேகூட, என்னென்னவோ வேஷ மாறுதல்கள் நடந்தனபோலிருக்கிறதே, அவைதான் என்ன? இவையெல்லாம் என்றாவது ஒரு நாள் பொது ஜனங்கள் அறிய வெளி வருமா? அல்லது வரவே மாட்டாவா?

இந்த விஸ்தரித்த வைஸிராய் நிர்வாக சபையை, சற்றேறக் குறைய ஒரு ‘யுத்த மந்திரி சபை’யே ஆகும் என்கிறார் இந்தியா மந்திரி அமெரி. தேசீயத் தற்காப்புக் கவுன்ஸில் என்ற ஒரு சபையையும் வைஸிராய் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறார். இவை இந்திய அரசியல் நிலைமையில், என்ன மாறுதலைச் செய்திருக்கின்றன? செய்ய முடியும்?

இந்தியாவின் இரு பெரும் முக்கியக் கட்சிகளும் இசைந்து வராததால், வைஸிராயின் நிர்வாக சபையை விஸ்தரிப்பது பயனில்லை என்று இந்தியா மந்திரி மூன்று மாதத்துக்கு முன்னேதான் கூறினார். அந்த அபிப்பிராயத்தை மாற்றக்கூடிய நிலைமை இப்போது என்ன ஏற்பட்டுவிட்டது? உள்நாட்டிலாகா, பொருளாதாரம், போக்குவரத்து, ராணுவம் ஆகிய நான்கு ஜீவாதாரமான இலாக்காக்களும் இனியும் ஆங்கிலேய அங்கத்தினர்களிடமே இருக்கும். மற்ற இலாக்காக்கள் மட்டில், பின்னும் கூறு போடப்பட்டு, மற்றும் சிலருக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால், தேசீய இந்தியா பெறும் லாபமென்ன?

இந்த வைஸிராய் நிர்வாக சபை விஸ்தரிப்பு அரசியல் சம்பந்தமில்லாதது, வகுப்புவாத சம்பந்தமில்லாதது என்று சர்க்கார் கூறுகிறார்கள். அப்படியானால், இதற்கென்ன அவசியம் வந்தது? அதிக ஆள்களைப் பிடித்து, வைஸிராயின் பக்கத்திலே எதற்காக வைத்துக்கொள்ளவேண்டும்? உலகத்தை ஏமாற்றவா? அமெரிக்காவின் இந்திய அனுதாபிகளைத் திருப்திப்படுத்தவா?

இதிலே, முஸ்லீம் லீக்கர்கள் சிலர் சேர்ந்திருக்கிறார்கள். ஆயினும், “இவர்களை விட்டேனா பார்” என்று ஜின்னா சாகேப் கர்ஜிக்கிறார். ஹிந்து மகாசபைத் தலைவர் சவர்க்கார், “சரியான பாதையில் எடுத்துவைத்த ஓர் அடியாகும் இது” என்று வர்ணிக்கிறார். ஆனால், அதே ஹிந்து மகாசபையின் பொதுக் காரியதரிசியான டாக்டர் வரதராஜுலுவோ, “என்ன அநியாயம்! முஸ்லீம்களுக்குச் சரிபாதி ஸ்தானங்களா? வைஸிராய் நிர்வாக சபை விஸ்தரிப்பை நாங்கள் யாரும் கேட்கவில்லையே! இது எதற்கு?” என்கிறார். “ஜனங்களின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை” என்கிறார் கனம் சாஸ்திரி. “திருப்தி” என்கிறார் சேதல்வாட். “மௌனம் சாதிக்கிறேன்” என்கிறார் மகாத்மா. ஆயினும், “காங்கிரஸ் கோரிக்கையை இது திருப்திசெய்யவில்லை” என்று அவர் கூறுகிறார்.

இந்த வைஸிராய் நிர்வாக சபை விஸ்தரிப்பு ஏற்பாடுகள் திடரென்று வந்துவிடவில்லை. பல நாட்களாகவே ‘புகைந்து’கொண்டிருந்த விஷயந்தான். திரைக்குப் பின்னே பேரங்களும் நடந்துதான் இருக்கின்றன. அப்படியிருக்க, ஒரே கட்சித் தலைவர்களுக்குள்ளே அபிப்பிராயங்கள் ஒன்றுக்கொன்று குறுக்கு மூலை பாய்வானேன்? அரைகுறைத் திருப்தியும் ஏமாற்றமும் ஏற்படுவானேன்?

பிரிட்டிஷ் ராஜ தந்திரச் சூழ்ச்சியா இவற்றின் காரணம்? அல்லது இந்திய ராஜீயம் ‘பெரிய இடத்து’ விஷயமாகி வருகிறதா? ஜனநாயக உணர்ச்சி, இந்திய மண்ணிலே சாகப்போகிறதா? ‘பாஸிஸ்ட் கிராண்ட் கவுன்ஸில்’ போல, இந்திய அரசாங்கம் வரவரப் பெரியதொரு ‘எதேச்சாதிகார ஸ்தாபனம்’ ஆக முற்றப்போகிறதா? இந்திய ராஜீய ஸ்தாபனங்கள் இப்போது உறங்கிக்கொண்டிருப்பது சரியல்ல. அவை பெருங்கிளர்ச்சி செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டது. மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கம் ஒருபுறமிருக்கட்டும். இந்தியத் தேசீயத்தின் மௌன ஆட்சேபணையைக் காட்டுவதோடு அமைவது அது. ஆனால், இந்தியாவின் உள்ளக் குமுறலை, வெளிக் காட்டுவதல்ல. அதைக் காட்ட வழியென்ன? என்ன? அதுதான் இன்று தேசபக்தர்கள் அனைவரது மனத்தையும் அரித்துக்கொண்டிருக்கும், அரித்துக்கொண்டிருக்க வேண்டிய, பெருங் கவலையாகும். திரை விலகுமா? இந்திய அரசியலை வரவரத் தடித்துச் சூழ்ந்துவரும் பனிப்படலத் திரை விலகுமா? சமீபத்திலே என்றாவது விலகுமா?

காலச் சூழல்

பாகிஸ்தான் 'குட்டு'

"முஸ்லிம் லீக் மந்திரிகளைக்கூட வைஸிராய் கலைத்து விட்டாரே! அவர்களை யெல்லாம் பார்த்துக் கொள்கிறேன் ஒரு கை!" என்று ஜின்னா சாகேப் கூச்சலிடுவதற்கு மற்றொரு காரண முண்டு. அது என்னவென்றால், இந்தச் சிக்கந்தர் ஹயத்கான், 'பாகிஸ்தான் குட்'டை உடைத்து விட்டதுதான். பாகிஸ்தான் யோசனை யாரோ ஓர் ஆங்கிலேயன் கிளப்பி விட்டதே யாகும் என்கிறார் சிக்கந்தர். அதை ஜின்னா பிடித்துக்கொண்டு கூத்தாடுகிறாரே யொழிய, தமக்கெல்லாம் இஷ்டமில்லையாம். இந்த மாதிரி ரகஸ்யங்களை அம்பலம் செய்தால், யாருக்குத்தான் கோபம் வராது?

நின்ற ரகஸ்யம்

மைசூரிலே மோட்டார் செய்யலாம் என்று ஒரு திட்டம் வந்ததல்லவா? அது ஏன் நின்று போயிற்று? மோட்டார் செய்யும் கம்பெனியை ஆரம்பிப்பதற்காக, ஏதோ ஓர் அமெரிக்கக் கம்பெனியிடம் ஒப்பந்தமெல்லாம் ஆகிவிட்டதாம். ஆயினும், மைசூர் சர்க்காருடன் நடத்திய பேரத்திலே முறிவு ஏற்பட்டுவிட்டது. அந்த ரகஸ்யத்தை ஸ்ரீ வால்சந்து ஹீராசந்து வெளியிட விரும்பவில்லை. ஆயினும் இந்திய சர்க்காரின் போக்கைப்பற்றி மாத்திரம் அவர் கண்டித்திருக்கிறார்.

"இந்தியாவிலே மோட்டார் கட்டும் தொழில் ஆரம்பிப்பதால், எந்திரத் தொழில் நிபுணர்களும் பணமும் யுத்த முயற்சிக்கு உதவாமல் முடங்கிவிடுவர்" என்று இந்திய சர்க்கார் சொன்னார்கள். "இருபது அல்லது முப்பது லட்சம் டாலர்களும் பத்துப் பனிரண்டு அமெரிக்க எஞ்சனீர்களும் தான் நான் கேட்ட தெல்லாம் கூடி. பிரிட்டிஷ் சர்க்கார், தினமொன்றுக்கு யுத்தத்திலே 60 லட்சம் டாலர்கள் செலவழிக்கிறார்களே! இதென்ன பெரிய காரியம்?" என்று கேட்கிறார் ஸ்ரீ ஹீராசந்து. இதற்கு என்ன பதில்?

நகர பஸ் வேலை நிறுத்தம்

சென்னை நகரில் கொஞ்ச நாட்களாக, பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய் திருக்கிறார்கள். ஆனால், பஸ்களென்னவோ ஓடிக் கொண்டு தான் இருக்கின்றன. இடையிலே, இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றிச் சர்க்கார் அறிக்கை ஒன்று பிறந்தது. 'முன்னே பார்த்தால் முன்சீப்பு குதிரை; பின்னே பார்த்தால் முஸல்மான் குதிரை' என்ற சாட்சியம்போல் இருக்கிறது அது.

இரண்டு கட்சியார் மேலும் குற்றம் இருக்கிறதாம். பஞ்சாயத்தின் தீர்ப்புப்படி நடக்காதது முதலாளிகளின் குற்றமாம். அதனால் வருத்தமடைந்த தொழிலாளர்கள், முன்னறிவுப்புச் செய்யாமல் வேலை நிறுத்தம் செய்ததும் குற்றமமாம்! தொழிலாளர்கள் நிபந்தனையின்றி வேலைக்குத் திரும்பவேண்டும் என்றும், முதலாளிகள் பஞ்சாயத்தின் தீர்ப்பு ஷரத்துக்களை நிறைவேற்ற வேண்டும் என்றும் உபதேசம் செய்கிறது சர்க்கார். தொழிலாளிகள் எதை நம்பி வேலைக்குத் திரும்புவது? முதலாளிகள் பின்னும் 'மக்கர்' செய்தால், அவர்களை இணக்குவது யார்? அதற்கு உத்திரவாதம் என்ன இருக்கிறது என்பதைச் சர்க்கார் தெரிவிக்குமா?

பர்மா ஒப்பந்தம்

பர்மாவில் இந்தியர் குடியேறுவது பற்றி, இந்திய சர்க்காருக்கும் பர்மிய சர்க்காருக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

(1) ஏற்கனவே, பர்மாவிலேயே பிறந்து, பர்மாவையே தங்கள் தாயகமாய்க் கருதும் இந்தியர்களுக்குப் பர்மாவில் பூரணப் பிரஜா உரிமைகள் உண்டு.

(2) தற்போது பர்மாவில் உள்ள இதர இந்தியர்களில், ஏழு வருஷங்களுக்கு மேற்பட்டுப் பர்மாவிலேயே வசிப்பவர்களுக்கும் அவ்வாறே பூரண உரிமைகள் அளிக்கப்படும்.

(3) பர்மா செல்ல இனி விரும்பும் இந்தியர்கள் ஏ, பி என்ற இருவித அனுமதிப் பத்திரங்களில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 500 ரூபாய் செலுத்துவோருக்கு ஏ-அனுமதிப் பத்திரம் அளிக்கப்படும். அவர்கள் பர்மாவில் உத்தியோகம் பெற்று எவ்வளவு காலம் வேண்டுமானாலும் வசிக்கலாம். காலக் கிரமத்தில், பிரஜா உரிமைகளையும் அவர்கள் சம்பாதித்துக் கொள்ளலாம். பி அனுமதிப் பத்திரம் பெறும் சாதாரணத் தொழிலாளிகள், முதலில் 12 ரூபாயும் பிறகு வருஷம் ஒன்றுக்கு 5 ரூபாயும் செலுத்த வேண்டும். உயர்ந்தது 9 வருஷங்கள்தான் பர்மாவில் இவர்கள் வசிக்கலாம். இவர்கள் பிரஜா உரிமை பெற முடியாது.

பர்மாவுக்கு இந்தியரே வரக்கூடாதென்று பர்மா தடுக்கவில்லை. ஆனால், சில கடுமையான நிபந்தனைகளைத்தான் போடுகிறது. அந்த அளவில் சந்தோஷப் படவேண்டியதுதான். எனினும், சில விசேஷ இந்திய ஸ்தாபனங்கள் பர்மாவில் இருக்கின்றனவே, அவற்றின் நிலைமை என்ன என்பதை, இப்போதே விளக்க வேண்டும். உதாரணமாக, பர்மாவிலுள்ள பல தனவணிகர் கடைகளின் கதி என்ன? அவை ஏஜண்டுகளாலும் சொந்தத்திலும் நிர்வகிக்கப் படுகின்றன. அவற்றின் சொந்தக்காரருக்குப் பிரஜா உரிமைகள் அளிக்க, இதே யோக்கியதாம்சங்கள் வேண்டப்படுமா? அந்தக் கடைகளின் நலன்கள் எவ்வாறு பாதுகாக்கப்படும்? இந்த விஷயங்கள் தெளிவு செய்யப் பட வேண்டும்.

புதிய சேனாதிபதி

இந்தியாவின் புதிய சேனாதிபதியாக வந்திருக்கும் ஜெனரல் வேவல் சிறந்த வீரர். இப்பொழுதுதான் ஆப்பிரிக்கப் பாலைவனத்திலே வெற்றிகரமாய்ப் போரிட்டு விட்டு வந்திருப்பவர். அவருடைய சரித்திரச் சுருக்கத்தை இவ்விதழில் வேறொரு பக்கத்தில் காணலாம். இவருக்கு முந்தியிருந்த சேனாதிபதி ஸர் கிளாடி ஆச்சின்லெக் இந்திய ராணுவம் சம்பந்தமான சில சீர்திருத்தங்கள் செய்தார். அவற்றில் மிக முக்கியமான ஒன்று வகுப்பு

வித்தியாசமின்றிச் சகலரையும் ராணுவத்தில் சேர்த்த தாகும். ராணுவ ஜாதி, ராணுவ மல்லாத ஜாதி என்ற வித்தியாசத்தைக் களைய, அவர் முயன்றார். தளபதி வேவல் அதைப் பின்பற்றுவாரா? பலாத்காரப் போர்க் களத்திலே, டாங்கிகளுக் குள்ளும் விமானங் களுக் குள்ளும் பீரங்கிகளுக்குப் பின்னும் புகுவோரெல்லாம்தான் ராணுவ ஜாதி; மற்றவரெல்லாம் என்னதான் வீரரா யிருந்தாலும் ஓடும் ஜாதிதான் என்ற விஷயம் ஐரோப்பியக் களங்களிலே நிராட்சேபனையாய் நிரூபணமாகி வரும் இந் நாளிலேகூட, இந்தியாவிலே இத்தகைய வித்தியாசங்களை நீடிப்பது மட்டமையாகும் என்பதைத் தளபதி வேவல் மறக்காமல் இருப்பாரா?

மண் தூவும் விவகாரம்

கல்கத்தாவிலே கார்ப்பொரேஷனுக்கும் சர்க்காருக்கும் ஒரு ரஸமான விவாதம் நடக்கிறது. அதுதான் மண் தூவும் விவகாரம். விசேஷமான சர்க்கார் வைபவங்கள் நடக்கும்போது, ரஸ்தாவிலெல்லாம் மணலைப் பரப்பிவருவது, கல்கத்தாவிலே தொன்று தொட்டு நடந்துவருமொரு சம்பிரதாயமாம். சமீபத்திலே நேபாள மகாராஜா விஜயம் செய்தபோதும், இந்தச் சம்பிரதாயம் விடாமல் அனுஷ்டிக்கப்பட்டது. அப்போது ரஸ்தாவிலே போகும் ஜனங்கள் கண்ணெல்லாம் ஒரே மண்ணாய்ப் போய்விட்டது. அவர்கள் புகார் செய்யவே, வங்க சர்க்காருக்கு எழுதியது கார்ப்பொரேஷன். நகரவாசிகளின் கண்களில் மண் விழும் என்பதற்காக, நீண்டகால ஐதிகத்தை நிறுத்த முடியுமா? சொற்ப மண்ணைப் பரப்பி, அதன் மேலே கொஞ்சம் ஜலத்தை வேணுமானால் தெளித்துவிடலாம் என்று பதிலளித்தது சர்க்கார். ஜலம் தெளித்துப் பயனில்லை என்று, கார்ப்பொரேஷன் எஞ்சினீர் அபிப்பிராயம் சொன்னார். தன்னால் ஜலம் தெளிக்க முடியாது என்று மறுபடியும் சர்க்காருக்கு எழுதியது கார்ப்பொரேஷன். எப்படியானாலும் மாமூலை நிறுத்த முடியாது என்று பதிலளித்தது சர்க்கார். கார்ப்பொரேஷன் மாத்திரம் விடுமா? இவ்விஷயத்தை ஒரு கமிட்டியிடம் ஒப்படைத் திருக்கிறது. இப்படியாகத்தானே இந்த மண் விவகாரம் இன்னும் முடியவில்லை. மாமூல் படுத்தும் பாட்டைப் பாருங்கள்!

தனவணிகர் கவலை

இந்தோ—சைனாவை ஜப்பான் விழுங்க முயல்கிறது என்ற செய்தியைக் கேட்டதும், பல தனவணிக நண்பர்கள் பெருங் கவலையடைவார்கள். தனவணிகர்களின் பணம் லட்சக் கணக்கில் அங்கே முடங்கிக் கிடக்கிறது. பல வருஷங்களாகவே அந்தப் பணம் இந் நாட்டுக்குத் திரும்பிவர முடியாமல் இடைஞ்சல்கள் செய்யப்பட்டு வந்தன. கடைசியாக சென்ற நவம்பரிலே இந்திய சர்க்காரும் இந்தோ-சைனா சர்க்காரும் இரு நாடுகளுக்கு மிடையே பரஸ்பர வியாபாரத் தடை விதித்துக்கொண்டன. இதனால், இந்நாட்டுப் பணம் அங்கேயும் அந்நாட்டுப் பணம் இங்கேயும் அமுங்கிவிட்டன.

இந்தோ—சைனாவில் உள்ள பிரஞ்சு சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் எவ்வித யுத்தமும் கிடையாது. அப்படியிருந்தும் பரஸ்பர சம்மதத்தின்மேல் மேற்கண்ட தடை செய்யப்பட்டுவிட்டது. இதனால், தனவணிகர் தங்களுடைய பணத்தைத் தங்கள் தாய்நாட்டுக்கு அனுப்ப முடியாமல் தவிக்கலானார்கள். சுமார் 50 லட்ச ரூபாய் அந்த நாட்டின் பணம் இங்கேயிருக்கிறது. அந்த அளவுக்காவது இந்தியரின் பணம் அங்கிருந்து இங்கே வர ஏற்பாடு செய்வது, இரு சர்க்கார்களுக்கும் கஷ்டமன்று. ஆயினும் இவ்விஷயத்தில் இந்திய சர்க்கார் முயற்சி யெடுக்கத் தவறிவிட்டது. இன்று ஜப்பான் கிலி வேறு வந்திருக்கிறது. தனவணிகர்களின் பணம் திரும்பி வர, இந்திய சர்க்கார் இப்போது என்ன ஏற்பாடு செய்யப் போகிறது?

யுத்த நிலைமை

ருஷியாவை ஜெர்மனி தாக்கினாலும் தாக்கியது, யுத்தத்துக்கு முன்னே ராஜ தந்திரிகளால் நிறைவேற்ற முடியாத தொரு காரியம் சாதிக்கப்பட்டுவிட்டது. பிரிட்டனுக்கும் ருஷியாவுக்கும் பரஸ்பர உதவி ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அவை ஜெர்மனியுடன் சமாதானம் செய்துகொள்வ தானால், தனித் தனியே செய்துகொள்வ தில்லை, கூட்டாகவே செய்துகொள்வது என்ற நிபந்தனைக்கும் உட்பட்டிருப்பது பாராட்டத் தக்கதாகும்.

ஸிரியாவில் பிரஞ்சு சர்க்கார், பிரிட்டனிடம் சரணாகதி செய்துவிட்டது. பிரிட்டனுக்கு இதுவொரு பெரிய வெற்றியாகும்.

யுத்தம் ஆரம்பித்தவுடனே, ஐஸ்லாந்தை, பிரிட்டன் ஆக்ரமித்துக் கொண்டது. இப்போது அமெரிக்க சேனையும் அங்கே வந்து, பிரிட்டனுடன் ஒத்துழைத்து, அந்தத் தீவைக் காக்கிறது. மெல்ல மெல்ல யுத்த களத்துக்கு அமெரிக்காவும் வந்து சேரப்போகிற குறியோ இது?

ஜப்பானில் மந்திரி சபை மாறுதல் ஏற்பட்டது. கோனேயிதான் இப்போதும் பிரதம மந்திரி. ஜெர்மனியோடு உறவைப் பலப்படுத்திக்கொண்ட ஜப்பானிய அயல் நாட்டு மந்திரி மட்சுவோகா புது மந்திரி சபையில் இல்லை. ஆகையால், அச்சு நாடுகளுடன் ஜப்பானின் உறவு குறையலாமோ என்று சிலநாள்முன் தோன்றியது. ஆனால், இந்தோ — சைனாவை ஜப்பான் மிரட்டுவதைக் காண்கையில், அந்த அபிப்பிராயத்துக்கு இடம் இல்லையென நிதர்சன மாகிறது.

மாஜி வைஸிராய் கதை

மாஜி இந்திய வைஸிராயான லார்டு ஹாலிபாக்ஸ், அமெரிக்காவுக்கு பிரிட்டிஷ் ஸ்தானீகராய்ப் போயிருக்கிறாரல்லவா? அங்கே ஹாலிவுட் நடிகை ஒருத்தி, இவரிடம் ஜவஹர்லால் நேருவின் சுயசரிதைப் புத்தகத்தை நீட்டினாள்? "எங்கே? இதில் உங்கள் கையெழுத்தைப் போட்டுத் தாருங்கள் பார்க்கலாம்" என்று கேட்டாள்.

லார்டு ஹாலிபாக்ஸும் அப்படியே அதில் தமது கையெழுத்தைப் போட்டுத் தந்தாராம். என்றாலும் "நேரு எழுதியிருப்பதை யெல்லாம் நீங்கள் நம்பி விடாதீர்கள்" என்று எச்சரித்தாராம்.

இந்தியாவைப் பற்றி, பிரிட்டிஷ் சர்க்கார் சொல்வதைத்தான் உலகம் நம்ப வேண்டுமோ? என் இந்தத் துடுக்குத் தனம்?

உல்லாசப் பேச்சு — ‘ரதி’

பண்டித மூல்சந்த் என்ற பிராம்மணர் தண்ணீர் குடிக்கையில் டம்ளரிலிருந்த சிறிய தவளை ஒன்றையும் விழுங்கிவிட்டாராம். காலம் ஆக ஆக, தவளை வயிற்றில் வளர்ந்து சங்கடத்தைக் கொடுத்தது. பிறகு ஆபரேஷன் செய்து அது எடுக்கப்பட்டு விட்டதாக மூல்டான் என்ற இடத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது.

உள்ளே போன தவளை உபத்திரவம் செய்ததற்கு, நவீன வைத்திய சாஸ்திரிகள் இந்தப் பரிகாரத்தைக் கையாண்டார்களாக்கும். இயற்கை வைத்தியர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று கேட்கிறார் நவநாகரிக மோஹம் பிடித்த ஒரு நண்பர். தவளை ஏன் சங்கடம் செய்தது? தண்ணீரில்லாத காரணத்தால்தான். ஆகையால், அவர்கள் இருபது முப்பது குடம் தண்ணீரை உள்ளேவிட்டு, தவளையை இயற்கையாய் விளையாடிக்கொண்டிருக்கச் செய் திருப்பார்கள் என்றே தோன்றுகிறது.

* *

ஜெர்மானியர், ரஷ்ய பாஷையைச் சீக்கிரம் கற்றுக்கொள்ள வேணுமென்று, ஜெர்மன் அதிகாரிகள் வற்புறுத்துகிறார்களாம்.

முதலில், “ஐயோ! போதும்! விட்டுவிடு!” என்னும் மூன்று வார்த்தைகளையும் தெரிந்துகொள்வது, எல்லா விஷயத்துக்கும் செளகர்யம்!

* *

லாகூரில் குழந்தைகள் பலர் சேர்ந்துகொண்டு ஒரு விளையாட்டுக் கலியாணம் நடத்தினார்கள். இந்த விளையாட்டுக் கலியாணம் விபரீதத்தில் முடிந்துவிட்டதாம். கலியாணத்தை நிஜம்போல் காட்டவேணும் என்பதற்காக, வாணங்களை உபயோகித்ததால், நெருப்புப் பற்றிக்கொண்டு, 8 குழந்தைகள் உள்பட, சுமார் 12 பேர் காயமடைந்தார்கள்.

பால்ய விவாகத்தை எதிர்ப்பவர்கள் “பார்த்தீர்களா, குழந்தைக் கலியாணத்தின் கஷ்டங்களை?” என்று கேட்டால், ஸநாதனிகள் இனி வாய்திறக்க முடியுமா?

* *

பழைய காலத்தில் எத்தனையோ யுத்தங்கள் நடந்திருக்கின்றன. அந்தச் சண்டைகளை நாம் பார்த்ததில்லை. எவ்வளவு ரசமான சம்பவங்கள் நிகழ்ந்தனவோ! ஆனால், இப்போது நடக்கும் யுத்தத்தில், எத்தனையோ வேடிக்கையான சம்பவங்கள் நடக்கின்றன. அவை பற்றி நிமிஷத்துக்கு நிமிஷம் நமக்குச் செய்திகளும் எட்டிக்கொண்டிருக்கின்றன.

சண்டை நடந்துகொண்டிருக்கையிலே, ஒரு ஜெர்மன் சிப்பாய் தூங்கிவிட்டானாம். “என்னடா தூங்குமூஞ்சி! இப்போது நாம் தூங்கினால், அப்புறம் ஒரே தூக்கத்தில் ஆழ்ந்துவிட வேண்டியதுதான். பின்பு விழித்துக்கொள்ள முடியவே முடியாது” என்று இரண்டு நண்பர்கள் அவனிடம் சொன்னார்களாம். ஆனால் அவனுக்கு அப்படி விசேஷ விபரீதம் எதுவும் ஏற்படவில்லை. ஊரிலுள்ள அதிகாரிகள் இந்த விஷயத்தைக் கேட்டு, அவனுடைய மாமனைப் பிடித்துச் சிறையில் போட்டுவிட்டார்களாம்! தென்னை மரத்தில் தேள் கொட்ட, பனை மரத்தில் நெறி கட்டிய கதைதான்!

* *

வடக்கே ஒரு கிராமத்தில் பூகம்பம் வராமலே, ஊர் ஜனங்கள், அதன் கஷ்டத்தையெல்லாம் அனுபவித்துவிட்டார்கள். அங்கேயுள்ள ஒரு ஜோஸியர், “இன்று ராத்திரி சரியாக 12 மணிக்குப் பூகம்பம் வரப்போகிறது” என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான்; திகில்கொண்ட கிராமவாசிகள், குழந்தை குட்டிகளுடன், வீடுகளிலிருந்து மைதானங்களுக்கு வந்துவிட்டார்கள். அன்றைக்குப் பலத்த மழை வேறு; இப்படிக் கொட்டும் வெள்ளத்தில், காரிருளில், மின்னல் இடிகளைச் சகித்துக்கொண்டு விடியுமளவும் காத்திருந்தார்களாம். ஆனால், பூகம்பம் வரவேயில்லை! விடிந்து ஜோஸ்யரைத் தேடிக்கொண்டு, யார் யார் கையில் என்னென்ன எடுத்துக்கொண்டு போனார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், நீருக்குத் தப்பித்து நெருப்பில் விழுந்த மாதிரி என்று சொல்லும் பழமொழிக்கு எதிர் மாறாக அல்லவா இருக்கிறது இவர்களது செய்கை!

* *

எதிரிக் கப்பலில் குண்டு விழுந்தது. கப்பல் கொஞ்சம் கொஞ்சமாக கடலில் முழுகிக்கொண்டிருக்கும் போதும், அதிலிருந்தவர்கள் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டுமே மூழ்கினார்கள்.

ஆடுவதும் அவன் புகழை-சித்தம்
பாடுவதும் அவன் புகழை

என்று நம்முடைய முன்னோர்கள் பாடியிருக்கிறார்கள். ஆகையால், அவர்களது ஆட்டமும் பாட்டுமெல்லாம் ஆண்டவனுக்கே அர்ப்பணமாகும் அல்லவா? கடைசிக் காலத்தில் எல்லோருக்கும் ஞானோதயம் உண்டாகி, நல்ல புத்தி ஏற்படும் என்று சொல்வது சரியாகத்தான் இருக்கிறது.

* *

தமிழ் நாட்டில் ஒரு கிராமத்தில், கோவிலில் வைத்திருந்த விக்கிரகத்தினால் பலன் கிடைக்கவில்லை என்பதால், அந்த விக்ரகத்தை ஊர்க்காரர்கள் தூக்கிச் சென்று ஆற்றங்கரையில் போட்டுவிட்டார்கள் என்கிறது ஒரு செய்தி. பத்ராசலத்து ஸ்ரீராமர் கோவிலுக்குச் சொந்தமான 400 தோலா நகைகள், யுத்தப் பத்திரம் வாங்குவதற்காக, ஏலம் போடப்பட்டன என்கிறது மற்றொரு தகவல்.

சாமிகளுக்கு மேலும் மேலும் சங்கடங்கள் வந்துகொண்டிருக்கின்றனவே என்று நாம் கவலைகொள்ள வேண்டியதில்லை. ‘கடவுள்தான் துணை’ என்று மனிதர்கள் சொல்லும்போது, ‘மனிதன்தான் துணை’ என்று கடவுளும் ஏன் சொல்லக்கூடாது?

—

நவீன ஸயின்ஸ் அதிசயங்களுள் ஒன்று 'டெலிவிஷன்' என்ற ஆகாசதரிசனி. அது எப்படி வேலை செய்கிறது என்பதை இங்கே காணலாம்.

மந்திரக் கண் — 'விஞ்ஞானி'

தங்களுடைய தபோவலிமையால், முன் காலத்து ரிஷிகள் ஏதோ 'ஞான திருஷ்டி' பெற்றிருந்ததாகவும், அதனால் எங்கேயோ கண் காணாத தூரத்தில் நடந்த, நடக்கும், நடக்கப் போகும் சம்பவங்களையெல்லாம் அறிந்து கொண்டதாகவும், புராணங்களிலே படித்திருக்கிறோம். ஆனால், தற்கால விஞ்ஞான அதிசயங்கள் அதையெல்லாம் மெய்ப்பித்து வருகின்றன. அதற்குத் தவம் வேண்டியதில்லை; நுட்பமான கருவிகளின் உதவிதான் வேண்டும்.

எங்கேயோ யாரோ பேசுகிற பேச்சும் பாடுகிற பாட்டும் நம் வீட்டிலே வந்து, நம் காதில் விழச் செய்யும் ரேடியோ இப்பொழுது சர்வ சாதாரணமாகிவிட்டது. இதேமாதிரி எங்கேயோ நடக்கும் காட்சிகளைத் தத்ரூபமாய் நம் கண்முன் கொணர்ந்து படமாய் நிறுத்தும் அற்புதமான புதியதொரு கருவியை அமைக்க, விஞ்ஞானிகள் தீவிரமாய் முயன்றார்கள். இப்போது அதில் ஓரளவு வெற்றியும் கிடைத்திருக்கிறது. இந்தக் கருவிக்கு 'டெலிவிஷன்' என்று ஆங்கிலத்திலே பெயர் வைத்திருக்கிறார்கள். 'டெலி' என்றால் தூரம் என்றும், 'விஷன்' என்றால் காட்சி என்றும் அர்த்தம். இதைத்தான் நான் 'மந்திரக் கண்,' என்று குறிப்பிட்டேன். ஆனால், இது திருப்திகரமான பெயரல்ல. ரேடியோவை எப்படி 'ஆகாச வசனி' என்கிறோமோ அதே போல, டெலிவிஷனை 'ஆகாச தரிசனி' என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். நாமும் அந்தப் பெயரை உபயோகிக்கலாம்.

டில்லியில் ஒரு கொட்டகையிலே, ஒரு நாடகம் நடப்பதாக வைத்துக்கொள்வோம். அதை அப்படியே நமது வீட்டிலே ஒரு சிறிய திரையில் சினிமாப் படம் போல வந்து விழச் செய்துவிடக் கூடியது இந்த 'ஆகாசதரிசனி'க் கருவிகள். டில்லியில் நடக்கும் நாடகத்தை சினிமாப் படம் போலப் பிடித்து, ஆகாச மார்க்கமாய், மின்சார அலைகளாய், எட்டுத் திசையிலும் பரப்பிவிடுகிறது ஒரு கருவி. அங்கங்கே உள்ளோர் அந்த ஆகாசப் படங்களைக் கிரகித்துக்கொள்ள, சிறிய கருவிகள் வைத்துக்கொள்ள வேண்டும். அப்படி வைத்துக் கொண்டிருப்போர் அனைவரும், அந்த டில்லிக் காட்சியைப் பார்த்துவிடலாம்.

ஆகவே, டில்லியிலே படத்தைப் பிடித்து அனுப்புவதற்கு, பெரிய 'அனுப்பும் கருவி' ஒன்று வேண்டும், அப்படி அனுப்பப்படும் படத்தை அங்கங்கே கிரகிக்க, சிறிய 'வரவேற்கும் கருவி'களும் வேண்டும். இந்தக் கருவிகளின் முக்கிய சூட்சுமங்களை இங்கே நாம் கவனிப்போம்.

அனுப்பும் கருவி இரண்டு வேலைகளைச் செய்கிறது. தன் முன்னிருக்கும் காட்சியின் ஒளிக்கிரணங்களை அது கிரகித்து, மின்சார அலைகளாய் மாற்றி, ஆகாசத்தில் பல திசைகளிலும் பரப்புகிறது. வரவேற்கும் கருவியும் இதே மாதிரி இரண்டு வேலைகளைச் செய்கிறது. ஆகாசத்தில் வரும் அந்த மின்சார அலைகளை இது கிரகித்து, பழையபடி ஒளிக்கிரணங்களாய் மாற்றி, திரையின்மீது வீசுகிறது.

அனுப்பும் கருவியின் முக்கிய அமைப்பை நாம் அறிந்து கொள்ளவேண்டும். 'போட்டோ எலெக்ட்ரிக் ஸெல்' என்ற ஒரு வித 'ஒளி மின்ஸாரக் கருவி' இருக்கிறது. இந்தக் கருவியில் விழும் ஒளிக் கதிர்களை இது மின்சார அலைகளாக மாற்றி விடுகிறது. ஆனால், அந்த மின்சார அலைகள் மிகவும் பலவீனமா யிருக்கு மாதலால், அவற்றைப் பெரிது படுத்த,



பிரிட்டிஷ் சங்கீத நடனங்களில் பிரபலமான ஸ்ரீ. ஜாக் புச்சானன் என்பவரை, ஆகாசதரிசனிக் கருவி ஒன்று படம் பிடிக்கிறது. அதை, ஆகாசதரிசனி ஆராய்ச்சியில் பிரசித்தி பெற்ற ஆங்கில விஞ்ஞானி ஸ்ரீ. ஜே. எல். பெயர்ட் கவனித்துக்கொண்டு நிற்கிறார்.

‘தெர்மியானிக் வால்வ்’ என்ற ‘உஷ்ண மின்சாரக் கருவி’ உபயோகிக்கப்படுகிறது.

அனுப்பும் கருவி இவ்விதம் அனுப்பும் அலைகளை, வரவேற்கும் கருவி எவ்வாறு மீண்டும் ஒளிக் கதிர்களாக மாற்றுகிறது? வரவேற்கும் கருவியில் ‘நியான்’ என்ற நூதன ‘காஸ்’ (ஆவி) அடங்கிய ஒரு குழாயை அமைத்து விடுகிறார்கள். இந்த நியான் குழாய் தான், வரும் மின்சார அலைகளுக்கு ஏற்ற ஒளிக் கதிர்களை விடுகிறது.

ஆனால், இதை யெல்லாம்விட மிக முக்கியமான நுட்பம் மற்றொரு விஷயமாகும். ‘போட்டோ எலக்ட்ரிக்ட் ஸெல்’ என்ற ஒளி மின்சாரக் கருவிதான் ஒளியை மின்சார மாக்கியனுப்பும் மந்திரக்கண் என்று கண்டீர்கள். ஆனால், இந்தக் கருவி எப்படிப் பட்டது? இதுவே முழுக்கண் ஆகிவிடுமோ? இல்லை. இதை முழுக் கண் ஆக்குவதற்காக, வேறு ஒரு தந்திரம் செய்யப்பட் டிருக்கிறது. அதை நாம் புரிந்து கொள்வதற்கு முன், நமது கருவிழியின் ஆச்சர்ய அமைப்பைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். நமது கருவிழியில் பல லட்சக் கணக்கான சிறு அணுக்கள் இருக்கின்றன.



படம் . I.

‘பி’ என்பது தான் ‘**நுணுக்குதல் தட்டு**’. ‘டி’ என்ற விளக்கின் ஒளிக்கதிர், ‘ஸி’ என்னும் பூதக் கண்ணாடி மூலம், ‘பி’ என்னும் தட்டிலுள்ள ஒரு துவாரத்தின் வழியாய், ‘ஏ’ என்ற உருவத்தின் மீது பட்டு, ‘இ’ என்ற ‘ஒளி மின்சாரக் கருவி’ யில் பிரதிபலிக்கிறது.

ஒவ்வொரு அணுவும் தனித் தனியாக வேலை செய்கிறது. எதிரே காணப்படும் காட்சியில் பல லட்சத்தில் ஒரு சிறு பின்னத்தையே ஒவ்வொரு அணுவும் தனித் தனியே கிரகித்து, மூளைக்கு அனுப்புகிறது. இப்படி அவை ஒவ்வொன்றும் தனித் தனியாக அனுப்பிய பல லட்சம் துண்டுகளையும் ஒன்று சேர்த்தே, ஒரு உருவத்தை மூளை கண்டு கொள்ளுகிறது. நமது கருவிழியிலுள்ள இந்தப் பல லட்சம் அணுக்களில் ஒரே ஒன்று எப்படிப்பட்டதோ அதே மாதிரியானதுதான், ‘போட்டோ எலக்ட்ரிக் ஸெல்’ என்ற ஒளி மின்சாரக் கருவியும். ஒரு குறிப்பிட்ட காட்சியின் ஒரே ஒரு மிகச் சிறு பகுதியைத்தான் ‘ஒளி மின்சாரக் கருவி’ கிரகிக்க முடியும். இந்தக் குறையை நிவர்த்திப் பதற்கு, விஞ்ஞானிகள் ஒரு யுக்தி செய்திருக்கிறார்கள்.

ஒரு காட்சியைப் பல கூறுகளாகப் பிரித்து அனுப்பும் முறைதான் அந்த யுக்தி. இந்த முறைக்கு ‘நுணுக்குதல்’ (ஸ்கானிங்) என்று பெயர் வழங்குகிறார்கள். 1-ஆவது படத்தைப் பாருங்கள். அதிலே வட்ட வடிவமான ஒரு தட்டு இருக்கிற தல்லவா? அந்தத் தட்டில் உள்ள ஒவ்வொரு புள்ளியும் ஒரு சிறு துவாரமாகும். இந்தத் துவாரங்கள் ஒவ்வொன்றும், ஒன்றைவிட ஒன்று சற்று உட்புறமாகத் தள்ளித் தள்ளி இருப்பதைக் கவனியுங்கள். தட்டு வெகுவேகமாகச் சுழன்று கொண்டே யிருக்கும். அப்போது ஒவ்வொரு சிறு துவாரமும் ஒன்றன்பின் ஒன்றாக மாறி மாறி விளக்கொளிக்கு நேரே வரும். தள்ளித் தள்ளியுள்ள இந்தத் துவாரங்களின் வழியாக வரும் ஒளிக் கிரணங்கள், எதிரே யுள்ள உருவத்தின்மீது பட்டுப் பிரதிபலித்து, கோடு கோடாக, ‘போட்டோ எலெக்ட்ரிக் ஸெல்’ என்ற ஒளி மின்சாரக் கருவியின் மீது விழுகின்றன. இப்படிப் பல புள்ளிக் கோடுகளாக வரும் ஒளிக் கதிர்களை, அந்தக் கருவி வெகு சுலபமாய்க் கிரகித்து, மின்சார அலைகளாக மாற்றி விடுகிறது.

லண்டன் அலெக்ஸாண்டிரியா அரண்மனையில் உள்ள ஆகாசவசனி ஸ்டுடியோ. இது யுத்தத்துக்கு முன் எடுக்கப்பட்ட போட்டோ. இடது பக்கத்திலுள்ள சிக்கலான சிறு கருவி, வலது பக்கம் நிகழும் நாடகக் காட்சியை, ஆகாசதரிசனிப் படமாகப் பிடிக்கிறது.

ஆனால், இருட்டிலே உள்ள ஓர் உருவத்தின் மீது, துளித் துளியாய் வெளிச்சத்தைச் செலுத்தித் தான் அதன் படத்தை எடுக்கமுடியும்; வேறு வழியில்லை யென்றால்,

லண்டனில் நான்கு வருஷங்களுக்கு முன், முதன் முதலாக ஒரு ஆகாசதரிசனிக் கட்சியைச் சிலர் வரவேற்றுப் பார்க்கிறார்கள். படம் வந்து விழும் திரை, இப்போது இன்னும் பெரிதாகியிருக்கிறது.

நல்ல பகல் வெளிச்சத்தில் உள்ள காட்சியை எப்படி எடுப்பது? பெய்ர்டு என்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி அதற்கொரு யுத்தி செய்தார். வெளிச்சத்தின் ஒரு செயலை, தலைகீழாய் மாற்றினாலும் அதே பலன் கிடைக்கும். ஆதலால், 1-ஆவது படத்திலுள்ளவாறே ஒரு நுணுக்கல் தட்டை அவர் வைத்தார். படம் பிடிக்க வேண்டிய உருவமும் முன் இடத்திலேயே இருக்கச் செய்தார். ஆனால், விளக்கு இருக்குமிடத்தில் ஒளி மின்சாரக் கருவியும், ஒளி மின்சாரக் கருவியிருக்குமிடத்தில் விளக்கும் இருக்குமாறு மாற்றிவைத்தார். 'ஸி' என்னுமிடத்திலுள்ள பூதக் கண்ணாடியை எடுத்துவிட்டு, நுணுக்கல் தட்டின் ஒவ்வொரு துவாரத்திலும் ஒரு பூதக் கண்ணாடியை அமைத்தார். இப்போது, நேரே உருவத்தின்மீது விளக்கொளி பூராவும் வீசியது. உருவத்தினின்றும் பிரதிபலித்த ஒளிக்கதிர்களை, நுணுக்கல் தட்டு, துளித் துளியாக வாங்கி, ஒளி மின்சாரக் கருவியில் வீசியது. பழைய மாதிரி பலனே ஏற்பட்டது. இயற்கை வெளிச்சத்திலும் செயற்கை வெளிசசத்திலும் உள்ள காட்சிகளையெல்லாம் ஆகாசதரிசனி மூலம் அனுப்ப, இந்த முறையால் சாத்திய மாயிற்று.

'**வ**ரவேற்கும் கருவி'யிலும் இதேமாதிரி ஏற்பாடுதான் செய்யப்பட்டிருக்கிறது. 2-ஆவது படத்தில் கண்டமாதிரி தட்டொன்று அதிலும் வைக்கப்பட்டிருக்கிறது. ஒளிக் கதிர்களைப் பல புள்ளிக் கோடுகளாகவே அது கிரகிக்கிறது. அந்தக் கோடுகள் 3-ஆவது படத்திலுள்ளவாறு பல வளைந்த கோடுகளாகவே திரையில் விழுகின்றன. அப்படி விழும் ஒளிக் கோடுகள்தான் உருவங்களாக அமைகின்றன. அது எப்படி என்று உங்களுக்குச் சந்தேகம் எழலாம். இந்தப் பத்திரிகையையே எடுத்துக் கொள்ளுங்கள். இதில் வெளியாகியிருக்கும் ஏதாவதொரு போட்டோப் படத்தைக் கூர்மையாய் உற்றுப் பாருங்கள். அந்தப் படம் முழுதும் பற்பல புள்ளிகளாயிருக்கக் காண்பீர்கள். புள்ளிகள் பற்பல விதமாய் நெருங்கியும் பிரிந்துமிருப்பதால்தான் உருவம் அமைகிறது. அதாவது பற்பல புள்ளிகளின் கூட்டமே உருவப் படமாகக் காட்சி தருகிறது. அதேமாதிரிதான் ஆகாசதரிசனியில், பல ஒளிக்கதிர்க் கோடுகளின் கூட்டமே படமாகக் காட்சியளித்துவிடுகிறது.

இப்போது உங்களுக்கு மற்றொரு சந்தேகம் உதிக்கக் கூடும். பத்திரிகையில் காணப்படும் போட்டோப் படங்களில் புள்ளிகளை ஏக காலத்தில் பார்க்கிறோம். ஆகாசதரிசனியில் அப்படியில்லையே! நுணுக்குதல் தட்டு சுழலும்போது, ஒன்றுக்குப் பின் ஒன்றாகத்தானே ஒளிக்கதிர்க் கோடுகள் வரும்; அப்படியிருக்க, எப்படி ஏககாலத்தில் முழுப் படத்தையும் பார்க்க முடியும்? இதுவும் நமது கண்ணின் ஆச்சர்ய இயல்பினால்தான் சாத்தியமாகிறது.



படம் II

நுணுக்குதல் தட்டு: 'ஸி' என்று குறிக்கப்பட்டவை சிறு துவாரங்கள். பி என்னுமிடத்தில் தான் ஒளி பாயும். **நுணுக்குதல் தட்**டின் முதல் துவாரமும் கடைசித் துவாரமும் சற்றுத் தள்ளியிருப்பதைக் கவனிக்கவும்.



படம் III

வரவேற்கும் கருவியின் திரையில் ஒளிக் கோடுகள் இம்மாதிரிதான் வந்து விழுகின்றன. நமது கண்ணுக்கு இந்தக் கோடுகளெல்லாம் சேர்ந்து படமாகக் காட்சி தரும்.

ஸினிமாவில் படம் ஆடுவதையும் ஓடுவதையும் பார்க்கிறோமே; அது எப்படிச் சாத்தியமாகிறது? உண்மையில், ஸினிமாப்படங்கள் ஆடவுமில்லை; ஓடவுமில்லை. ஒன்றன்பின் ஒன்றாகப் பல படங்கள் அதிவேகமாய் வந்து வந்து திரையில் விழுந்துவிட்டு மறைகின்றன. முன் படம் நமது கண்ணை விட்டு அகலுவதற்கு முன்னே, அடுத்த படம் வந்து விழுகிறது. இதனால் ஒரே படமே ஓடியாடுவ



யுத்தத்துக்கு முன், அலெக்சாண்டிரியா அரண்மனை முன்பு இருந்த ஆகாசதரிசனி நிலையம். அதன் கம்பிகள் வானளாவி நிற்பதைக் கவனியுங்கள். ஆனால், யுத்தம் ஆரம்பித்த பின், ஆகாசதரிசனிப் படம் பரப்புவதைத் தற்காலிகமாக நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

தாக நமது கண் மயங்குகிறது. இதன் காரணம் நமது கண்ணுக்குள்ள 'பார்வை நிலைப்பு' என்ற ஒரு விசேஷ குணமாகும். அதாவது, நம் கண்ணிலே தோன்றும் ஓர் உருவம் மறைந்த பிறகும் அரைக் கால் ஸெகண்டு நேரம் அந்த உருவம் கண்ணைவிட்டு அகலாமல் இருந்துவருகிறது. ஆகாசதரிசனியில் அதிவேகமாக ஒன்றன்பின் ஒன்றாய் விழும் பல ஒளிக் கோடுகளையும் ஒன்று சேர்த்து, நமது கண்கள் உருவத்தைக் கண்டுவிடுவதன் காரணம், கண்களுக்குள்ள 'பார்வை நிலைப்பு' என்ற இந்த விசேஷ குணமேயாகும்.

விஞ்ஞானத்தின் ஒரு புது அம்சமான இந்த ஆகாசதரிசனி ஆராய்ச்சியில், பிரிட்டன் உலகத்துக்கே முன் அணியில் நின்றது. அது இப்படி இருந்தது மிகவும் பொருத்தமாகும். ஏனெனில், ஆகாசதரிசனி பிறந்ததே பிரிட்டனில்தான். அதோடு, பிள்ளைப் பிராயத்திலிருந்தே இதனுடன் வெகு காலம் கஷ்டப்பட்டு, கடைசியில் இதை நன்கு அமைத்து உலகுக்குக் கொடுத்ததும் பிரிட்டன் தான். ஆகாசதரிசனியை முன்னுக்குக் கொண்டு வந்தது பிரிட்டிஷ் மேதாவித்தனத்துக்கு ஒரு பெரிய உதாரணமாகும் என்று கூறலாம்.

ஆகாசதரிசனி எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்காகப் பிற தேசத்தார்கள் பிரிட்டனுக்கு வந்ததில் ஆச்சரியமில்லை. அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி இவை தங்கள் நிபுணர்களை, பிரிட்டனுக்கு அனுப்பின. அவர்களுக்கு இது சம்பந்தமான எல்லாத் தகவல்களையும் பிரிட்டன் சொல்லிக் கொடுத்தது.

பிரிட்டன் இதில் கொண்டுள்ள முதல் ஸ்தானத்தை யுத்தம் முடிந்த பிறகும் வகிக்கும் என்றே நாம் நம்பலாம். ஜெர்மானியர்களும் இது சம்பந்தமாகக் கொஞ்சம் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். இருந்தாலும், பொது ஜனங்களுக்கு ஆகாசதரிசனியைப் பரப்பும் நிலைக்கு அவர்கள் வரவில்லை. அத்துடன் 1938-ஆம் ௵ செக்கோஸ்லோவேக்கியா நெருக்கடியிலிருந்து, ஜெர்மானியர் இவ்வாராய்ச்சியைக் கை விட்டு விட்டார்கள்.

யுத்தம் மூண்டபோது ஆகாசதரிசனி சம்பந்தமாக இருந்த முக்கியமான பிரச்சினை இதுதான் : அதாவது, படங்களை அதிக தூரம் பரப்ப முடியவில்லை. பெரிய பெரிய நகரங்களில் அங்கங்கே நிலையங்கள் அமைத்துக் கொண்டு, அந்தந்த நகரங்களுக்கு மட்டும் நிகழ்ச்சிகளைப் பரப்ப முடிந்தது. சண்டை முடிவதற்குள் விஞ்ஞான சாஸ்திரிகள் பல அபிவிருத்திகளைச் செய்து விடுவார்கள் என்று நாம் எதிர்க்கலாம். பிரிட்டிஷ் விஞ்ஞான சாஸ்திரிகள் இப்பொழுது முழு மனதுடன் யுத்தத்துக்காக உழைத்துக்கொண்டிருந்த போதிலும், அதேபோல, சமாதான காலத்திற்கான பிரச்சினைகளையும் இப்போதே ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

உண்மை தன் காலைப் பாதரட்சையில் மாட்டுவதற்குள், பொய் உலகையெல்லாம் சுற்றித் திரும்பி வந்துவிடும். —மார்க் ட்வெயின்.

கோவலனை வசியம் செய்து, கற்பிற் சிறந்த கண்ணகியோடு நாடு துறக்கச் செய்த விலைமகள் மாதவி. ஆனால், கோவலனும் கண்ணகியும் உயிர் துறந்த சோக முடிவுக்குப் பிறகு, அந்த மாதவி என்ன செய்தாள்? உங்களுக்குத் தெரியாதே? அப்படியானால் சீத்தலைச்சாத்தனாரின் கவி வர்ணனையைப் படியுங்கள்.

மாதவியின் உள்ளம்

(தமிழ்ப் புலவர் கு. மதுரை முதலியார்)

நாடு செழிக்க, காவிரிப்பூம் பட்டினத்தில் ஆண்டுதோறும் இந்திரனுக்குத் திருவிழா நடைபெற்றுவந்தது. அத்திருவிழாவில் மாதவி, மணிமேகலையுடன் வந்து, தன் ஆடல் பாடல்களால் மக்களை மகிழ்விப்பது வழக்கம். அக் காரிகையின் அழகையும் ஆடலையும் பாடலையும் கண்ணாரக் கண்டும் காது குளிரக் கேட்டும், இன்பக் கடலில் திளைக்கப் பலர் அங்கு வருவதுண்டு. ஓராண்டு அங்ஙனம் வந்த மக்கள், மாதவியையும் மணிமேகலையையும் காணாது கடுந்துயருற்றனர்.

மாதவியின் தாய் சித்திராபதி, தன் மகள் திருவிழாவில் கலந்துகொள்ளாமைபற்றிப் பெரிதும் வருந்தி, மாதவியின் தோழியாகிய வஸந்தமாலையை அழைத்து, "நங்காய், நீ மாதவியிடம் சென்று, அவள் திருவிழாவிற்கு வாராமை பற்றி ஊரார் அவளைப் பழிப்பதை எடுத்துரைத்து, எவ்விதத்திலேனும் அவள் திருவிழாவிற்கு வரும் வண்ணம் செய்வாய்" என்று கூறினாள்.

மாதவியின் இன்னுயிர்த் தோழியாகிய வஸந்தமாலைக்கும் மாதவியின் செயல் பிடிக்காமையால், எப்படியாவது அவளைத் தன் வழிக்குக் கொண்டுவந்து விட வேண்டும் என்று எண்ணி, அவள் மாதவியுறையும் மலர் மண்டபம் சென்றாள்; அவளது வாடிய மேனியைக் கண்டு உளம் வருந்திச் சிறிது நேரம் சிலைபோல் நின்றாள்; பின்னர் ஒருவாறு மனந்தேறி, மாதவியை நோக்கி, "அழகில் திருமகளெனத் திகழும் அணங்கே, உனது செயல் உன்னைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் நாணத்தைத் தருகின்றது. நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த கலைகளையெல்லாம் கற்றுத் தேர்ந்த நீ, குலத் தொழிலை விட்டுத் தவத் தொழிலை மேற்கொண்டது நன்றன்று என்று ஆன்றோர் அனைவரும் அறைகின்றனர்" என்று கண்ணீர் விட்டுக் கூறினாள்.

வஸந்தமாலையின் வாய் மொழி கேட்ட மாதவி கூறுகின்றாள் :

"என் அருமைக் காதலனாகிய கோவலன் உற்ற கடுந்துயர் கேட்டவுடனே, என் உயிர் என் உடலை விட்டு நீங்கியிருக்க வேண்டும். அங்ஙனம் அது நீங்காமையால், பெரியோர்களது புகழுரையையும் பெண்களுக்குரிய குணங்களுள் சிறந்து விளங்கும் நாணத்தையும் துறந்து நலமின்றி நிற்கின்றேன். ஆனால், பத்தினிப் பெண்டிரில் தலைசிறந்து நிற்போர், தம் காதலர் இறப்பின், மிக்க நெருப்பை மூட்டும் கொல்லனது உலைக்களத்தில் உள்ள துருத்தியின் மூக்கைப் போல் பெருமூச் செறிந்து உடனே தம் இன்னுயிர் ஈவர். அங்ஙனம் உயிர் நீங்கும் பேறு பெறாதவர், நன்னீர்ப் பொய்கையில் நீராடுவது போல், கொழுந்து விட்டெரியும் நெருப்பில் வீழ்ந்து தம் உயிரை விடுவர். அப்படியும் உயிர் விடத் துணியாதவர், மறுமையில் தம் அன்பரோடு உடனுறை வாழ்க்கைக்காகக் கைம்மை நோன்பை மேற்கொண்டு, தம் உடம்பை வருத்தி நாட்களைக் கழிப்பர். இவைகளெல்லாம் பத்தினிப் பெண்டிரின் செயல்கள். ஆனால், கற்பரசியாய் விளங்கும் கண்ணகியோ இத்திறத்தாளும் அல்லள். அவள் தன் கணவனுக்குற்ற கடுந்துயர் பொறாது, தனது மணமிக்க கூந்தல் பிடரியை மறைப்ப, கண்ணீரால் ஆடப்பெற்ற தன் இடமுலையை வலக்கையால் திருகி யெறிந்து, நெடுஞ்செழியன் என்னும் பாண்டியனது மதுரைமா நகரைத் தீக்கு இரையாக்கிய மாபெரும் பத்தினி. அத்தகைய கற்புத் தெய்வத்தின் மகள் மணிமேகலை. ஆகையால், அவளும் அருந்தவத் துறையில் பொருந்துவளே யல்லாது, எங்கள் குலத் தொழில் ஆகிய தீத்தொழிற் படாள்."

இவ்வண்ணம் தவத் துறையிலிருந்த மாதவி வஸந்தமாலைக்குக் கூறியதைச் சீத்தலைச்சாத்தனார் இவ்விதம் சித்தரிக்கிறார் :

'காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை
[யிழந்து
நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்.
காதலர் இறப்பின் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்(து) அகத்
[தடங்கா(து)
இன்னுயிர் ஈவர்; ஈயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி
[புகுவர்;
நளியெரி புகாஅர் ஆயின் அன்பரோ(டு)
உடனுறை வாழ்க்கைக்கு நோற்(று)
[உடம்படுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர்
[ஞாலத்(து).
அத்திறத் தாளும் அல்லள் எம் ஆயிழை.
கணவற் குற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீர் ஆடிய கதிரிள வனமுலை
திண்ணிதில் திருகித் தீயழற் பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்ல(து) யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற்
[படாஅள்.'

இங்கு நாம் மாதவியின் மனத் தூய்மையைக் காண்கின்றோம். அவள் தன்னை யிழிவு படுத்திய தன்மையையும் கண்ணகியின் கற்பைப் போற்றிய திறனையும் காண்போர்க்கு, அவளது பெருங்குணம் நன்கு புலனாம். அவள் மணிமேகலையைத் தன் மகள் என்று சொல்லாமல், கற்பினுக்கு அணியாய் விளங்கிய கண்ணகியின் மகள்

எனக் கழன்றதும் அவளையும் தவநெறிப் படுத்த நினைத்ததும் பெரிதும் போற்றற்பாலன.

பின்னும், மாதவி வஸந்தமாலையை அன்புடன் நோக்கி, "என் அருமைத் தோழியே, நான் இம் மாதவர் உறைவிடம் புகுந்து, ஈண்டுள்ள அறவண அடிகள் என்னும் பெரியாரது அடிமிசை வீழ்ந்து, என் காதலன் உற்ற கடுந்துயரத்தைக் கூறினேன். அவர் என் மன மாசு அகல என்னை நோக்கி,

'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன(து),
அற்றோர் உறுவது * * *'

எனச் சில பொன்மொழி கூறினர். அந்நாள் தொட்டு என் மனம் தவத் துறையில் ஆழ்ந்துவிட்டது. இனி என் மனத் துணிவை நம் ஆயத்தார்க்கும் என்னைப் பெற்றெடுத்த சித்திராபதிக்கும் செப்புவாய்" என்றாள்.

மாதவியின் மாணுரை கேட்ட வஸந்தமாலை, பெறலரும் மாமணியைப் பெருங்கடலில் இழந்தோர் போன்று, ஆற்றொணாத் துன்பக் கடலுள் ஆழ்ந்து செயலற்றுத் திரும்பினாள்.

நாய்களின் ரோமத்தைக் கொண்டு நெய்த துணிகள் பிரிட்டனில் தயாராகி வருகின்றனவாம். சென்ற ஐரோப்பிய யுத்தம் நடந்த 1914—1918 வருஷங்களில், ஸ்காட்லாந்தில் சில ஜனங்கள் நாய் ரோமக் கம்பளித் துணி தரிக்க ஆரம்பித்தார்கள். அதிலிருந்து சில குடும்பங்கள் வழக்கமாகவே அதை உடுத்தி வரலாயின. இந்த யுத்த காலத்தில், மார்க்கட்டுக்கும் அந்தத் துணி வரத்தொடங்கி விட்டது! நாய் ரோமத் துணி, மலிவிலும் கதகதப்பிலும் மற்றெல்லாக் கம்பளிகளையும் தோற்கடித்து விடுகிறதாம்.

ருஷ்யாவிலே செய்காவ்ஸ்கி என்ற ஒரு மனிதன் இருந்தானாம். அவனை யாராவது கையைப் பிடித்து எங்காவது அழைத்துக் கொண்டுபோனால், தன் தலையைக் கெட்டியாக ஒரு கையால் அமுக்கிக் கொண்டுதான் அவன் போவானாம். காரணம் என்ன தெரியுமோ? தன் தலை எங்கேயாவது பறந்து ஓடிப்போகுமோ என்று அவனுக்கு ஒரு பயம் எப்போதும் இருந்துகொண்டிருந்தது. இப்படி ஒரு பித்து!

மனிதப் பிறவிகளிலே சில விசித்திர முண்டு. ராமு அதில் ஒரு ரகம்.

செல்லக் 'குழந்தை'

(எஸ். விசாலாக்ஷி)

"ராமு! நீ ஏனப்பா 'பம்ப'டிக்கிறே?......எ லெட்சுமி! கொழந்தெ 'பம்ப'டிக்கிறான். நீ என்னடி பார்த்துண்டு நிக்கறே! துடைப்பத்தைப் போட்டுட்டுப் 'பம்ப'டிடி."

சீதாப்பாட்டி தன் பிள்ளையின் கை தேய்ந்துவிடப் போகிறதே என்று, வேலைக்காரியைக் கடிந்து கொள்ளுகிற காட்சி இது. இலட்சுமிக்கு இரண்டு குறையப் பத்து வயதாகிறது. 'குழந்தை' ராமுவுக்கு (முப்பத்தி) நாலு நிரம்பி, ஐந்தாம் வயது நடக்கிறது! இவன் வேலை செய்ய, அவள் சும்மா நிற்க, பாட்டி எப்படிச் சகிப்பாள்? அவள் கண்ணை உறுத்தாதா?

"ஏனம்மா! நான்தான் தண்ணீர் நிரப்பிக்கொண்டு குளிக்கிறேனே? காலையிலெழுந்து 'பம்பை' முன்னும் பின்னும் அசைப்பதால், உடம்புக்குப் பலம் வரும், அம்மா!" என்றான் ராமு. உடல் பயிற்சியின் அவசியத்தைக் குறித்து, அரைமணி நேரம் அவன் பிரசங்கம் செய்யலாம். ஆனால், சீதாப்பாட்டிக்குத் தன் செல்லக் குழந்தை ஒரு துரும்பையெடுத்து அப்பால் போடுவதுகூடச் சகிக்காது. தள்ளாத வயதில் (65-க்கு மேலாகிறது) தானேதான் கடைக்குப் போய் வருவாள். "என் பாட்டி! உங்கள் பிள்ளை கடைக்குப் போய் வரக் கூடாதா?" என்று யாராவது கேட்டுவிட்டால் போதும். "உங்களுக்கென்ன பேசுவதற்கு? பகலெல்லாம் வெள்ளைக்காரனிடம் கைகட்டிச் சேவகம் செய்துவிட்டு அலுத்து அசந்து வீட்டுக்கு வந்ததும் வாராததுமாய், 'உப்பில்லை' 'புளியில்லை' என்று வறுத்துக் கொட்டவேணுமா! என்னமோ பாவம்! உழைத்துக் கொண்டுவந்து கொட்டுகிறானே, அது போராதா? எனக்கென்ன கேடு, கழுதையைப் போல போய்ப் போய் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்று சரமாரியாகப் பொழிய ஆரம்பித்துவிடுவாள். இது வீட்டிலே.

ராமுவுக்கு, ஆபீசில் தினசரி நான்கு மணிக்குமேல் வேலை கிடையாது. ஆனால், காலை ஆறு மணிமுதல் இரவு பதினொரு மணிவரையில் அவனுக்கு ஓய்ச்சல் ஒழிவு கிடையாது. உட்காரக்கூட நேரமிராது. அவ்வளவு வேலை! அடுத்த தெரு சுப்பிரமணிய ஐயரின் பிள்ளையைக் காலேஜில் சேர்க்க வேண்டுமா? உடனே ராமு கிளம்பிவிடுவான். பட்டணத்தில் இருக்கும் அத்தனை கல்லூரிகளுக்கும் ஒவ்வொன்றாய் அலைந்து இடம் சம்பாதிக்க முயல்வதிலே தினசரி 6 மணி விகிதம் ஒரு வாரத்தைக் கழிப்பான். டாக்டர் கோமளாம்பாளின் தங்கை ஹைதராபாத்திலிருந்து உடம்பு அசௌக்கியமாய் வந்திருப்பதால், அவளைத் தகுந்த ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காகப் பல டாக்டர் நண்பர்களிடம் சிபார்சு தேடி அலைவதில், தினசரி மூன்று மணி விகிதம், நான்கு நாள் தீரும். குப்புசாமி ஐயங்காரின் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் சல்லிசாக வாங்கிக் கொடுப்பதற்காகப் புத்தகக் கடைகளுக்கு அலைவதற்கு, தினசரி ஒரு மணி விகிதம் ஐந்து நாட்கள் கழியும். இதெல்லாம் அவன் தாயாருக்குத் தெரியாது. தெரிந்தால், வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது என்று அவனுக்குக் கண்டிப்பான உத்தரவு போட்டுவிடுவாள்.

ராமுவுக்கு, பிச்சைக்காரரென்றால் பிடிக்காது. "நான் மாத்திரம் ஹிட்லராயிருந்தால், இந்தப் பிச்சைக்காரர்களையெல்லாம் முதலில் சுட்டுத் தள்ளிவிடுவேன்" என்று சௌரியம் பேசுவான். "இவர்களுக்கு உயிர் வாழ என்ன உரிமையிருக்கிறது? நல்ல திடகாத்திரர்களான உழைப்பாளிகளின் ஊதியத்தை, தர்மத்தின் பெயரால் இவர்கள் உறிஞ்சிவிட்டு, அவர்களை அரைப்பட்டினியாக்குகிறார்கள். இவர்களால் மனித சமூகத்தக்கு என்ன உபயோகம்? இந்த வாழ்வுக்குப் பிறகு சொர்க்கம் என்று ஒன்றிருந்தால், அப்பொழுது இந்தப் புண்ணியம் அங்கே வந்து தலைகாக்குமாம்! இந்த 'இழவு' வேதாந்தத்தால் தான், நம் நாடு இத்தகைய சீர்கேடான நிலைமையிலிருக்கிறது. பிச்சைக்காரர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் சோம்பேறிகள். இவர்களைச் சவுக்கடி கொடுத்து, வேலை செய்ய வைக்க வேண்டும். கையாலாகாத இதர முடங்களோ, இருந்து பயனில்லை. தாங்கள் நோய் வாய்ப்பட்டோ அங்கவீனர்களாகவோ கஷ்டப்படுவது போதாமல், காண்போர் மனதை வருத்தும் கோலத்

துடன், எங்கே பார்த்தாலும் இவர்கள் காட்சி பளிக்கிறார்கள். நாகரீகம் என்பதை என்ன வென்று உணர்ந்த எந்தத் துரைத்தனமும் இந்தக் கண்ணராவிக்கு இடங் கொடாது"— இப்படி அரைமணி நேரம் 'பிலுபிலு' என்று பொரிந்து விடுவான்.

ஆனால், இந்தப் பிரசங்கத்தை ஒருவாறு நிறுத்திவிட்டோ, முடித்து விட்டோ, அவன் வெளியே போகும் போது, அவனுக்குப் பின்னே சென்று பாருங்கள். வழியிலே ஏதாவது ஒரு பிச்சைக்காரனைக் கண்டவுடனே, போலீஸ் சேவகனைக் கண்ட கள்ளனைப் போல, ராமு 'திறுதிறு' என்று விழித்துக்கொண்டு, சுற்றுமுற்றும் நோக்குவான். தான் உங்களைக் காணாவிட்டால், உடனே அவனது கை சட்டைப் பைக்குள் மறையும். மறுகணம் காலணாவோ, அரை ரூபாயோ, எந்த நாணயம் அவன் கையில் சிக்கிற்றோ அது பிச்சைக்காரன் வசம் போய்ச் சேரும். அதன்பிறகு, தேள் கொட்டிய திருடனைப்போல் அந்த இடத்திலிருந்து அவசர அவசரமாக ராமு ஓடிவிடுவான். அவன் இந்த 'அக்ரம'த்தைச் செய்யும்போது, ஒரு சமயம் நீங்கள் அவனைப் பிடித்து விட்டீர்களானால், 'ஆடு திருடிய குறவனை'ப் போல விழிப்பான்.

பிறகு, ஒரு அசட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "இந்தப் பிச்சைக்காரனெல்லாம் அயோக்கியன்கள். வேணுமென்றே போகிற வழியில் பணத்தை இறைத்து வைப்பான்கள். நாம் ஏதோ 'பாவம்' என்று பணத்தை எடுத்து அவன்களிடம் கொடுத்தால், நம்முடைய ஔதார்யத்தைப் பார்த்து, பின்னால் வருகிறவர்கள் தங்களைப் பிசினாரிகள் என்று பிச்சைக்காரன்கள் எண்ணிவிடப் போகிறான்களே என்று பயந்து ஏதாவது காலணாப் போடுவார்கள். ஆனால், இந்தப் 'பாச்சா' என்னிடம் பலிக்குமா? நான் அவனுடைய பணத்தையே எடுத்து அவனுக்குத் தானம் பண்ணி விட்டேன்"- என்று இம்மாதிரி ஏதாவது உளறல் 'சமாதானம்' சொல்லுவான். சாதாரணமாக, அவனது குணம் எல்லோருக்கும் தெரியுமாகையால், யாரும் இந்தச் சமாதானத்தை ஊன்றிப் பார்த்து, இதன் குற்றங்குறைகளை ஆராய்ந்ததில்லை. காலணாக் கொடுத்துவிட்டு, கோடி கொடுத்ததுபோல் பாசாங்கு செய்வோர் நிறைந்த இந்நாளில், ராமு ஒரு அதிசயப் பிரகிருதி தானே?

பாவம்! அவன் மனதை அநேகர் அறியவில்லை. ஒவ்வொரு சமயத்தில் அசம்பாவிதமாக அகப்பட்டுக் கொண்டு விழிப்பான். வீட்டில் குடித்தனக்கார அம்மாமியின் மாட்டுப்பெண் கர்ப்பிணி. கதை கேட்பதற்காக, ராமுவின் தாயாரும் அம்மாமியும் கோவிலுக்குப் போயிருந்தார்கள். அகஸ்மாத்தாக வீட்டுக்கு வந்த ராமு, எட்டுமாத நிறை கர்ப்பிணி மிளகாய் இடிப்பதைக் கண்டு சகிக்காமல், அந்தப் பெண்ணிடமிருந்து பலவந்தமாக மிளகாயை வாங்கிக் கொண்டுபோய், மில்லில் அரைத்துக் கொண்டு வந்தான். இதற்குள் கதையிலிருந்து திரும்பி வந்த மாமியார் அளந்த வசைச்சொல்லுக்கு அளவேயில்லை. சாயங்காலம் தன் பிள்ளை வந்ததும், நேர்ந்த சம்பவத்தைப்பற்றி, எங்கெங்கே கூட்டவேண்டுமோ அங்கங்கே கூட்டியும் எங்கெங்கே குறைக்க வேண்டுமோ அங்கங்கே மழுப்பியும், சவிஸ்தாரமாகச் சொல்லி, தூபமும் போட்டு விட்டாள். இதைக் கேட்ட அந்த முரடனுக்குப் பிரமாத ஆவேசம் வந்து விட்டது. ராமுவின் சரீரத்திலிருக்கும் எலும்புகளையெல்லாம் ஆராய்ந்து எண்ணிப் பார்க்கப்போவதாக, அவன் வேறே பெரிய கூச்சலிட்டான். மறுநாள் அந்தக் குடித்தனம் காலியாயிற்று.

வீட்டில் விரலசைக்காத பிள்ளை ஊருக்கெல்லாம் உழைப்பது ஒரு விந்தையல்லவா?

ஓடிவரும் திருக்கோலம்

ஸ்பெயின் யுத்தத்தில் தளபதி பிராங்கோவுக்கு உதவியாக இதாலியத் தொண்டர்கள் ஏராளமாக வந்தார்கள் என்பது உலகப் பிரசித்தம்.

ஒரு நாள் தளபதி பிராங்கோவும் இதாலிய ஸ்தானீகரும் போர் முனையை ஒரு மாடியிலிருந்து ஜன்னல் வழியாய்க் கவனித்துக் கொண்டிருந்தார்களாம்.

அப்பொழுது வெளியே இதாலியக் கறுப்புச் சட்டை வீரர்கள் ஓட்டமாய் ஓடி வருவதைத் தளபதி பிராங்கோ கண்டார். "அடடா! அவர்கள், பின்னுக்கு அல்லவா ஓடிவருகிறார்கள்!" என்று அவர் கூச்சலிட்டார்.

அவரை இதாலிய ஸ்தானீகர் முறைத்துப் பார்த்து, "ஆமாம்; ஆனால், அவர்கள் எப்படி ஓடிவருகிறார்கள்? சிங்கம் மாதிரி அல்லவா ஓடி வருகிறார்கள்; அதைக் கவனியுங்கள்" என்றாராம்!

இப்படி ஓர் அச்சு விரோதத் தமாஷ் துணுக்கு.

சரணாகதிக் காட்சி

எதியோபியப் போர்க்களத்தில் பிரிட்டிஷ் படைகளிடம் ஒரு இதாலிய டாங்கிப் பட்டாளம் சரணடைந்த காட்சியை இப்படிக் கற்பனை செய்கிறார் ஒரு பிரிட்டிஷ் சித்திரக்காரர்.

காந்தி வாக்கு

நான் வெறும் மனோராஜ்யக்காரன் அல்ல. அனுபவ பூர்வமான லட்சியவாதியே ஆவேன். அஹிம்சா தர்மம் முற்றிலும் ரிஷிகளுக்கும் மகான்களுக்குமே உரியதல்ல. சாமான்ய மக்களுக்கும் உரியதுதான். விலங்கினத்துக்குப் பலாத்காரமே தர்மமாயிருக்கிறது. அதேபோல, மனிதனுக்கு அஹிம்சையே தர்மமாகும். விலங்கின் உள்ளே ஆத்மசக்தி உறங்கிக்கிடக்கிறது; ஆகையால், உடல் வலிமையையன்றி, வேறு தர்மம் எதனையும் அது அறியாது. மனிதனுடைய பெருமைக்கோ, அதனைவிட உயர்ந்ததொரு தர்மம் வேண்டும்— அதுதான் ஆத்மசக்தி.

தொண்டிலே 'கற்பு'

அநேக தேசியப் பிரச்னைகளையும் அவற்றின் பரிகாரங்களையும் பற்றிச் சிந்தித்து, நமது சக்தியைச் சிதறடிக்கலாகாது. ஒரு நோயாளி, பற்பல மருந்துகளை ஏககாலத்தில் பரீட்சித்துப் பார்ப்பானானால், மாண்டுதான் போவான். ஒரு வைத்தியன் பற்பல சிகிச்சைகளை ஒரே காலத்தில் ஒரு நோயாளியிடம் பரீட்சித்துப்பார்ப்பானானால், மதிப்பிழந்த போலியாகி விடுவான். வாழ்விலே கற்பு எவ்வளவு அவசியமோ அவ்வளவு 'கற்பு' வேலையிலும் வேண்டும். எவ்விதத்திலேனும் மனத்தைச் சிதறவிடுவது கெடுதலே யாகும்.

'சுயராஜ்ய'த்தில் போர்வீரர்

எனது தற்போதைய சுயராஜ்யத்தில், (ஆயுதந் தாங்கிய) போர் வீரர்களுக்கு இடமுண்டு. நமது தேச ஜனங்கள் பூராவையும் நிராயுதபாணிகளாக்கி, அதன் பலனாய் ஆண்மையிழக்கச் செய்தது பிரிட்டிஷாரின் மிகப் பெரும் குற்றமென்று நான் சொல்லியிருக்கிறேன். சர்வ கார்யங்களுக்கும் அஹிம்சா தர்மத்தைக் கைக்கொள்ளவேண்டும் என்று தேசத்துக்கு உபதேசிக்கும் சக்தி எனக்கு இல்லை. நமது சுதந்தரத்தைச் சம்பாதிப்பதற்கு மட்டும்தான் அஹிம்சையை நான் உபதேசிக்கிறேன். ஆதலால், சர்வதேச விவகாரங்களை அஹிம்சா முறைகளால் தீர்த்துக் கொள்வதெப்படி என்று தேசம் வழிகாட்ட வேண்டுமென்று நான் உபதேசிப்பதாகவும் கொள்ளலாம்.

இயந்திரமே கூடாதா?

ராட்டினமே ஓர் இயந்திரம்தான்; பல் குத்தும் குச்சிகூட ஓர் இயந்திரந்தான். இயந்திரமே கூடாது என்று நான் ஆட்சேபிக்கவில்லை; எதற்கெடுத்தாலும் இயந்திரம் வேண்டுமென்னும் பித்தைத்தான் ஆட்சேபிக்கிறேன். வேலை செய்யும் சிரமத்தைக் குறைக்கக் கூடிய இயந்திரம் வேண்டுமென்ற மோகம் உலகில் இப்போது வலுத்திருக்கிறது. 'வேலைசெய்யும் சிரமத்தை' மனிதர்கள் மேலும் மேலும் குறைத்துக் கொண்டே போகிறார்கள்; அதனால், ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலையில்லாது போய்த் தெருவிலே அலைந்து பட்டினியால் மாய்கிறார்கள்.

நேரத்தையும் வேலை செய்யும் சிரமத்தையும் மனிதசமூகத்தில் ஒரு சிறு பகுதிக்குமட்டில் மிகுத்துத் தர, நான் விரும்பவில்லை; சகலருக்கும் மிகுத்துத் தர வேண்டுமென்பதே என் விருப்பம். ஒரு சிலரது கையிலே செல்வம் குவியலாகாது; சகல ஜனங்களுக்கும் செல்வம் கிடைக்கவேண்டும். இன்று இயந்திரம் என்ன செய்கிறதென்றால், கோடிக்கணக்கான ஜனங்களின் முதுகிலே ஒரு சிலர் ஏறி உட்கார்ந்து சவாரி செய்யத்தான் உதவுகிறது. வேலைச் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்ற பரோபகார ஆசையால், மெஷின்கள் வரவில்லை; பேராசையால்தான் அவை தோன்றியிருக்கின்றன. இந்த நிலைமைகளை எதிர்த்தே, என் முழுப் பலத்தோடும், நான் போராடிக் கொண்டிருக்கிறேன்.

தேசீயக் கொடி

கொடியென்பது சகல தேசங்களுக்கும் அவசியமானதாகும். கோடிக்கணக்கானவர், அதற்காக மரித்திருக்கிறார்கள். அது ஒரு விதமான 'விக்ரக வணக்கம்' தான். அதை அழிப்பது பாவமாகும். ஏனெனில், கொடியானது ஒரு லட்சியத்தின் சின்னமாக விளங்குகிறது. யூனியன் ஜாக்கைப் பிரித்தால், ஆங்கிலேயர்களின் இதயத்திலே உண்டாகும் உயர்ந்த உணர்ச்சிகளின் பலத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. நட்சத்திரங்களும் கோடுகளுமிட்ட கொடி, அமெரிக்கருக்குப் பிரமாதமான உணர்ச்சியை உண்டாக்குகிறது. நட்சத்திரமும் பிறையும் தாங்கிய கொடியைக் கண்டால், இஸ்லாத்தின் சிறந்த வீரம் பொங்கும். இந்தியாவைத் தம் தாய்நாடாய்ப் பெற்ற ஹிந்துக்களும் முஸ்லீம்களும் கிறிஸ்தவரும் யூதரும் பார்ஸிகளும் பிறரும் அடங்கிய இந்தியராகிய நமக்கும் ஒரு பொதுக் கொடி வேண்டும்; அதற்காக, நாம் வாழவும் உயிர்விடவும் வேண்டும்.

குப்பையிலே வீசியெறிகிறோமே வாழைப் பழத்தோல், இதைக் கொண்டு செயற்கையான ஒரு வகைச் சணல் செய்யும் முறையை ஜப்பானியர் கண்டு பிடித்திருக்கிறார்கள். வருஷம் ஒன்றுக்கு 40-லட்சம் பவுண்டு சணல் இனி இப்படி வாழைப்பழத் தோலிலிருந்து தயார் ஆகுமாம்.

"ஈசுவரன், குரு, பக்தர், இவர்களுடைய அருள் இருந்தாலுங்கூட இன்னொரு அருள் இல்லையாகில் ஜீவன் நாசமடையும்." மேற்கூறிய மூவகை அருளையும் ஒருவன் பெற்றபோதிலும், தனது தனத்தின் அருளைப் பெறாவிட்டால், அதாவது தான் முக்தியடைய வேண்டுமென்ற ஆசை அதற்கு இல்லாவிட்டால் அவை பயனைத் தரமாட்டா.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.



P. S. G. சாமான்கள் உயர்தர உலோகங்களைக் கொண்டு, நவீன சாதனங்கள் மிகுந்த தொழிற்சாலையில் சிறந்த வேலைப்பாட்டுடன் செய்யப்படுவதால், அவைகளின் சிறப்பு விற்பனையாளர்களால் மட்டுமின்றி, விவசாயிகளாலும், மற்றும் அவற்றை உபயோகித்தவர்களாலும், தேசம் முழுவதும் பரவி வருகிறது.







தயார் செய்பவை

விவசாயக் கருவிகள்	டெக்ஸ்டைல் இயந்திரங்கள்
விவசாய இயந்திரங்கள்	வீட்டுச் சாமான்கள்

நாங்கள் தயார் செய்பவைகளின் ஜாபிதாவிற்கும், விபரங்களுக்கும் எழுதுங்கள்.

விற்பனை ஸ்தலங்கள் :—

(1) கார்டன் உட்ராப் & கோ., (மதராஸ்) லிமிடெட், தபால் பெட்டி நெ. 42 (கிளை ஆபீஸ்கள் : விசாகபட்டணம், விஜயநகரம், காகிநாடா & பெஜவாடா), மதராஸ். (2) V. குருசாமி, சைதாப்பேட்டை, மதராஸ். (3) ஜெனரல் & மெஷினெரி கம்பெனி, ஆஸ்மானியா பில்டிங்ஸ், ஸ்ரீ நரசிம்ம ராஜா ரோடு, பங்களூர். (4) வேலு & கோ., அருணாசல ஆசாரி வீதி, சேலம். (5) நியோ எலெக்டிரிக் சர்வீஸ், திருவண்ணாமலை. (6) S. ராமநாத ஐயர், தென்காசி. (7) K. L. சங்கம நாயுடு, மகாலட்சுமி விலாஸ் ஷோரூம்ஸ், தேனி. (8) R. M. S. ராமசாமி நாயக், அருப்புக்கோட்டை. (9) P. S. G. C. I. கிளை ஆபீஸ், தெற்கு மாசி வீதி, மதுரை. (10) P. S. G. C. I. கிளை ஆபீஸ், 113, தளி ரோடு, உடுமலைப்பேட்டை. (11) P. S. G. C. I. கிளை ஆபீஸ், பாண்டி ரோடு, விழுப்புரம். (12) லக்ஷ்யன் டெக்ஸ்டைல் இஞ்சினியரிங் கார்பரேஷன், லா பிரோஷா மெத்தா ரோடு, பம்பாய்.

சன்யாசி

தமிழ்
சமூகப் படம்

ஜுபிடர் பிக்சர்ஸ் (புதுக்கோட்டை)
9, வாசு தெரு, கீழ்ப்பாக்கம், மதராஸ்

அவன் யுத்தகளத்துக்குப் புறப்படுகிறான். அப்போது முதல் முத்தம். அடுத்த முத்தம் எங்கே, எப்போது?

இன்னொரு முத்தம்

—('ஆனந்தன்')

அவன் உயிர்; அவள் உடல். தழுவிய பார்பு பிரியவில்லை; போர் முரசம் அழைக்கிறது; நெஞ்சு துடிக்கிறது; கண்ணீர் வடிக்கின்றனர்.

"வீரப்பா, நானும் வருகிறேன்."

"கண்ணாத்தா,........இரு வீட்டுடன்."

"நீ இல்லாமல் எப்படியிருப்பேன்?"

"பகைவரை வென்று வருகிறேன்........முரசம் அழைக்கிறது; தாமதித்தால் சொல்லுக் கிடமாகும். விடை கொடு."

"வீரப்பா, ஒரு முத்தம்."

"கண்ணாத்தா....இந்தா."

"இன்னொரு முத்தம்."

"திரும்பிவந்து."

* *

மின் இருட்டு; இடி முழக்கம்; காற்று வீசுகிறது; புலி நரிகூடத் தலை காட்டவில்லை; காட்டுவழியே வீரப்பன் நடக்கிறான்; காட்டிருளை வாளால் வீசுகிறான். மிதி 'கிறிச், கிறிச்' என்று தாளம் போடுகிறது; வீரப்பனுக்கு மெல்லப் பாட்டுக் கிளம்புகிறது:

"வீரம் பெருகுதடீ—வாள்
வீசிச் சுழலுதடீ!
காரம் பெருகுதடீ—பகைவரைக்
காட்டடீ வீராயி!"

திடீரென்று தீவட்டி வெளிச்சம். நூறு வாள்வீரர் வருகின்றனர். வீரப்பன் அவர்களுடன் சேர்கிறான். எல்லாரும் அடர்ந்த காட்டுக்குள் சென்று மறைகின்றனர். இவர்களே சிவகங்கைச் சின்ன மருதுவின் வீரர்; கும்பினிக் காரருடன் போர்புரிபவர்.

கும்பினிக்காரர் திருமயத்தில் வந்திறங்கினர். இனி அங்கே நடப்பதைக் காண்போம்.

II

"காப்டன் ஸ்மித்!"

"ஹல்லோ!"

"ஸர்தார் கண்ணையன் எங்கே!"

"கிழக்கே, சத்தம் கேட்டது; நூறு சிப்பாய்களுடன் சென்றார்."

"இங்கே உஷார்; நான் இருபது வீரரை அழைத்துச் செல்கிறேன். கொள்ளைக்காரரை இன்று வளைத்துப் பிடிப்போம்."

'பட், பட்' என்று குதிரை நடக்கிறது; அஞ்ஞு துரை செல்கிறார். அவரே கும்பினிப் படையின் தளகர்த்தர்.

திருமயம் டெப்போவில் வீரர் உறங்குகின்றனர்...........காப்டன் ஸ்மித் அங்கு மிங்கும் ரோந்தடித்து வந்து, துப்பாக்கியை ஊன்றி உட்



'கிளம்பு வீரப்பா......'

கார்ந்து, அப்படியே கண் மயங்குகிறான்.

* *

நள்ளிரவு ; காற்று அலறுகிறது ; அதைக் குறட்டைகள் துளைக்கின்றன. இனிப் பயமில்லை என்று வீரர் உறங்குகின்றனர். விதி அவர்களை உஷார்ப் படுத்துகிறது ; ஒரு சலசலப்பு ; கலகலப்பு....... "வீசு, வீசு" என்ற சத்தம்....... பிறகு........"ஹா! ஐயோ! செத்தேன்! போர் போர், பகைவர் ....!" இப்படிக் குரல்கள் புறப்படுமுன், பலர் வெட்டுண்டனர் ; கோட்டை கொள்ளை போயிற்று.

"போதும், திரும்புவோம்" என்றான் சின்னமருது ; வீரர் வெற்றி முழக்கத்துடன் திரும்பினர் ; திருமயம் கோட்டை அல்லோல கல்லோலப்பட்டது. காப்டன் ஸ்மித் குதிரையேறி, ஸர்தார் கண்ணையனைத் தேடிச் சென்றான்.

வந்துவிட்டான் கண்ணையன்! "வளை, அடி, பிடி, உதை, குத்து, வெட்டு........!" என்று படையை ஏவினான். வலுத்த சண்டை நடந்தது ; அதற்குள் அஞ்ஞு துரையும் வேகமாக வந்து, 'டாம், டாம்' என்று துப்பாக்கியால் பகைவருக்குப் பதில் சொன்னார். சின்ன மருதுவின் பக்கம் ஒரு குண்டு வருகிறது...."மகராசா!" என்று அவரைப் பிடித்து ஒதுக்கினான் வீரப்பன். மருது தப்பினான் ; வீரப்பனின் வலது காலில் குண்டு பட்டது ; பகைவர் அவனை வளைத்தனர் ; வீரப்பன் தனது வாளைச் சுழற்றி, அவர்களைத் தன்கிட்ட வராதபடி செய்தான். அவன் வீரத்தைக் கண்டு, அஞ்ஞு துரையே வியந்தார். பத்துத் துப்பாக்கிகள் அவனைச் சூழ்ந்தன. அப்போதும் வீரப்பன் வாளை விடவில்லை ; இருபது பேர் அவனைப் பிடித்துக் கட்டி, செந்தூக்காகத் தூக்கிச் சென்றனர்.

வீரப்பன் திருமயம் கோட்டையில் சிறைப்பட்டான். கும்பினிப் படைக்குள் இச்சம்பவம் ஒரு திருநாள் போலானது. "வீரப்பன பிடிபட்டான் ; இனி மருது சகோதரர் கை யேறாது" என்று சர்தார் கண்ணையன் அஞ்ஞு துரைக்கு உறுதி கூறினான். சிறைக்குப் பலமான காவல் வைத்தான்.

கருவக்காட்டில் மருது சகோதரர் கூடி ஏதோ யோசிக்கிறார்கள். அக்கூட்டத்தில் கண்ணாத்தா காண்கிறாள்.

* *

'மருது சகோதரரைப் பிடிக்கப் போகிறோம்' என்று நம்பிக்கையுடன் ஸர்தார் கண்ணையன் ஒரு நாற்காலியில் சாய்ந்து கனவு காண்கிறான். அச்சமயம் ஒரு இளம் வீரன் வருகிறான் ; அவன் கை வாள் 'போர், போர்' என்று துடிக்கிறது.

"யார் நீ?"

"வீரன்"

"பெயர்"

"வேலு."

"காரியம்?"

"படையில் சேரவேண்டும்."

"என்ன வேலை செய்வாய்?"

"இரவில் காவல் காப்பேன் ; பகலில் வாட்பணி செய்வேன்."

கண்ணையன் தொண்டைமான் சேனைத் தலைவன். தன்னிடம் வந்து இவ்வாறு பேசிய வாலிபனின் பேச்சும் பார்வையும் கண்ணையனைக் கவர்கின்றன. தொண்டைமான் படையில் வேலுவைச் சேர்க்கிறான் ; இரவில் கைதிகளை வேலு காக்கிறான்.

III

மையிருட்டு ; முகாம் உறங்குகிறது ; வேலு சிறைக்காவல் புரிகிறான். ஒரு சிறையில் மட்டும் புலப்பம் கேட்கிறது : "உயிர் இருந்தும் மருதப்பனுக்கு உதவாமல், இப்படிக் கூட்டுக்கிளி யானேனே....கால் காயமும் தீர்ந்தது ; உள்ளம் துடிக்கிறது ; வீர வெற்றியுடன் வீடுசேர நினைத்தேன் ; இப்படியானதே ; கண்ணாத்தா இன்னொரு முத்தத்திற்காக நீ காத்திருப்பாயே...."

இப்படிப் புலம்பிய வண்ணம் வீரப்பன் கொட்டுக் கொட்டென்று விழித்திருந்தான். அச்சமயம் சிறைக் கதவு மெல்லத் திறந்தது.

"யாரது?"

"நான்தான்?"

"இந்த நிசி வேளையில் கதவைத் திறப்பதில்லையே?"

"இதுவே நல்லவேளை. உனக்கு விடுதலை ; கிளம்பு, வீரப்பா...."

"ஆ கண்ணாத்தா! எப்படி வந்தாய்?"

"கதை பிறகு பேசலாம் ; கிளம்பு."

வேலு ஆண்வேடம் பூண்ட கண்ணாத்தா தான்!

ஒரு தலையணையில் கம்பளியைப் போர்த்து, இருவரும் வெளியே வந்தனர்.

"பூனைபோல் நடந்துவா" என்றாள் கண்ணாத்தா.

"கண்ணாத்தா, நான் வீரன். பேடிபோல் ஓடமாட்டேன். கொடு இப்படி வாளை......."

"வீரப்பா, அதோ நமது படை வருகிறது..........கலந்துகொண்டு ....பிறகு அதெல்லாம்........"

வந்தது மருது சேனை ; வீரப்பனும் கண்ணாத்தாளும் அதில் கலந்து கொண்டனர் ; திருமயம் கோட்டையில் மறுபடியும் ரகளை ; போர் ; கடும்போர்! கும்பினிப் பட்டாளம் எழுந்து பகைவரைச் சுட்டுத் தள்ளியது ; பலர் தப்பி யோடினர். தொண்டைமான் படை துரத்தியது. சிலர் போராடினர். அதோ ஒரு வீரன் வாளைச் சுழற்றிச் சுழற்றி, எதிரிகளை வீர சொர்க்கத்துக்கு அனுப்புகிறான். அவனே வீரப்பன் ; அவனுடன் போர் புரியும் வாலிபனை ஸர்தார் பரம துரோகி என்று குறிவைத்துச் சுட்டான். வாலிபனைக் காக்க வீரப்பன் பாய்ந்தான் ; அதற்குள் ஒரு குண்டு அவன் மார்பிலே பாய்ந்துவிட்டது ; இன்னொரு குண்டு வாலிபனின் இதயத்தைப் பிளந்தது. இருவரும் செயலற்று விழுந்தார்கள்.

உயிர் துடிக்கிறது.

"வீரப்பா....முத்தம்."

"கண்ணாத்தா, இந்தா அந்த இன்னொரு முத்தம்!"

அதுவே காதலின் கடைசி முததிரை.

காலைக் காட்சி

கங்கு லொழிந்ததடி—இனிய
கான மொலிக்குது கேள்
எங்ஙனே பார்த்தாலும்—புதிதோர்
எழில் மிகுந்ததடி

ஓங்கி உயர்ந்தமலை—அதன்மேல்
உன்னதப் பொற்சிகரம்
ஏங்கிய செங்கதிர்கள்— நுனியை
ஏறிப் பிடிப்பதைப் பார்

மடி சுரந்திடவே—சதங்கை
மணி யொலித்திடவே
அடி தவறாமல்—பசுக்கள்
ஆடி வருவது பார்

இங்கொரு ஆண்காகம்—தனது
இனமழைக்குது பார்
அங்கொரு வெள்ளைப் புறா—துணையோ
டாசைகள் பேசுது பார்

புல்லினில் நின்றமுத்து—பசிய
பொன்னிறம் காட்டுது பார்
நெல்லு வயல்க ளெலாம்—நம்மையே
நேடி யழைப்பது பார்

பொன்னொளி வீசிடுவோன்—உயிர்க்குப்
புத்துயிர் தந்திடுவோன்
இன்னொலி செய்துவரும்—பொருனை
எழில் பெருக்க வந்தான்

பட்டாணிப் பெண்ணெனவே—கமலம்
எட்டி நகைக்குதகைக்
'கட்டாணி முத்தே' யென்று—கிரணம்
கட்டித் தழுவுது பார்

நந்த வனத்துமலர்—செடியில்
நர்த்தனமாடுது பார்
கந்தமும் காட்சிகளும்—இறைவன்
கைத்திறன் காட்டுமடி

—'தாராபதி'

வேதாந்த விசாரணை:

கனவுலகம் —

(ஸர்ஜன் ரியர் அட்மிரல் ஸி. எம். பீட்னெல்)

கனவுகள் காணும்பொழுது, நமது உயர்தரமான மனோ சக்திகள் ஒதுங்கிக் கிடக்கின்றன. கனவின் நடத்தை மகா விசித்திரமா யிருக்கிறது என்று சகலரும் ஒப்புக் கொள்ளுவார்கள். பிரத்தியட்ச உலகத்திலிருந்து, கனவுலகம் உண்மையிலேயே மாறுபட்டது. பிரத்யட்ச உலகத்தில், ஒரு மனிதனின் புலன்களுக்கும் சுற்றுப் பொருள்களுக்கும் நல்ல தொடர்பு இருக்கிறது. கனவுகளின் போதோ, வெளி உலகம் பெரிதும் அடைபட்டு விடுகிறது; உடம்பின் பல அங்கங்களையும் மூடி மறைத்திருக்கும் சர்மமும் ஜீவ அணுக்களுமே சுற்றுப் பொருள்களின் எல்லையாகி விடுகின்றன. விரோதமான சுற்றுப்பொருள்களைத் தோற்கடிக்கவே, பிரக்ஞையோ டிருக்கும் போதெல்லாம், மனிதன் பெரிதும் முயற்சித்துக்கொண் டிருக்கிறான். இந்தப் போராட்டம் கனவுகளின் போது குறைகிறது; கனவற்ற தூக்கத்தின் பொழுதோ, இன்னும் குறைந்துவிடுகிறது.

கனவுகளின் போது, அதிலும் முக்கியமாக ஸ்பஷ்டமான பயங்காக் கனவுகளின் போது, மனதின் உயர்தர சக்திகளான கவனம், அறிவு, ஆராய்ச்சி, தீர்மானம் முதலியவை யெல்லாம் உருச்சிதைந்த கற்பனைகளால் அமுக்கிவிடப்படுகின்றன. பிரக்ஞைக் கெட்டாமல் உள்ளத்துக்குள்ளே ஒளிந்திருக்கும் கோரக் கற்பனைகள் வெளியே பாய்ந்தோடி வருகின்றன; வந்து அராஜகக் குழப்பமும் கலவரமும் செய்கின்றன. கனவு நிலையானது, பிரக்ஞைக்கும் பிரக்ஞை யின்மைக்கும் இடைப்பட்டதோர் அராஜக உலகமாகும். மூளையின் பற்பல பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று கொண்ட உறவு, கனவிலே குறைந்துவிடுகிறது.

கனவுகளின் போது எதேச்சையாக வந்து கூத்தாடும் கற்பனைத் துணுக்குகள், சிலபோது மிகப் பொருத்தமாக ஒடியாடுகின்றன. பின்னால் நாம் விழிப்படையும் போது, "நான் கனவு கண்டேனா? அல்லது அது நிஜமாகவேதான் நடந்ததா?" என்று நமக்குச் சந்தேகம் உண்டாகி விடுகிறது. ஒரு சீன வேதாந்தி, தாம் ஒரு பட்டுப் பூச்சியா யிருந்ததாக, ஒரு சமயம் கனவு கண்டார். அதன்பின் அவரது வாழ்க்கை பூராவும் அவருக்கொரு பிரமாதமான சந்தேகம் உண்டாகிவிட்டது. தாம் இன்னும் மனிதனாய்க் கனவு கண்டுகொண் டிருக்கும் ஒரு பட்டுப் பூச்சியா, அல்லது அன்று பட்டுப்பூச்சியாய்க் கனவு கண்டவொரு மனிதன்தானா என்பதே அவரது சந்தேகம்.

கனவின் அராஜகக் குழப்பத்திலிருந்து தெளிவு பிறந்த பல உதாரணங்கள் உண்டு: மறந்த பெயரோ காட்சியோ ஞாபகத்துக்கு வந்திருக்கிறது; இனிய பாட்டு கட்டப்பட் டிருக்கிறது; உயர்ந்த தத்துவம் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. நிலக்கரித் தாரிலிருந்து அகப்படும் பென்ஸீன் தூசியொன்றை, கெகூலி என்ற ரஸாயன சாஸ்திரி மாற்றி அமைக்க விரும்பினார். அந்தத் தூசிக்குள் அடங்கிய ஆறு கரியணுக்களையும் ஆறு ஜலவாயு அணுக்களையும் பிரித்தார். பென்ஸீன் தூசியின் இயற்கையான ஈரப் பசை மறைந்து காய்ந்த புதியதோர் அமைப்பை அதற்குக் கொடுக்க, அவர் முயன்றார். அதுவரையில் யாராலும் அப்படிச் செய்ய முடியவில்லை. ஜலவாயு அணுக்களை ஒரு வரிசையாக அவர் வைத்தார். கரியணுக்களையும் அந்த வரிசையிலே, நாட்டிய ஜோடி வேண்டிக் கை நீட்டும் புருஷர்களைப்போல், பக்கத்தில் வைத்தார். அந்த ஜலவாயு அணுக் கன்னியர்கள், இந்தக் கரியணு யுவர்களின் நீட்டிய கைகளை மறுத்து விட்டார்கள்.

ஒரு நாள் மாலை கணப்பருகே உட்கார்ந்திருந்தார் ரசாயன சாஸ்திரி கெகூலி. கணப்பிலே நிலக்கரி சுடர்விட்டு மினுமினுத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண் டிருந்தவாறே, கெகூலி உறங்கிவிட்டார். அப்போது அவர் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவிலே, கரி அணுக்களும் ஜலவாயு அணுக்களும் மாறிமாறிப் பற்பல தினிசாய் ஜோடி சேர்த்துக் கொண்டு, பித்துப் பிடித்ததுபோல், நாட்டிய மாடின; பாம்புபோல் முறுக்கிக்கொண்டும் இயங்கிக் கொண்டும் அவை ஆடின. இதைப் பற்றி அவர் கூறுகிறார்:

> "இதோ பாருங்கள்! இதென்ன? ஒரு பாம்பு தனது வாலையே கௌவிக்கொண்டு, என்னைக் கேலி செய்வதுபோல் என் கண் முன்னே ஆடியது. மின்னல் ஒன்று மின்னியதுபோல், நான் விழித்தெழுந்தேன்............மீதி இரவு பூராவும், இந்தக் கற்பனையை ஆதாரமாய் வைத்துக் கொண்டு வேலை செய்தேன்."

கெகூலியின் கனவிலே, பென்ஸீன் தூசியின் பனிரண்டு அணுக்களின் அமைப்பைப்பற்றி உதித்த கருத்து, வெடிமருந்துத் தொழிலிலும் சாயத் தொழிலிலும் பெரியதொரு புரட்சியை உண்டாக்கிவிட்டது. வியாபார உலகம் மட்டிலும் அவரது கனவுக்கு எவ்வளவு கடன் பட்டிருக்கிறது என்பதை, இந்தக் கணக்கினால் அறியலாம்: சக்கிரவர்த்திகளும் பிஷப்புகளும் அணியும் போர்வையின் ராஜாங்க ஊதாச் சாயம், முன் காலத்தில் ஒரு வகை மீனிலிருந்து இறக்கப்பட்டு வந்தது. அது ஒரு அவுன்ஸுக்கு 80-பவுன் விலையாகும். கெகூலி கண்டுபிடித்த சூட்சுமத்தால், அந்த அளவு சாயத்தை எட்டு பென்ஸ் செலவில் தயாரித்துவிடலாம்!

"நீர் சொல்லுவதை நான் அடியோடு வெறுக்கிறேன். ஆனால், அதை நீர் சொல்ல உமக்குள்ள உரிமையை, என் உயிரையே வேண்டுமாயினும் கொடுத்து, நான் காப்பாற்றுவேன்" —வால்டேர்

கூடிய விரைவில் வருகிறது!

மணி மாலை

ஒண்ணில் நாலு

தமிழ்

1. ஆஷாடபூதி

நடிக மணிகள்:

பி. பி. ரங்காச்சாரி
வாசுதேவ பிள்ளை
டி. எஸ். ஜயா

☆

2. மைனரின் காதல்

டி. எஸ். துரைராஜ்
எம். ஆர். சுவாமிநாதன்
கே. எஸ். ஆதிலக்ஷிமி
பி. ஆர். மங்களம்
கே. டி. சக்குபாய்

☆

3. அப்பூதி அடிகள்

பி. ஜி. வெங்கடேசன்
வி. என். சுந்தரம்
டி. என். மீனுக்ஷி
மாஸ்டர் சிவம்

☆

4. நவீன மார்க்கண்டேயா

காளி என். ரத்தினம்
டி. ஆர். ராமச்சந்திரன்
கே. ஹிரண்யய்யா
டி. வி. அன்னபூரணி

விபரங்களுக்கு

ஏஎல். ஆர்எம். கம்பெனி
"மெர்குரி ஹவுஸ்," பேந்தியன் ரோடு, மதருஸ்

ஓரியண்டல் பிலிம்ஸ்
9, ஸ்டிரிஞ்சர்ஸ் ஸ்டிரீட், பி. டி. மதருஸ்

ஸ்ரீ கிருஷ்ண பிலிம்ஸ் லிமிடெட்
சேலம்

WEST CLOX

அமெரிக்கன் புதுமாடல்

அலாரம் டைம்பீஸ்



பிக்பென் (புதுமாடல்) ரூ. 15 8

பேபி பென் (புதுமாடல்) ரூ. 16 8
அலாரம் இருதொனிகளில் அடிக்கும்



ஹஸ்லர் ரூ. 10

பாக்கிங் போஸ்டேஜ் தனி

(எல்லா கடியாரங்களும் 2 வருஷ உத்திரவாதமுள்ளது)

கனி & சன்ஸ்

கடியார வியாபாரிகள்

ஹெட் ஆபீஸ்:
55-57, ராட்டன் பஜார்.

மதருஸ்.

பிராஞ்சு:
190, மௌண்டு ரோடு.

பந்தோபஸ்துக்கும்

சேவைக்கும்

மாறிக்கொண் டிருக்கும் ஒரு உலகில், ஒவ்வொரு தனிப்பட்ட, வர்த்தக அபாயத்திற்கும் பாலிஸிகளுடன் கூடிய **யுனைடெட் இந்தியா லைப் ஆபீஸ்** உறுதி, பந்தோபஸ்து, நேர்மை இவைகளுடன் கூடியதாயிருக்கிறது. லைப் அஷ்யூரன்ஸின் நிகரற்ற மதிப்பு, கவர்ச்சி தரும் அம்சங்கள் ஆகியவை லைப் அஷ்யூரன்ஸை சாதாரண காலங்களில் ஒரு அவசியமாகச் செய்தன. யுத்தம், மதிப்புகள் மாறி வரும் இந்நாட்களில் புத்திசாலித்தனமாகச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டு மென்பதும் இந்த அவசியத்தில் இப்போது சேருகிறது. **யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸை** நம்புங்கள்; தாமதமின்றி உங்கள் ஆயுளை இன்ஷ்யூர் செய்யுங்கள்.

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

1906-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்
பி. ஓ. பெட்டி 281, மதராஸ்.

டிரஸ்டி:

சென்னை சர்க்காரின் அபீஷியல் டிரஸ்டி.

இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா
ஆகிய இடங்களில் கிளைகளும்,
ஏஜென்ஸிகளும் இருக்கின்றன.

லைன்

ஆப்டோன்

பிளாக்குகள்

உங்களுக்குத் தேவையான
எவ்விதமான பிளாக்குகளும்
நவீன முறைகளில் துரித
மாகவும் சகாயமாகவும்
செய்து தரப்பெறும்.

★

விவரங்களுக்கு எழுதவும்

மானேஜர்

"ஸண்டே டைம்ஸ்" பிராஸஸ் ஸ்டுடியோ

எர்ரபாலு செட்டித் தெரு :: சென்னை

Phone: 2678

ஜனநாயக அமெரிக்கா

(ஏ. கே. செட்டியார்)

தமிழிலே முதன்முதலாக 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற நேர்த்தியான சுற்றுப் பிரயாண நூலை எழுதிய ஸ்ரீ ஏ. கே. செட்டியார், அதே மாதிரியே 'அமெரிக்கா' என்ற மற்றொரு சுற்றுப் பிரயாண நூலை இப்போது எழுதியிருக்கிறார். அச்சிலிருக்கும் அந்தச் 'சக்தி' மலரின் ஒரு அத்தியாயம் இந்தக் கட்டுரை.

"மக்களால், மக்களுக்காக, மக்களுடைய அரசாங்கம்" என்ற கொள்கையை நிலை நாட்டிய ஆபிரகாம் லிங்கன் பிறந்த நாடு *அமெரிக்கா. "சுதந்தரம் அல்லது மரணம்—இரண்டில் ஒன்றைக் கொடு" என்று கர்ஜித்த சுதந்தர வீரனான பாட்ரிக் ஹென்ரி பிறந்த நாடு அமெரிக்கா. மின்சாரத்தின் எண்ணில்லாத உபயோகங்களைக் கண்டு பிடித்த விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிஸன் பிறந்த நாடு அமெரிக்கா. பலமிருந்தும், கொதிபத்தியப் பைத்தியம் பிடிக்காத வெள்ளையர்கள் வாழும் நாடு அமெரிக்கா.

அமெரிக்கா ஒரு புதிய உலகம். நிலப் பரப்பில் இந்தியாவைவிட மூன்று மடங்கு பெரியது. ஆனால் ஜனத் தொகையிலோ இந்தியாவில் மூன்றில் ஒரு பங்குதான்.

அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளுக்குச் சிவப்பு இந்தியர்கள் என்று பெயர். அவர்களின் நிறம் சிவப்பல்ல. அவர்கள் இந்தியர்களுமல்லர். ஆனால், பெயர் மட்டும் சிவப்பு இந்தியர்கள்!

கொலம்பஸ் 1492-ஆம் வருஷம் இந்தியாவைக் கண்டுபிடிக்க, யாத்திரை கிளம்பினார். இந்தியாவைக் காண்பதற்குப் பதிலாக, அமெரிக்காவைக் கண்டார். இந்த நாட்டுப் பூர்வீகக் குடிகள் அவருக்குத் தொந்தரவு கொடுத்தார்கள். கொலம்பஸ், இவர்களிற் சிலரைக் கைது செய்து, ஸ்பானியர்களின் நியாய ஸ்தலத்தின்முன் நிறுத்துகையில், 'சிவப்பு இந்தியர்கள்' என்று அவர்களை அழைத்தார்.

1501-ஆம் வருஷத்தில் அமெரிகோ வெஸ்புக்கி என்ற இத்தாலியர் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஸில் என்ற நாட்டைக் கண்டு பிடித்தார். அவர், ஐரோப்பா திரும்பியதும் தம்முடைய செயல்களைக் குறித்து ஒரு புத்தகம் வெளியிட்டார். அதுமுதல் இந்நாட்டுக்கு அமெரிக்கா என்று பெயரிடப்பட்டது.

இந்நாட்டில் முதலில் குடியேறிய வெள்ளையர்களுக்கும், பூர்வீகக் குடிகளான சிவப்பு இந்தியர்களுக்கும் பல பெரும் போர்கள் மூண்டன. அந்தப் போர்களில் சில வெள்ளையர் மாண்டனர். இந்தியர்களுக்குத்தான் அதிகச் சேதம். பல்லாயிரக் கணக்கான இந்தியர்களை அமெரிக்கர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றதாகத் தெரிகிறது.

அமெரிக்கா சில நூற்றாண்டுகளாகப் பல ஐரோப்பிய நாட்டினரின் ஆதிக்கத்திலேயே இருந்தது. யார் யார் கைகளுக்கு ஆதிக்கம் மாறுகிறதோ அவரவர்களுடைய குடியேற்ற நாடாகவுமிருந்தது.

1763-ஆம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கை நடந்தபொழுது, அமெரிக்காவில் மிஸிஸிப்பி நதிக்குக் கிழக்கேயுள்ள தன்னுடைய நாடு பூராவையும், இங்கிலாந்துக்கு, பிரான்ஸ் கொடுத்துவிட்டது.

அமெரிக்காவுக்கு இங்கிலாந்து இழைத்தகொடுமைகள் அனைத்தும் அமெரிக்க சுதந்தரப் பிரகடனத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. அமெரிக்கா தன்னுடைய சுதந்தரப்போரில் இறங்கி வரி கொடா இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது. "பிரதிநிதித்துவமில்லாவிட்டால் வரி கொடுக்க முடியாது" என்று அமெரிக்கர்கள் கூறிவிட்டனர். தனது ராஜதந்திரிகளின் முட்டாள் தனத்தினால், அமெரிக்காவை இங்கிலாந்து இழந்தது. 1783-ஆம் வருஷம் அமெரிக்கா ஒரு சுதந்தர நாடாயிற்று.

ஐக்கிய அமெரிக்கா நாட்டில் மொத்தம் 48 ஸ்டேட்டுகள். பதின்மூன்று ஸ்டேட்டுகள் முதலில் ஐக்கியமாயின



மேலே யிருப்பது போர்டு மோட்டார்த் தொழிற்சாலை. பக்கத்தில் இருப்பது போர்டின் முதல் கார்.

* 'அமெரிக்கா' என்று கூறும்பொழுது ஐக்கிய அமெரிக்க நாடுகளையே குறிப்பிடுகிறேன்.

மற்ற ஸ்டேட்டுகள் பிறகு சேர்ந்துகொண்டன. ஹாவாய்த் தீவுகளை 49-ஆவது ஸ்டேட்டாகச் சேர்க்க முயற்சிக்கிருர்கள். அமெரிக்காவின் கீழுள்ள நாடு பிலிப்பைன் தீவு ஒன்றுதான். இந்தத் தீவுக்குச் சுதந்தரம் அளிக்க அமெரிக்கர்கள் தயாராயிருக்கின்றனர். ஆனுல், பிலிப்பைன் தேசத் தலைவர்களிற் பலர்; ஜப்பானுல் தங்கள் சுதந்தரத்துக்கு ஆபத்து வருமென்று அஞ்சி, அமெரிக்காவுடன் சமானமாய்ச் சேர்ந்து வாழ விரும்புகிருர்கள்.

அமெரிக்காவின் மொத்த ஜனத்தொகை சுமார் 12 கோடி. இதில் ஒன்றேகால் கோடி பேர் நீக்ரோக்கள். ஒரு காலத்தில் அடிமை வர்த்தகம் அமெரிக்காவில் உச்ச நிலையிலிருந்தது. அப்பொழுது, இந்த நீக்ரோக்கள் ஆபிரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டனர். ஆபிரகாம் லிங்கன் சட்ட பூர்வமாக அடிமைகளை விடுவித்தார்.

நீக்ரோக்களை வெள்ளையர்கள் படுத்திய பாடு கொஞ்ச நஞ்ச மல்ல. அமெரிக்காவில் நிற வெறி கொண்ட ஒரு ரகசியச் சங்கம் இருக்கிறது. அதற்கு **கூ க்ளக்ஸ் க்ளான்** என்று பெயர், அமெரிக்கா முழுதும் வெள்ளையர் ஆதிக்கத்திலிருக்க வேண்டுமென்பதும் மற்ற நிறத்தவர்களை **எந்த விதத்தாலாவது** தொலைத்துவிடவேண்டுமென்பதும், அந்தச் சங்கத்தினர்களின் கொள்கை. அவர்கள் கறுப்புத் துணியால், கண் தவிர, தங்கள் முகம் முழுவதையும் மூடிக்கொண்டு சந்திப்பார்கள். இம்மாதிரியான சந்தர்ப்பங்களிலே நீக்ரோக்களை உயிரோடு கொளுத்துவார்கள். பாவம்! அந்த நீக்ரோக்கள் நெருப்பிலே துடிக்கும்போது, இந்த வெள்ளையர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்து மகிழ்வார்கள்.

நீக்ரோக்களுக்கு அமெரிக்கர்கள் சம உரிமை அளிக்க வில்லை. நீக்ரோக்களின் ஜனத்தொகைக்குத் தக்க அளவு, அவர்களுக்கு அரசாங்கத்தில் பிரதிநிதித்துவ மில்லை. ஆனுல், தொழிலாளர்களைப் பொறுத்தவரை, பெரும்பாலும் வெள்ளை அமெரிக்கரும் கறுப்பு அமெரிக்கரும் ஒரே மாதிரி கூலி பெறுகிருர்கள்.

அமெரிக்காவில் வெள்ளையர்களின் பிறப்பு விகிதத்தைவிட, நீக்ரோக்களின் பிறப்பு விகிதம் பல மடங்கு அதிகமாயிருக்கிறது. இப்படியே இன்னும் நாற்பது ஐம்பது வருஷங்கள் சென்ருல், ஜனத்தொகையில் நீக்ரோக்கள் தங்களுக்குச் சமமாக வந்து விடுவார்களோ என்ற அச்சம் வெள்ளையர்களுக்கிருக்கிறது.

உலகத்துக்கே ஜனநாயக வழிகாட்டியாயிருப்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்ளும் அமெரிக்கா, நீக்ரோக்களின் விஷயத்தில் அதிருப்தியாக நடந்துகொள்கிறது; இங்கேதான் ஜனநாயகம் தோல்வி யடைகிறது.

அமெரிக்காவில் எல்லா நாட்டு மக்களும் குடியேறியிருக்கிருர்கள். ஐரோப்பாவிலுள்ள சகல நாட்டு மக்களையும் இங்கே காணலாம். ஆப்பிரிக்கர்கள், சீனர், ஜப்பானியர், இந்தியர் ஆகியோரும் அங்கே குடியேறினுர்கள்.

கலிபோர்னியா ஸ்டேட்டில் மட்டும் சுமார் 5,000 இந்தியர்கள் இருக்கிருர்கள். இவர்கள், சென்ற உலக யுத்தத்துக்குமுன் குடியேறியவர்கள். "வெளிநாட்டிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர்களில் ஹிந்துக்கள்தான் கல்வி வாசனை யற்றவர்கள்" என்று அமெரிக்க அரசாங்க ரிக்கார்டு ஒன்று கூறுகிறது. அமெரிக்காவில் இந்தியர்கள் யாராயிருந்தாலும், அவர்களை ஹிந்துக்கள் என்றுதான் அழைப்பது வழக்கம். கலிபோர்னியாவில் குடியேறிய ஹிந்துக்களில் பெரும்பாலோர் சீக்கியர்கள். இவர்கள் விவசாயிகள். இவர்களுக்குள் மத சம்பந்தமாக இரு கட்சிகள் உண்டு. இந்த இரண்டு கட்சிகளுக்கும் அடிக்கடி சண்டை உண்டாகும். ஒவ்வொரு சண்டையிலும் சில மண்டைகளும் உருளும். அதனுல், பொதுவாக, கலிபோர்னியாவில் ஹிந்துக்களுக்கு அவ்வளவு 'நல்ல பெயர்' இல்லை. இப்பொழுது, இந்தியர்களை அமெரிக்காவில் குடியேற அனுமதிப்பதில்லை. வியாபாரத்துக்கோ, அல்லது படிப்புக்கோ, அல்லது ஊர் சுற்றிப் பார்ப்பதற்கோ செல்லும் இந்தியர்களை, குறிப்பிட்ட காலம்வரைதான் அங்கே தங்க அனுமதிப்பார்கள். ஏற்கனவே குடியேறியுள்ள இந்தியர்களுக்கும் பிரஜா உரிமை (citizenship) கிடையாது. அடிமை நாட்டினருக்கு உரிமை வேறுண்டோ?

உலகத்திலேயுள்ள சுதந்தர நாடுகளில் அதிகமான சுதந்தரத்தையுடைய நாடு அமெரிக்கா ஒன்றுதான். நசுக்கப்பட்ட நாடுகளின் மீது அமெரிக்கர்களுக்கு எப்பொழுதும் அனுதாபம் உண்டு. இந்தியாவினிடத்து அமெரிக்கர்களுக்கு நிறைய அனுதாபமும் நல்லெண்ணமும் உண்டு. இந்தியத் தலைவர்களான மகாத்மா காந்திக்கும், ஜவஹர்லால் நேருவுக்கும் அமெரிக்காவில் பெரு மதிப்பு.

இந்தியாவில் ஜனநாயகம் என்ற போர்வையின்கீழ் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஏகாதிபத்திய ஆட்சி நடத்துகிருர்களென்பது, விஷயமுணர்ந்த அமெரிக்கர்களுக்குத்தான் தெரியும். சாதாரணமாகத் தெருவில் செல்லும் ஒரு அமெரிக்கனுக்கு இந்த விஷயம் தெரியாது. இந்தியாவுக்கு விரோதமாகப் பெரும் பிரசாரமொன்று பல வருடங்களாக பிரிட்டிஷாரால் நடத்தப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் அரசாங்கமேகூடத் தனக்குச் சாதகமான சில இந்தியத் 'தேசபக்தர்'களை இந்தத் தர்ம கைங்கரியத்துக்காக அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கிறது.

பொய்ப் பிரசாரம் செய்வதிலே உலகில் முதல் நம்பர் புளுகரான டாக்டர் கோபெல்ஸ் கூட, பிரிட்டிஷாரிடம் பிச்சை வாங்கவேண்டும். இந்தியர்கள் அநாகரீகமானவர்களென்றும், பிரிட்டிஷார் இந்தியாவை விட்டுச் சென்றுவிட்டால் இந்தியா அடியோடு நாசமாகிவிடுமென்றும், இந்தியாவின் நன்மைக்காகவே ஆங்கிலேயர்கள் இந்தியாவில் அரசாட்சி நடத்துவதாகவும் அமெரிக்காவில் பிரசாரம் நடைபெறுகிறது. ஆனுல், இந்தியர்களின் கட்சியை எடுத்துரைக்கக் கூடிய யாரையும், அங்கே செல்ல நமது அரசாங்கத்தார் அனுமதிப்பதில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் உண்மையிலேயே இந்தியாவில் ஜனநாயக ஆட்சி நடத்தினுல், இந்தியர்களை வெளிநாடுகளுக்கு, அதிலும் அமெரிக்காவுக்குச் செல்ல விடாமல் ஏன் தடுக்கிறது? இந்தியாவில் நடக்கும் விஷயங்களை மறைத்து வைத்துக் கொண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் ஏன் அமெரிக்காவிடம் தலை குனிந்து பிச்சை கேட்க வேண்டும்?

பிறருடைய உதவியினுல் இந்தியா சுதந்தர மடைய ஒரு போதும் விரும்பியதில்லை; விரும்பப் போவது மில்லை. ஆனுல், பிறருடைய அனுதாபம் நாம் சுதந்தரம் அடைவதற்கு உதவியாக இருக்குமானுல், அதை நாம் ஏன் பெறக் கூடாது?

வெளிநாடுகளில், அதிலும் சிறப்பாக அமெரிக்காவில், இந்தியாவைப்பற்றிப் பிரசாரம் செய்யும் அவசியத்தை நன்குணர்ந்த ஒரே ஒரு தலைவர்தான் நம் நாட்டில் இருந்தார். அந்த வீர புருஷன் வித்தல்பாய் படேல் இன்று மறைந்துவிட்டார்.

அமெரிக்காவின் அனுதாபத்தை நாம் மிகப் பெரிதாக மதிப்பிட வில்லை. அதன் அளவை நாம் அறிவோம். ஏனெனில் அமெரிக்கர்கள் முதலில் வியாபாரிகள்; பிறகுதான் மனிதர்கள்.

அவனிடம் அவளுக்கு அன்புதானா? அப்படியானல், அந்த மோதிரத்தை ஏன் கொடுக்க மாட்டேனென்கிறாள்? ஏனென்றால்............

வைர மோதிரம்

—(கு. ப. ராஜகோபாலன்)

ஆத்மநாத ஐயரின் வீட்டு மாடியில் ஓர் அறை. கனகம் தனியாக உட்கார்ந்துகொண்டு ஏதோ மெதுவாகப் பாடிக்கொண் டிருக்கிறாள். ஒரு நிமிஷம் கழித்ததும் அறைக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்கிறது.

கனகம் : யாரது?

கோபு : தெரியவில்லையோ யாரென்று? திற கதவைச் சட்டென்று!

கனகம் : (கதவைத் திறந்து) எங்கே போயிருந்தீர்கள் இவ்வளவு நேரம்?

கோபு : யார் என்று கேட்டாயே! யாரை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாய்? சற்றுச் சொல்!

கனகம் : அப்பா வருகிற நேரம். அவரோ—

கோபு : சரிதான்—அப்படியா அது—

கனகம் : என்ன இவ்வளவு பதட்டம்? உட்காருங்கள்.

கோபு : அதற்கெல்லாம் இப்பொழுது எனக்கு நேரமில்லை.

கனகம் : அதற்கெல்லாம்—இப்பொழுது—நேரமில்லை யாக்கும்!

கோபு : உன் மெருகுகளுக்கெல்லாம்-

கனகம் : (ஆத்திரத்துடன்) சரி, இப்பொழுது என்ன நகை வேண்டும்?

கோபு : வைர மோதிரம் வேண்டும்.

கனகம் : வேறு என்ன வேண்டுமானாலும் தருகிறேன், வாங்கிக்கொண்டு போங்கள்!

கோபு : வேறொன்றும் வேண்டாம் எனக்கு. அதைமட்டும் கொடு, போதும்!

கனகம் : என் மனதைத் தெரிந்துகொண்டே அதை ஏன் கேட்கிறீர்கள்?

கோபு : உன் மனதைப்பற்றி இப்பொழுது கேள்வி இல்லை. நீ அதைக் கொடுக்கப்போகிறாயா இல்லையா என்பதுதான் கேள்வி.

கனகம் : இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறீர்களே! இத்தனை வருஷங்களில் நான் எதை என்னுடையது என்று வைத்துக்கொண்டு உங்களுக்கு இல்லை என்று சொல்லி இருக்கிறேன்? இதைக் கொடுக்க முடிந்தால் கொடுக்க மாட்டேனா?

கோபு : ஏன் முடியாது?

கனகம் : அப்பாவுக்கு அந்த மோதிரத்தின்மேல் உயிர் என்று உங்களுக்கும் தெரியும். அவருக்குத் தெரியாமல் அதை எடுத்து உங்களிடம் நான் எப்படிக் கொடுப்பது?

கோபு : ஏன் இந்த வெறும் சாக்கெல்லாம்? உனக் கிஷ்டமில்லை யென்றால், உன் அப்பாவின் தலையில் ஏன் போடுகிறாய்? அவர் என்ன அதைத் தலையிலா கட்டிக்கொண்டு போகப் போகிறார்? எல்லாம் உன்னுடையது. இல்லை, வேறு யாராவது வார்சு இருக்கிறானா? அதை நீ எடுத்ததற்காக, அவர் உன்னை வீட்டை விட்டுத் துரத்திவிடப் போகிறாரோ? சும்மா என்—?

கனகம் : அம்மாவின் நினைவாக அதை அவர் வைத்துக்கொண் டிருக்கிறார். அதை எடுத்தால் அப்பாவுக்குக் கோபம் வந்துவிடும், நிச்சயம். அதுவும் அவருக்குத் தெரியாமல்—

கோபு : இப்பொழுது எனக்குக் கோபம் வருகிறது—அதற்கென்ன செய்யப் போகிறாய்?

கனகம் : அதற்காகத்தான் உங்களை இவ்வளவு நல்ல வார்த்தை சொல்லுகிறேன்—

கோபு : அந்த நல்ல வார்த்தையையெல்லாம் உன் அப்பாவுக்குச் சொல்!

கனகம் : இப்படிப் பிடிவாதம் பிடிக்கலாமா நீங்கள்?—

கோபு : நீ தான் பிடிக்கிறாய்?

கனகம் : இப்படிச் சொல்லலாமா நீங்கள்? ஐயோ உங்கள் மனது ஏன் இப்படி மாறிவிட்டது? எது போனாலும் போகட்டும், நீங்கள் ஹிதமாக இருந்தால் போதுமென்று நான் செய்ததற்கெல்லாம் இதுதானா பலன்?

கோபு : என்ன செய்துவிட்டாய் நீ, உலகத்தில் கைப் பிடித்த மனைவி செய்யாததை?

கனகம் : நான் கேட்டால் கோபிப்பீர்கள். நீங்கள் செய்ய வேண்டியதை, தொட்டுத் தாலி கட்டின நீங்கள்—

கோபு : தாலி கட்டின பாவம்தான் காலைச் சுற்றிக்கொண் டிருக்கிறதே! இல்லா விட்டால் எவ்வளவு—

கனகம் : சுகமாக இருப்பீர்களாக்கும்! (கோபத்துடன்) அப்பா உங்களைத் தாய் தகப்பன் இல்லாத பிள்ளை, தங்கை பிள்ளை, என்று எடுத்து வளர்த்து—

கோபு : என்ன மிஞ்சி விட்டாய்?—

கனகம் : (காதில் போட்டுக் கொள்ளாமல்) ஒரு அக்ஷரம் தெரியாவிட்டாலும், பெண், மாப்பிள்ளை தன்னுடன் இருக்கட்டும் என்று எண்ணி—

கோபு : இந்தா, உனக்கு ஏதாவது—

கனகம் : இங்கே வைத்துக்கொண்டு பணத்தை வாரி இறைத்ததற்கு—

கோபு : என்ன வாரி இறைத்தேன்?

கனகம் : ஜமக்காள வியாபாரம் என்று மூவாயிரத்தை முதலாக்கினீர்கள்!

கோபு : போதவில்லை!

கனகம் : கடை வாடகைக்கும் காப்பிக் கிளப்புக்கும்தான் சரியாக இருந்தது. சில வியாபார மென்று ஆயிரம் போயிற்று. பிறகு காகித விற்பனை ஏஜண்டு—ஆயிரம்—

கோபு : இத்தனையும் உங்கப்பனால் வந்ததுதான். போட்டு எடுப்பதுதான் வியாபாரம். அதற்குள் அவசரப்பட்டு—

கனகம் : எங்கே போட்டு, எங்கே எடுப்பது? என் வயிற்றெரிச்சலை ஏன் கொட்டிக்கொள்ளுகிறீர்கள்? அதெல்லாம் தொலைகிறது என்று தலை முழுகினேன். இந்த நிலைமையை எந்தப் பெண் சகிப்பாள்? மானம் போகக் கூடாது என்று நான் மறைத்து வைத்து வைத்து மடிந்து வருகிறேன்—

என்னைவிட அவளிடம் என்ன கண்டு விட்டீர்கள்?

கோபு: அதெல்லாம் உன்னை யார் கேட்டார்கள்?

கனகம்: ஒருவரும் கேட்க வேண்டிய தில்லை. கடவுள்கூடக் கேட்க வில்லையே!

கோபு: சரி சரி, நேரமாகிறது; மோதிரத்தைத் தருகிறாயா இல்லையா? சொல், போகிறேன்!

கனகம்: நான் சொல்லுகிறதைக் கேளுங்கள், கேட்கக் கூடாதா?

கோபு: இவ்வளவு நாழிகை கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். ஒன்றும் புதிதாகக் காணோம்.

கனகம்: புதிதாக என்ன சொல்ல வேண்டும் உங்களுக்கு?

கோபு: நீ என்னிடம் வைத்திருக்கிறதாகச் சொல்லும் அன்பு உண்மை என்றுதான்.

கனகம்; நான் அதை வாயைத் திறந்து சொல்லவேண்டிய அவசியம் கூடவா இருக்கிறது?

கோபு: நான் கேட்கிறதிலிருந்தே தெரியவில்லையோ?

கனகம்: நீங்கள் கேட்பது நியாயமல்ல. நியாயமா? நீங்களே சொல்லுங்கள்.

கோபு: கேட்கலாமென்றுதான் கேட்கிறேன்!

கனகம்: எது கேட்கலாம், எது கேட்கக்கூடாது என்று இல்லையா?

கோபு: (ஏளனமாக) உன் அன்பில் அந்தமாதிரி விவகாரம் வித்தியாசம் எல்லாம் உண்டோ?

கனகம்: (கோபத்துடன்) உங்கள் அன்பில்?

கோபு: என் அன்பிலா! பிறகு சாவகாசமாக யோசித்துச் சொல்லுகிறேன். இப்பொழுது கொஞ்சம் அவசரம். அதைக் கொடு!

கனகம்: எதற்காகக் கொடுக்க வேண்டும்? அதைத்தான் சொல்லுங்கள் பின்!

கோபு: எதற்காகவா? நீ என்னவோ ஓயாமல் சொல்லுகிறாயே...

கனகம்: பதிலாக நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றுமில்லையோ? நான் மட்டும்தான்—

கோபு: ஓகோ, பதிலை எதிர்பார்த்துத்தான், ஆனால்—

கனகம்: ஆமாம் என்றுதான் வைத்துக் கொள்ளுங்களேன்! நீங்கள் என் மனதை அறிந்து நடக்கா விட்டால்—

கோபு: நடக்காவிட்டால்?



"........மோதிரத்தைத் தருகிறாயா, இல்லையா? சொல்........"

கனகம்: பிரயோஜனம் என்ன?

கோபு: யாருக்கு?

[வெளியே இருந்து ஆத்மநாத ஐயர் "கனகம்மா! உன் அகமுடையான் இருக்கிறானா அங்கே?" என்று கேட்டுக்கொண்டு உள்ளே வருகிறார்.]

கனகம்: என் அப்பா?

ஆத்மநாத ஐயர்: (மகா கோபத்துடன்) இவன் முகாலோகனம் இனிமேல் செய்யக்கூடாது! இவன் செய்யும் அக்கிரமம் தெரியுமா உனக்கு? உனக்கு அகமுடையான் வேண்டாம்; இல்லை என்று நினைத்துக்கொள்ளுகிறேன்! போடா, வெளியே!

கனகம்: அப்பா, நான் அப்படி நினைக்க முடியாது!

ஆத்மநாத ஐயர்: (கோபத்துடன்) இப்பேர்ப்பட்ட அகமுடையான் வாய்த்திருக்கிற போதே உனக்கு இவ்வளவு—சரி, மத்தியானம் வாரண்டு வந்தால், தானே போகிறான்! (வெளியே போகிறார் கைத் தடியைச் சத்தம் செய்துகொண்டு)

கோபு: (வெட்கமின்றி) இப்பொழுது தெரிந்ததா என் அவசரம் என்னவென்று?

கனகம்: (தீர்மானமாக), வாரண்டுக்கு நான் பணம் கட்டுகிறேன்; நீங்கள் இங்கேயே இருங்கள்!

கோபு: வேண்டாம். மோதிரத்தைக் கொடு!

கனகம்: அதைத் தர முடியாது!

கோபு: நீ என் அகமுடையாளாக்கும்!

கனகம்: அகமுடையாள் என்றால்—? பெற்றவருக்குத் துரோகம் செய்யமாட்டேன்!

["ஹாய பிரேம க்யா ஹை?" என்று எங்கிருந்தோ பாட்டொலி கேட்கிறது.]

பிரபலஸ்தர் வரிசை.

யோகி அரவிந்தர்

பூமி குளிர்வதற்குமுன், நெருப்புப் பிழம்பாய் இருந்தது. இந்தியத் தேசீயமும் ஒரு காலத்தில் அப்படித்தான் அனல் கக்கிக்கொண்டிருந்தது. அக்காலத்தின் சூத்திரதாரிகளில் ஒரு முக்கியஸ்தர் பாபு அரவிந்த கோஷ்.

ஸ்ரீ. அரவிந்தர் 1872-ஆம்வரு ஆகஸ்டுமீ 15௨ கல்கத்தாவிலே ஜனித்தார். அவருடைய தகப்பனாரான ஸ்ரீ. கிருஷ்ண தனகோஷ், ஐ. எம். எஸ். பட்டம் பெற்ற பெரிய வைத்தியர். மேனாட்டு நாகரிகத்தில் மோகம் மிகுந்தவர். ஆகையால், அரவிந்தருக்கு எழு வயதாயிருக்கும்போதே, அவரையும் தமது மற்றும் இரண்டு மூத்த புதல்வர்களையும், ஸ்ரீ. கிருஷ்ண தனகோஷ், படிப்புக்காக, இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டார்.

முதலிலே மாஞ்செஸ்டரில் ஓர் ஆங்கிலக் குடும்பத்தோடு அரவிந்தர் வசித்தார். பின்னால், லண்டன் ஸெயிண்ட் பால் கலாசாலையில் சேர்ந்து படித்தார். கடைசியில் கேம்பிரிட்ஜ் கல்லூரியில் இரண்டு வருஷங்கள் கல்வி பயின்றார். படிப்பிலே அவர் மிகத் திறமை காட்டினார். சின்னக் குழந்தையாயிருந்தபோதே, பிரஞ்சு கற்கத் தொடங்கிவிட்டார். தாமாகவே ஜெர்மன் பாஷையையும் இதாலி மொழியையும் கற்று, கத்தே, டாண்டி ஆகிய பேராசிரியர்களின் நூல்களை மூலத்திலேயே படித்துவிட்டார். கிரேக்க பாஷையிலும் லத்தீன் மொழியிலும் புலமை யடைந்தார்.

1890-ஆம்வரு இந்தியன் ஸிவில் ஸெர்வீஸ் போட்டிப் பரீட்சையில் தேறினார். அதன்மேல் இரண்டு வருஷப் பயிற்சிக் காலத்துக்குப் பிறகு, குதிரையேற்றப் பரீட்சைக்கு ஆஜராகத் தவறிவிட்டார். அதனால், இந்தியன் ஸிவில் ஸெர்வீஸுக்கு யோக்கியதையில்லையென்று, அவரை அதிகாரிகள் தள்ளிவிட்டார்கள். இச்சமயம் லண்டனில் பரோடா மகாராஜா கெயிக்வார் இருந்தார். அவரைப் பாபு அரவிந்தர் போய்க் கண்டார். தமது பரோடா சமஸ்தானத்தில், ஸ்ரீ அரவிந்தருக்கு அந்த மன்னர் உத்தியோகம் அளித்தார்.

1893-ஆம்வரு முதல் 1906-ஆம்வரு வரையில், பதின்மூன்று வருஷகாலம்



அந்தச் சமஸ்தானத்திலே பாபு அரவிந்தர் சேவை புரிந்தார். முதலிலே ரெவின்யூ இலாக்காவிலும், பிறகு மகாராஜாவின் அரசாங்க மாளிகையிலும், அதன் பின் பரோடாக் கல்லூரியில் முறையே ஆங்கிலப் புரொபஸராகவும் உதவிப் பிரின்ஸிபாலாகவும் வேலை பார்த்தார். இங்கிலாந்திலிருக்கையில், தகப்பனாரின் கண்டிப்பான கட்டளைப்படி, முற்றிலும் மேனாட்டுக் கல்வியே கற்றுத் துளியும் கீழ்நாட்டுக் கல்வியின் வாசனையற்று வாழ்ந்த அரவிந்தர், இப்போதுதான், முதன்முதலாகக் கீழ்நாட்டுக் கலைகளையும் சம்ஸ்கிருத மொழியையும் வேறு பல இந்தியப் பாஷைகளையும் கற்கத் தொடங்கினார். இக்காலத்திலே அவர் பல கவிகளும் கட்டலானார். புதுச்சேரியினின்று பின்னால் பிரசுரமான அவரது பல கவிகள் இந்நாட்களில் எழுதப்பட்டவைதான்.

பரோடாவிலிருந்த காலத்திலேயே, அரசியலில் அவருக்குச் சிரத்தை விழுந்துவிட்டது. ஆனால், பகிரங்கமாக அதில் பங்கெடுத்துக்கொள்ள முடியவில்லை. 1905-ஆம்வரு வங்காளப் பிரிவினையை எதிர்த்துப் பிரமாதமான கிளர்ச்சி நாட்டிலே எழுந்தபோது, அரவிந்தரால் சும்மா இருக்க முடியவில்லை. பரோடா உத்தியோகத்தை ராஜீனாமாச் செய்துவிட்டு, பகிரங்கமாக அரசியலில் இறங்கினார்.

ஆயினும், 1902-ஆம் வருஷத்திலேயே அவரது ராஜீய சேவை ஆரம்பமாகிவிட்டது. ரகசியமாகச் சில வருஷங்கள் வேலை செய்துவந்தார். அயர்லாந்தில் நடந்த ஷின்பீனர் இயக்கத்தைப் போல, ஒரு சுதேசி இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டிய ஏற்பாடுகளை அவர் செய்யலானார். 1906-ஆம்வரு வங்காளத்தில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட தேசீயக் கல்லூரியின் பிரின்ஸிபாலாக, கல்கத்தாவுக்குப் போய்ச் சேர்ந்தார். அதுவரையில் இந்திய தேசீயக் காங்கிரஸ் மிதவாதிகளின் கையில் இருந்தது. காங்கிரஸைக் கைப்பற்றி, நேரடியான ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அப்போது உதித்த புதிய தேசீயவாதிகளின் கட்சியில், ஸ்ரீ அரவிந்தர் சேர்ந்துகொண்டார்.

சர்க்காருக்குள்ளே ஒரு சர்க்காராகக் காங்கிரஸைச் செய்துவிடவேண்டும்: சுயராஜ்யம் கிடைக்கும்வரையில், சுதந்திரப் போரை அந்தக் காங்கிரஸ் விடாமல் நடத்திவர வேண்டும்—இதுதான் அரவிந்தரின் ஆசை. ‘வந்தே மாதரம்’ என்ற தினசரிப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்துகொண்டு, மிக விறுவிறுப்பாய் அதை அவர் நடத்தினார். இந்தியா பூராவும் அந்தப் பத்திரிகை பரவியது. 1907-ஆம் வருஷத்திலிருந்து 1908-ஆம் வருஷம் வரையில் தாம் சிறையிலிருந்த காலத்தில்கூட, அதன் கொள்கையை அவரே கண்காணித்து வந்தார். 1908-ஆம்வரு அந்தப் பத்திரிகையை நிறுத்தவேண்டியதாகிவிட்டது. அந்த அற்ப காலத்துக்குள்ளே இந்தியாவின் அரசியல் பிரக்ஞையையே அது அடியோடு புதிய மாறுதலடையச் செய்துவிட்டது.

1907-ஆம்வரு அரவிந்தர் மீது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டி, அதிகாரிகள் வழக்குத் தொடர்ந்தார்கள். அந்த வழக்கு, தள்ளுபடியாகிவிட்டது.

‘ஸரஸி’

1907-ஆம் வருஷம் சூரத்திலே தேசீய வாதிகளின் மகாநாட்டுக்கு அவர் தலைமை வகித்தார். அப்போதுதான், காங்கிரஸுக்குள்ளே மிதவாதிகள்—அமிதவாதிகள் ரகளை நடந்தது.

அரவிந்தரது சகோதரரான பரீந்திரரின் தலைமையில் வேலை செய்துவந்த பயங்கரப் புரட்சிக்காரர் கோஷ்டியொன்றின் செயல்களிலும், 1908-ஆம் வருஷத்திய அலிபுரம் சதி வழக்கிலும், அரவிந்தரையும் சம்பந்தப்படுத்தி, அதிகாரிகள் கைது செய்தார்கள். அப்போது அரவிந்தர் சார்பு வக்கீலாகத் தேசபந்துதாஸ் ஆஜராகி, விசாரணை நடத்தியது மிகப் பிரபலமாகும். அரவிந்தருக்கு விரோதமாக எவ்விதச் சாட்சியங்களும் கிடைக்காததால், அப்போதும் அவர் விடுதலையடைந்தார். ஆயினும் விசாரணைக் காலத்தில் ஒரு வருஷ காலம் அலிபுரம் சிறையி லிருந்தார்.

1909-ஆம்ஆு வெளியே வந்ததும், இயக்கம் சிதைந்து கிடந்தது; தலைவர்களெல்லாம் சிறைவாசமும் அக்ஞாதவாசமுமாய்ப் பிரிந்துவிட்டார்கள். அரவிந்தர் தாம் ஒண்டியாகவே ஆங்கில வாரப் பத்திரிகையான ‘கர்மயோகி’யையும் வங்காளி வாரப் பத்திரிகையான ‘தர்மா’ என்பதையும் ஆரம்பித்து, உருக்குலைந்த இயக்கத்தைப் புதுப்பிக்க ஒரு வருஷ காலம் உழைத்தார். ஆனால், தேசம் தமது திட்டத்துக்கு இன்னும் பக்குவம் அடையவில்லை என்று இறுதியாக முடிவு செய்தார். தவிரவும், ஒரு வருஷச் சிறைவாச காலத்தில் அவரது ஆத்ம வேட்கையும் வலுத்திருந்தது. ஆகையால், 1910-ஆம்ஆு பிப்ரவரிமீ இந்திய அரசியலையே விட்டு விலகி, சந்திரநாகூரில் ரகசியமான ஓரிடத்தில் போய் வசித்தார். ஏப்ரல் மாதம் அங்கிருந்து கப்பல் மார்க்கமாகப் புதுச்சேரிக்குப் போய்ச் சேர்ந்தார்.

மழை விட்டும் தூவானை விடவில்லை என்பதுபோல, அவர் பிரெஞ்சு எல்லைக்குப் போய்ச் சேர்ந்த பின்னரும்கூட, அதிகாரிகள் சும்மா இருக்க வில்லை. ‘கர்ம யோகி’யில் அவர் கையெழுத்திட்டு எழுதியிருந்த ஒரு கட்டுரைக்காக அந்தப் பத்திரிகையின் அச்சுக்கூடச் சொந்தக்காரரின் மீது ஒரு வழக்குத் தொடர்ந்தார்கள். அதில் கீழ்க் கோர்ட்டிலே விதிக்கப்பட்ட தண்டனை, அப்பீலிலே ரத்தாயிற்று. இப்படியாக அரவிந்தருக்கு விரோதமான மூன்று வழக்குகளிலும், அவர் கட்சிக்கே வெற்றி கிடைத்தது குறிப்பிடத் தக்கதாகும்.

அரவிந்தர் மனைவிக்கெழுதிய சில கடிதங்கள், அலிபுரம் குண்டு வழக்கிலே, சாட்சியங்களாய்த் தாக்கல் செய்யப்பட்டன. அதனின்றும் அரவிந்தரின் மனப்போக்கு ஓரளவு புலனாகும். தமக்கு மூன்று பைத்தியங்கள் இருப்பதாக ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிடுகிறார்: (1) துன்புறும் மக்களுக்கு உதவிபுரியவேண்டும்; (2) நேருக்கு நேரே பரமாத்மாவைக் காணவேண்டும்; (3) பாரதமாதாவுக்கு ஆத்ம பலத்தைக்கொண்டு விடுதலை தேடவேண்டும்—இவைதான் அவரது பைத்தியங்கள். “இவற்றிலே நீயும் என்னுடன் வருவாயா?” என்று மனைவியைக் கேட்டார். மிருணாளினி அப்படி வரவில்லை.

நேருக்கு நேரே பரமாத்மாவைக் காண்பதற்கான யோகாப்பியாசத்தை, அன்றுமுதல் இன்று வரையில், அரவிந்தர் புதுவையிலே செய்து வருகிறார். புதுவை அரவிந்த நிலையம் இன்று ஒரு புண்ய க்ஷேத்திரமாகவும் ஆத்மஞான பீடமாகவும் விளங்குகிறது. எங்கெங்கிருந்தோ, பலர் அங்கே சென்று, ஆத்ம விடாய் தீரப்பெறுகிறார்கள்.

ஸ்ரீ. அரவிந்தரின் தர்சனம், நமது புராதன வேதவேதாந்தங்களை அடிப்படையாகக் கொண்டதேயாயினும், ஒரு புதுமையும் தனித் தன்மையும் வாய்ந்தது. நமது புராதன யோகங்களெல்லாம், பிரக்ருதியை மறந்து, ஆத்ம வெள்ளத்திலே மூழ்கத்தான் வழி காட்டுவன. ஸ்ரீ. அரவிந்தரோ பிரக்ருதியையும் ஆத்மாவையும் இணைத்து, பூலோகத்தையே சொர்க்கமாக்கும் அதிமானுஷ்ய வாழ்வை மனிதன் பெறுவதற்கு வழி காட்டும் மகாயோகியாவார்.

பெண்கள் தந்திரம்

அமெரிக்கப் பெண்கள் சென்ற நூற்றாண்டில் தனியாக ரயில் பிரயாணம் செய்வதானால், அழுமூஞ்சிக் குழந்தைப் பொம்மை ஒன்றைக் கொண்டு போவார்களாம். இப்படிச் சென்றால், அவர்களுக்குச் சுலபமாய் இடங் கிடைத்துவிடுமாம்; அதோடு, விடர்கள் உபத்திரவமும் இராதாம்.

* * *

குழந்தை வசியம்

மேல் நாட்டுப் பிரபல நடிகை யொருத்தி, தனது நண்பர்களின் வீட்டுக்குச் சென்றிருந்தாள். அவர்கள் எங்கேயோ வெளியே செல்லவேண்டி யிருந்தது. ஆனால், குழந்தையை என்ன செய்வது என்று தயங்கினார்கள். “நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் போய் வாருங்கள்” என்றாள் நடிகை.

“அது அழுதால் என்ன செய்வாய்? பாட்டுப் பாடி, குழந்தையைச் சமாதானப் படுத்துவாயோ?” என்றாள் வீட்டுக்காரி.

“பாட்டுப் பாடுவேனா? குழந்தைகளை வசீகரிக்க, எனக்கு எத்தனையோ தந்திரங்கள் தெரியும். அதைப்பற்றி உங்களுக்குக் கவலை வேண்டாம்” என்று பதிலளித்தாள் நடிகை.

அவர்களும் சரியென்று சொல்லிச் சென்றார்கள்.

ஒரு மணி நேரம் கழித்து, வீட்டார் திரும்பி வந்தார்கள்.

நடிகை ஒரு சோபாவிலே சாய்ந்து, ‘குர்குர்’ என்று குறட்டை விட்டுக்கொண் டிருந்தாள். விழித்த கண் மூடாமல், வாயைப் பிளந்து கொண்டு, அவளையே பார்த்தவண்ணம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தது குழந்தை.

நடிகையை வீட்டார் எழுப்பினார்கள். “இதுதானா குழந்தையைப் பார்த்துக் கொள்வது? குறட்டைவிட்டு நீயே தூங்க ஆரம்பித்துவிட்டாயே” என்று கேட்டார்கள்.

“நான் குறட்டை விடாம லிருந்தால் தெரியும். நீங்கள் போனவுடனே அது அழத் தொடங்கி விட்டது. பாடிப் பார்த்தேன்; ஆடிப் பார்த்தேன். ஒரு பெரிய நாடகத்தையே நடித்தேன். அழகு காட்டினேன். பயமுறுத்தினேன். ஒன்றுக்கும் அது மசியவில்லை. கடைசியாக இப்படித் தூங்குவது போல் பாசாங்கு செய்து குறட்டை விட்டேன். ஆஹா! அந்தக் குறட்டையில்தான் குழந்தை எப்படிச் சொக்கிப்போய் விட்டது, தெரியுமா? அழுகை போயே போய்விட்டது” என்றாள் நடிகை.

குழந்தை மனம் யாராலும் அறிய முடியாத ஓர் அதிசயமாகும்.

ஸோவியத் ருஷியா — ‘ஸஞ்சாரி’

மகத்தானதொரு சமூக வாழ்வுப் பரீட்சையைத் தொடங்கிய நாடு ருஷியா. அது இன்று சாம்ராஜ்ய வெறி பிடித்த ஹிட்லரால், நம்பிக்கைத் துரோகமாய், மோசடியாய்த் தாக்கப்பட்டிருக்கிறது. அதனால் முடிவிலே நற்பலனை விளையுமென்று நாம் நம்பலாம். இப்பொழுதே ஒரு ஆச்சர்யமான பலன் விளைந்திருக்கிறது. புலியும் பசுவும் ஒரு துறையில் தண்ணீர் குடித்தால் எப்படியோ அப்படியே, தன்னால் இதுவரையில் ஒரு ‘தீண்டத்தகாத’வனைப்போல் நடத்திவரப்பட்ட அந்த ருஷியாவுடன், பிரிட்டன் கூடிக்குலாவத் தொடங்கிவிட்டது: ‘ஆபத்துக்குப் பாபமில்லை’ என்பார்களே நமது கிழவர்கள்; அந்த மாதிரிதான் இது இப்போது நடந்திருக்கிறது. ஆனால், இந்த நட்பு, யுத்தத்துக்குப் பின்னும், சமாதான நோக்கங்களை நிறைவேற்றுங் காலத்தும், குலையாதிருந்து வரவேண்டும் என்பதுதான் நமது விருப்பம்.

சர்வதேச விவகாரங்களில் அடுத்த நிமிஷத்தில் என்னதான் நடக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது என்பதற்கு இந்த ஜெர்மன் - ருஷியப் போர் ஓர் அத்தாட்சியாகும். 1904-ஆம் வருஷம் ஜப்பானும் ருஷியாவும் போரிட்டன. 1914-ஆம் வருஷம் ஐரோப்பியப் போரிலே அவை நேசக் கூட்டாளிகளாயின. 1914-ஆம் வருஷம் இதாலியும் ஜெர்மனியும் நேசமாயிருந்தன. 1915-ஆம் வருஷம் அவற்றுக்கிடையே போர் மூண்டுவிட்டது. சர்வதேச உறவுகள், ஏதோ சில ராஜதந்திரிகள் போட்டவிழ்க்கும் சிடுக்குகளையும் விடுகதைகளையும் போலவே தோன்றுகின்றன. ஆனால், ருஷியாவின் நிலைமைமட்டில் சமீப காலம் வரையில் புது தினுசான ஒரு விசித்திரமாக இருந்தது.

ருஷியாவிடம் சகல நாடுகளுக்கும் சந்தேகம். அதை ஏதோ ஒரு விஷ ஜந்துவைப்போல எல்லா நாடுகளும் பாவித்துப் பயந்தன. காரணம் என்ன? ருஷியாவிலே ஒரு புதிய லட்சியத்தைக் கடைப்பிடிக்க முயற்சி நடந்துவருகிறது. அதுதான் ‘கம்யூனிஸம்’ என்ற சமதர்ம தத்துவம். உண்மையில், ருஷியாவிலும் இது பரிபூரணமாக அனுஷ்டிக்கப்படவில்லை. என்றாலும், ருஷியாவிடம் பிற நாடுகளுக்கு ஒரு கிலியிருந்து வந்தது.

‘கம்யூனிஸம்’ என்ற சமதர்ம தத்துவத்தின் அடிப்படை என்னவென்றால், இதுதான்: ‘சமுதாயத்தை மாற்றி நீதியான ஒரு புதிய முறையில் அமைக்க வேண்டும். அதிலே சகல மனிதர்களுக்கும் சமத்துவமிருக்கவேண்டும். சொத்தெல்லாம் சகலருக்கும் பொதுவானதாகவேண்டும். இப்பேர்ப்பட்ட புதிய சமுதாயத்தை, பலாத்காரம் உபயோகித்து ஸ்தாபிக்கலாம்’ என்பதே. சென்ற ஐரோப்பிய யுத்தத்துக்குப்பின், இந்த அபேதவாத ஸ்தாபனத்துக்காக ருஷியாவில் புரட்சிகள் நடந்தன. கடைசியில், லெனின் தலைமையில், ஸோவியத் யூனியன் என்ற பொதுவுடைமை ராஜாங்கம் ஏற்பட்டது. 1924-ஆம் வருஷம் ஜனவரியில் அவர் காலமானார். உடனே ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கீக்கும் அதிகாரப் போட்டி ஏற்பட்டது. ஸ்டாலினே அதில் வெற்றி பெற்றார், ட்ராட்ஸ்கீ அஞ்ஞாதவாசம் புரிய வேண்டியதாயிற்று.

> ஸோவியத் ருஷியா சம்பந்தமான படங்களை அடுத்த இரு பக்கங்களிலும் பார்க்கவும்.

அப்போதே உலகெங்கும் பொதுவுடைமைப் புரட்சி நடத்தவேண்டுமென்று ட்ராட்ஸ்கி அபிப்பிராயப்பட்டார். ருஷியாவிலே அதை ஸ்திரப்படுத்திவிட்ட பிறகுதான், வெளித் தேசங்களைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டுமென்பது ஸ்டாலினின் கருத்து.

என்றாலும், ஸோவியத் ருஷியாவால் என்றிருந்தாலும் ஒரு நாள் தங்களுக்கு ஆபத்தே என்று பிற ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் கிலி கொண்டிருந்தன.

(தொடர்ச்சி 26-ஆம் பக்கத்தில்)

கிரெம்லின் அரண்மனை

அடுத்த பக்கமுள்ள **4**-ஆவது படந்தான் கிரெம்லின் அரண்மனை. அதில் இலக்கமிட்டுள்ள இடங்களின் விவரம் வருமாறு:

1. ஸ்டாலின் இருப்பிடம். நான்கு அறைகள் உள்ளது.
2. மாஸ்கோ நதிக்கரை.
3. ரெட் ஸ்கொயர்.
4. லெனின் கல்லறை.
5. சரித்திர மியூஸியம்.
6. ஸெயிண்ட் பேஸில் கதீட்ரல்.
7. பழைய அலெக்ஜாந்தர் தோட்டங்கள்.
8. ஸ்பாஸ்கீ கேட். இந்த வாசலால்தான் கிரெம்லினுக்குள் கார்கள் நுழைகின்றன.
9. அஸம்ஷன் கதீட்ரல். ஜார்கள் இங்கேதான் மகுடம் சூட்டிக் கொள்வது வழக்கம்.
10. ஜார் மணி.
11. பயங்கர ஈவான் மணிக்கூண்டு.
12. அர்க்கேஞ்சல் கதீட்ரல். இதில் 47-ஜார்கள் அடக்கமாகியிருக்கிறார்கள்.
13. அன்னன்ஸியேஷன் கதீட்ரல். இதன் வெங்காய உருவம் படைத்த ஒன்பது ஸ்தூபிகள் உலகப் பிரசித்தம்.
14. ஸெயிண்ட் ஆண்ட்ரூஸ் ஹால். ஜார்களின் சிம்மாசன அறையாயிருந்தது. இப்போது, ஸுப்ரீம் ஸோவியத் காரியாலயமாயிருக்கிறது.
15. ‘சிவப்பு மாடிப் படி’
16. முன்னே ஆயுதசாலை. இப்போது, சர்க்கார் ஊழியர்களின் வாசஸ்தலம்.
17. பழைய பாரக்ஸ். தற்போது பள்ளிக்கூடம்.
18. சின்ன மாளிகை. பல தேச ஸோவியத் என்ற சபையின் கார்யாலயம் இங்கிருக்கிறது.
19. சாம்ராஜ்ய பொக்கிஷ அரண்மனை. இப்போது ஜார்களின் மகுட சிம்மாசன விருதுகள் வைக்கப்பட்டிருக்கும் பொருட்காட்சிச் சாலையாயிருக்கிறது.
20. பழைய நியாய சபை. அயல் நாட்டு மந்திரி மாலடாவ் இங்குதான் வசிக்கிறாராம். இதன் கோபுரத்திலே இரவும் பகலும் செங்கொடி இடைவிடாமல் பறந்துகொண்டேயிருக்கிறது.









(1) பெஸரேபியாவைப் பிடிப்பதற்காக ருமேனியா மீது ருஷியப் படைகள் படையெடுத்த போது, வட புகோவினுவில் ஒரு நகரில் ஸோவியத் போர் வீரன் ஒருவனை ஜனங்கள் சந்தோஷமாய் வரவேற்கிருர்கள். (2) ருஷிய அந்நியநாட்டு மந்திரி மாலடாவ். (3) ருஷியாவின் விக்கர்ஸ் 8-டன் டாங்கி; இதில் ஒரு சிறிய பீரங்கி ஏற்றப்பட்டிருப்பது, ஒரு புதுமையாகும். (4) கிரேம்லின் அரண்மனை. படத்திற்குள் இலக்கமிட்டிருக்கும் விவரங்களை 23-ஆம் பக்கத்தில் பார்க்கவும். (5) ருஷியாவின் கடற் கண்ணி வெடி, பாரசூட்டிலிருந்து போடப்படும் காட்சி. (6) ருஷியாவில் பொது உடைமை ராஜ்யத்தை முதன் முதலில் ஸ்தாபித்த பெரியார் லெனின். (7) ருஷியாவில் தற்போது சர்வாதிகாரம் செலுத்தி வரும் தோழர் ஸ்டாலின். (8) ருஷியாவின் புதுமையான தொரு குண்டு. இந்த ஒரு குண்டு, அர்ச்சுனனது

ஆச்சர்ய அம்பைப்போல, ப
களாய்ப் பிரிந்து தன் லட்சிய
தாக்கும். இதற்கு 'மாலடாவி
கூடை' என்று பின்லந்துக்க

ருஷியப் படங்கள்







ப்போல, பல சிறு குண்டு
தன் லட்சியத்தைச் சென்று
த 'மாலடாவின் ரொட்டிக்
பின்லந்துக்காரர் பரிகாசப்

பெயர் சூட்டி யிருக்கிறார்கள். (9) பாகூ எண்ணெய்க் கிணற்றில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி. (10) இரண்டு ஸோவியத் ஸோல்ஜர்கள். (11) ஸ்டாலினின் குழந்தைப் பருவ விளையாட்டைக் காட்டும் ஒரு சித்திரம் இது. (12) 'மாலடாவின் ரொட்டிக்கூடை' என்ற ஆச்சரியக் குண்டு, ஆகாசத்தில் வரும்போதே பிரிந்து, நூற்றுக்கணக்கான சிறு குண்டுகள் சிதறப்போகும் சமயத்தில் காணும் தோற்றம்.

(23-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனல் ஸோவியத் ருஷ்யாவுக்கும் பிற நாடுகளுக்கும் இருந்த உறவுகளில் அடிக்கடி மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே யிருந்தன. ருஷ்யாவின் நிலைமை அவ்வப்போது மாறிய விசித்திரத்தை இவ்வாறு சுருக்கிக் கூறலாம்: 1917-1922 வருஷங்களில் ஜெர்மனியுடன் நேசம். 1922-1933 வருஷங்களில் பிரிட்டனின் தூண்டுதலால், பிரான்சு எங்கே தன்மீது பாய்ந்துவிடுமோ என்ற பயம். 1934-1939 வருஷங்களில் ஜெர்மனியில் அதிகாரத்துக்கு வந்துவிட்ட ஹிட்லர், பொது உடைமையைத் திட்டிக்கொண் டிருந்ததால், அது எங்கே தன்மேல் படையெடுக்குமோ என்ற அச்சம். இக்காரணத்தால் சர்வதேசச் சங்கத்தில் ஸோவியத் ருஷியா சேர்ந்துகொண்டு, சகல தேசங்களுமே அடியோடு ஆயுதப்பரிகாரணம் செய்ய வேண்டும் என்றுகூட வாதித்தது. 1934-ஆம் வருஷம் மூனிக்குக்குத் தன்னை யழையாமலே, மூனிக் ஒப்பந்தம் நடந்ததைக் கண்டு, பிரிட்டன், பிரான்ஸ் இவ்விரண்டின் தூண்டுதலால், ஜெர்மனி எங்கே தன்மீது வந்து பாய்ந்துவிடுமோ என்ற பயம். இங்கிலேயில், தன்னுடன் ஹிட்லர் ஓர் அனுக்ரமிப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள முன் வந்ததும், ருஷ்யா முன்பின் யோசியாமல் அதைச் செய்துகொண்டது.

அந்த ஒப்பந்தத்தின் பலனுக, போலந்தைப் பங்கு போட்டுக் கொண்டது. எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவற்றின் மீது ஆதிக்கமும், பின்லாந்தில் ராணுவத் தளங்களும் பெற்றுக்கொண்டது.

மேற்கே கவனம் செலுத்திக்கொண்டிருந்த ஹிட்லர், இதற்கெல்லாம் உடந்தையாக இருந்தார். பால்டிக்கிலே தனது செல்வாக்கைப் பலப்படுத்திக்கொண்ட ருஷியா, பால்கனிலும் அப்படியே செய்ய நினைத்து, ருமேனியாவில் பெஸரேபியாவைப் பிடித்துக் கொண்டது. இங்கிலேயில் யாரும் எதிர்பாராவிதமாய்த் திடீரென்று போன மாதம், ருஷியாமீது ஹிட்லர் போர் தொடங்கிவிட்டார்.

ஸோவியத் ருஷியா ஒரு பிரம்மாண்டமான நாடாகும். அதைப் பூராவும் ஜெர்மனி ஜெயிப்ப தென்பது ஒரு நாளும் சாத்திய மல்ல. ஸோவியத் யூனியனின் விஸ்தீரணம் 81,44,000 சதுர மைல். ஜனத்தொகை 18,00,00,000. ஸோவியத் ருஷியாவில், 'கம்யூனிஸ்ட் பார்ட்டி' என்ற ஒரே ஒரு கட்சிதான் உண்டு. வேறு கட்சிகளுக்கு அனுமதி கிடையாது. அந்தக் கட்சியின் பொதுக் காரியதரிசியா யிருப்பவர் ஸ்டாலினே.

அபேதவாத முறையில், ஸோவியத் ருஷியாவில் பொருளாதார ஏற்பாடுகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகளும், போக்குவரத்துச் சாதனங்களும் சர்க்காருக்கே சொந்தமாகும். 'சமுதாயப் பண்ணைகள்' என்பவற்றின் மூலமே விவசாயம் நடத்தப்படுகிறது. ஆனல், விவசாயிகள், சமுதாயப் பண்ணையில் தங்களுக்குள்ள பங்குபோக, ஒன்றிரு ஏக்கர் நிலமும் ஒன்றிரு பசுக்களும் தங்களுக்குத் தனியே சொந்தமாய் வைத்திருக்க அனுமதி யளிக்கப் படுகிறது. பற்பல கைத்தொழில்களும் போக்குவரத்துச் சாதனங்களும் ருஷியாவில் அபரிமிதமாய் விருத்தியாகி யிருக்கின்றன.

ஸோவியத் சர்க்காரின் செஞ்சேனைக்குச் சிறந்த பயிற்சிதந்து, அபூர்வமான ஆயுதங்களும் அளிக்கப்பட் டிருக்கின்றன. பின்லாந்தை அது தாக்கிய போதுதான், அதனிடம் என்னென்ன புதுமையான ஆயுதங்களெல்லாம் இருக்கின்றன என்று தெரிந்தது. 'மாலடாவின் ரொட்டிக் கூடை' என்ற குண்டும் தீச்சுவாலை கக்கும் டாங்கிகளும், இன்னும் சில ஆச்சர்ய ஆயுதங்களும் அதனிட மிருக்கின்றன. பின்லந்து யுத்த களத்தில் அந்த ஆயுதங்களின் சின்னங்கள் அகப்பட்டதைப் பல நாட்டு அரசாங்கங்களும் அதிசயத்துடன் வாங்கிப் பரிட்சிக்கத் தொடங்கின. ஏனெனில் அவை இவைகளிடமில்லாத நூதன அதிசயங்க ளாகும். இது மாத்திர மல்ல; விமானத்திலிருந்து 'பாரசூட் துருப்பு'களை இறக்கும் முறையை முதன் முதலில் கண்டுபிடித்தது ருஷியாதான். ருஷியாவைப் பார்த்துக் காப்பியடித்ததுதான் ஜெர்மன் பாரசூட் துருப்புப் படையென்பது.

இப்பேர்ப்பட்ட ருஷியாவிடம் பகைமையை உண்டாக்கிக்கொண்டது, ஹிட்லரின் விநாசகாலமே யாகும். ஹிட்லர் வேறு என்ன காரியத்தைச் சாதித்தாலும், சாதிக்காவிட்டாலும் சரிதான்; பிரம்மாண்டமான ருஷியா பூராவையும் ஜயிப்பதென்பது மட்டில், நடக்கவே நடக்காது. ருஷியா என்றென்றும் வாழ்ந்துகொண்டே யிருக்கும்.

ஜனங்கள் செய்யாத 17 கார்யங்கள்

1. சோதித்துப் பார்க்காத புதியதை நம்பிப் பழையதை விடமாட்டார்கள்.
2. நிர்ப்பந்த மில்லாவிட்டால், ஸ்தாபிதமான பழக்கங்களை விடமாட்டார்கள்.
3. தட்டிக் கழிக்க முடியுமானல், கிருஷி எடுத்துக்கொண்டு எதையும் செய்ய மாட்டார்கள்.
4. நாளைக்கு எப்போதோ வரப்போகும் பெரிய இலாபத்தை எண்ணி, தற்போது பத்திரமாகக் கையிலுள்ள நலன் எதையும் தியாகம் செய்ய மாட்டார்கள்.
5. தூண்டுகோல் போடாவிட்டால், எந்தப் புத்திமதிப்படியும் காரியம் செய்ய மாட்டார்கள்.
6. உணர்ச்சி ரீதியான வேண்டுகோளுக்குச் செவி கொடுப்பார்களே யொழிய, தர்க்க ரீதியான வாதத்துக்கு இணங்க மாட்டார்கள்.
7. தங்கள் தப்பபிப்பிராயங்களை, போராட்டமின்றிக் கைவிடமாட்டார்கள்.
8. கண்டிப்பான கட்டுப்பாடு இல்லாவிட்டால், எதிலும் மனங் குவிந்து கவனம் செலுத்த மாட்டார்கள்.
9. திரும்பத்திரும்பத் தூண்டுகோல் போட்டுக்கொண்டே யிராவிட்டால், வேலை செய்ய மாட்டார்கள்.
10. பிரமாதமான ஆடம்பரக் காட்சிகளைக் கண்டு அவர்கள் மனம் மயங்கக்கூடும்; ஆனல், எளிய பொருள்களையே ஞாபகம் வைப்பார்கள்.
11. 'பைத்தியம்' என்றோ 'விசித்திரம்' என்றோ தங்களுக்குப் பட்டம் கட்டிவிடக்கூடிய எதையும் செய்ய மாட்டார்கள்.
12. தங்கள் அறியாமையையோ, அசக்தியையோ பகிரங்கமாய் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.
13. அதிகாரத்தில் ஸ்தாபிதமானவர்களை எதிர்க்க மாட்டார்கள்.
14. சுதந்திரத்துக்குப் போராடுவார்கள்; ஆனல், அதைப் பாதுகாக்க ஒட்டுக்கொடுக்க மாட்டார்கள்.
15. தோற்றுவரும் சிறுபான்மையோரோடு, மனமுவந்து சேரமாட்டார்கள்.
16. திட்டாத விமர்சனக்காரனை லட்சியம் செய்ய மாட்டார்கள்.
17. அந்நிய ஸ்தாபனங்களின் பெருமையைச் சுலபத்தில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்; ஆனல், அந்நிய விலாசமிட்ட பொருள்களை மாத்திரம் போற்றிப் புகழ்வார்கள்.

இந்தியாவின் புதிய சேனாதிபதியாக வந்திருக்கும்

வனாந்தர வீரர் வேவல்

இந்தியாவின் புதிய சேனாதிபதியாக வந்திருக்கும் தளபதி வேவல் ஒற்றைக்கண்ணர்தான். என்றாலும், ஆப்பிரிக்க வனாந்தரத்திலே வெற்றிவாகை சூடிவிட்டு வந்திருக்கும் பெரிய வீரர் அவர். அவருக்கு ஒரு கண் போனது சென்ற மகா யுத்தத்தில் யைப்பிரஸ் போரிலேயாகும். மகா நெப்போலியனை முறியடித்த நெல்ஸனுக்கும்தான் ஒரு கண் இல்லை; ஆயினும் என்ன? சரித்திரத்திலே அவர் பெயர் ஏறிவிட வில்லையா? அதே போல, நமது வேவலுக்கும் இப்போது கீர்த்தி ஓங்கி யிருக்கிறது.

ஒரு தளபதியை எதிரிலேயே புகழ்வதென்றால், அது பெரிய ஆச்சர்யந்தான். தளபதி வேவலை, ஜெர்மன் ராணுவத் தலைவரான கீட்டலே புகழ்ந்திருக்கிறார். "பிரிட்டிஷார் படைத்திருக்கும் தளபதிகளுக்குள்ளே தலைசிறந்தவர் வேவல்தான். அவர் மிகமிகச் சிறந்தவர்" என்று கீட்டல் சொல்லியுள்ளார்.

தளபதி வேவலுக்கு இப்போது வயது 57. அவருடைய தகப்பனார் ஒரு மேஜர் ஜெனரல். பாட்டனாரும் ஒரு போர் வீரர்தான்; ஸ்பெயினிலும் வெனிஸுலாவிலும் சேவை செய்து, பணம் சம்பாதித்தவர். ஆகையால், தளபதி வேவல், பரம்பரைப் போர் வீரர் ஆவார்.

தளபதி வேவலின் மாமனார் மட்டிலுமென்ன; அவரும் ஒரு கர்னல். வேவலின் மனைவி ஜோன் நல்ல உழைப்பாளி. வேவல் தம்பதிகளுக்கு மூன்று பெண்களும் ஒரு மகனும் உண்டு. மூத்த மகளான பாமீலா ஒரு நர்ஸ். மற்ற இரு பெண்களும் ஆப்பிரிக்காவில் தகப்பனாரின் ராணுவத் தலைமைக் காரியாலயத்திலே காரியதரிசிகளாய் வேலை பார்த்தார்கள். ஒரே மகனான ஆர்ச்சி, குடும்ப தர்மத்தை ஒட்டிப் போர் வீரனாக வேலை பார்க்கிறான்; பிளாக் வாட்ச் என்ற பிரபல ரெஜிமெண்டில் ஓர் ஆபீஸராக இருக்கிறான்.

தளபதி வேவல் சிறு வயதா யிருக்கும்போது, முதன் முதலில் பிளாக் வாட்ச் ரெஜிமெண்டில் சேர்ந்துதான், தென்னாப்பிரிக்கப் போயர் யுத்தத்துக்குப் போனார். வின்செஸ்டர் கல்லூரியில் படித்து, ஸான்ட் ஹர்ஸ்ட் ராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்றபின், 1901-ஆம் ௵ அவ்வாறு தென்னாப்பிரிக்க சேவைக்குச் சென்றார். அதன்பின் கொஞ்சகாலம் இந்திய எல்லைப்புறப் பட்டாளத்தில் சேவை செய்தார். ஆனால், அதில் ஒன்றும் அப்படிக் கீர்த்தி சம்பாதிக்க வில்லை.



1916-ஆம் ௵ காக்கஸுக்கு ராணுவத் துணைவராக, வேவல் அனுப்பப்பட்டார். அங்கே இரண்டு வருஷ காலம் இருந்ததில், ருஷிய பாஷை மிக நன்றாகப் பேசக் கற்றுக்கொண்டார். பின்னாலும், ஐந்தாறு தடவை ருஷியாவுக்கு வேவல் சென்றிருக்கிறார். 1936-ஆம் ௵ இவர் அங்கே சென்றபோது, ருஷியப் 'பாரசூட்' படைப் பயிற்சி நடந்து கொண்டிருந்தது. அதைக் கண்டு வியந்து, பாராட்டி, இங்கிலாந்துக்கும் எழுதி யனுப்பினார். ஆனால், பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார் வேவலின் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்துவிட்டார்கள்.

சென்ற மகாயுத்தத்தின்போது, பீரங்கிப் படை மேஜராக, வேவல் பதவி பெற்றார். யைப்பிரஸில் இடது கண்ணை இழந்தாலும், ராணுவச் சிலுவைப் பதக்கம் பரிசு பெற்றுவிட்டார். வேவலின் ராணுவக் குருநாதராக ஆலென்பியைத்தான் சொல்லுவது வழக்கம். 1917—18-ஆம் வருஷங்களில் பாலஸ்தீனில் ஆலென்பியின் ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் பிரதம உத்தியோகஸ்தராக இருந்துகொண்டு, ஆலென்பியின் போர் நுட்பங்களை வேவல் கற்றார்.

1933-ஆம் ௵ மேஜர் ஜெனரலாக, வேவலின் பதவி உயர்ந்தது. அதற்கு ஐந்து வருஷங்களுக்கெல்லாம் லெப்டினண்ட் ஜெனரல் என்ற உயர்வும் கிடைத்தது.

வேவல் மிகவும் சூட்சும புத்தி உடையவர். பிரிட்டிஷ் யுத்த மந்திரி காரியாலயத்தார், ஒரு சமயம் போர் வீரர்களுக்குச் சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தினார்கள். அதாவது, கொசு வலை போன்ற பல பழம் பசலிச் சாமான்களையெல்லாம் சேனா வீரர்கள் எப்போதும் வைத்திருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம். இந்த முட்டாள் தனத்தை உடைக்க வேண்டுமென்று வேவல் விரும்பினார். சாதாரண ராணுவப் பயிற்சி ஒன்று நடந்தபோது, தமது படையொன்றை இந்த ஒட்டை உடைசல் சாமான்கள் அத்தனையோடும் ஒரு ரஸ்தாவிலே விரட்டி விட்டார். அதனால், சாலையிலே 15 மைல் தூரம், துப்பாக்கி தாங்கி நடக்கும் காலாள் வீரரும் கோவேறு கழுதை வண்டிகளும் வேறு தளவாடங்களுமாய் ரஸ்தாவின் வண்டிப் போக்குவரத்துக்களோடு மோதி ஒரே அவந்தரை யாகிவிட்டது. இதைக் கண்டு, அவர் மீது யுத்தமந்திரி காரியாலயத்துக்கு உள்ளுக்குள்ளே எரிச்சல் உண்டாயிற்று. அவரை மெள்ளப் பாலஸ்தீனுக்குச் சேனைத் தலைவராக அனுப்பிவிட்டார்கள். அங்கே போகும் ராணுவத் தலைவர்களுக்கு நல்ல பெயர் கிடைப்பதே யில்லை. வேவலும் அங்கே ரத்தவிளாறாய் ஓடச் செய்து, 'பெரிய ரத்த வேட்டை நாய்' என்று மக்களிடம் பெயர் வாங்கினார். என்றாலும், கலகங்களை யடக்கிய வீரர் என்ற பாராட்டுதலை, பிரிட்டனிடம் அவர் சம்பாதித்து விட்டார்.

அந்த முட்டாள்தனத்தை பிரிட்டிஷ் சர்க்கார் உணர்ந்துகொண்டவுடனே, தளபதி வேவலை அழைத்து, இங்கிலாந்தின் தெற்குப் பகுதியின்

'ஜேயார்'

படைகளுக்குத் தலைவராக நியமித்தார்கள். ஏனெனில், அதுதானே அப்பொழுது மிகவும் 'வபை'யான பாகம்? ஆனால், மத்தியக் கிழ்த்திசையின் நிலைமைதான் மிக அபாயமானதென்று பிறகு தோன்றியதால், அவரை பிரிட்டிஷ் யுத்தமந்திரி காரியாலயத்தார், எகிப்துக்கு அனுப்பினார்கள். மால்டா, கிரீட் ஆகிய இடங்களிலிருந்து, தெற்கே கென்யா, வட ரோடீசியா வரைக்குமுள்ள விஸ்தாரமான பிரதேசங்களிலுள்ள அத்தனைப் பிரிட்டிஷ் படைகளுக்கும் அவர் தலைவரானார்.

லிபியாவில் இதாலியப் படைகளைத் தாக்குவதில், தளபதி வேவல் கொஞ்ச நாள் தாமதம் செய்தார். இது பிரிட்டனிலிருந்த சிலருக்குப் பிடிக்கவில்லை. வேவலை உடனே அங்கிருந்து அகற்றிவிடவேண்டுமென்றுகூட அவர்கள் கூச்சலிட்டார்களாம். "உடனே படையெடும்" என்று பிரிட்டிஷ் சர்க்காரின் ஓர் உத்திரவை ஜேபியில் போட்டுக்கொண்டு, வேவலிடம் ஆந்தனி ஈடனே ஒரு சமயம் தூது போனாராம். அந்த உத்திரவு லேவலிடம் கொடுபட்டதா, இல்லையா என்று தெரியவில்லை. ஆனால், சரியான தருணம் வரும் வரையில் காத்திருந்த வேவல், இறுதியிலே தம்மிஷ்டப்படி படையெடுத்து, வெற்றிமேல் வெற்றி பெற்று, உலகத்தையே பிரமிக்கச் செய்துவிட்டார்.

யுத்தம் ஆரம்பித்தவுடனே, தளபதி வேவல், கெய்ரோவில் உள்ள பெரிய ஹோட்டல் ஒன்றுக்குத் தமது காரியாலயத்தைக் கொண்டுபோய்விட்டார். மூன்றும் மாடியில் சாமானியமான ஓர் அறையைத் தமக்கு வைத்துக்கொண்டார். மட்டமான ஒரு மேஜைமீது பல வர்ணப் பென்ஸில்களையும் பளபளப்பான பல பூகோளப் படங்களையும் பரப்பிக்கொண்டு, ஆராய்ச்சியில் மூழ்ந்துவிட்டார்.

போன மகாயுத்தத்தின்போது, நமது வேவலும், இதாலியத் தளபதி கிராவிஸியானியும் ஆப்பிரிக்காவில் போரிடுகையில், ஒருவருக்கொருவர் நேசர்களாய்ச் சந்தித்தார்கள். குப்ரா வனத்தைக் கலகக்காரர்களிடம் இருந்து தாங்கள் இருவருமாய்ப் பிடித்தபோது, ஒருவருக்கொருவர் நட்பு முறையில் கட்டாரிகள் மாற்றிக்கொண்டார்கள். அந்தக் கட்டாரிகளிலே, "ஒன்றுபட்ட நாமே எஜமானர்கள்" என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால் விதி யாரைவிட்டது? அந்த வேவலும் அந்தக் கிராவிஸியானியும், அதே ஆப்பிரிக்க மண்ணில் எதிரிகளாய்ப் போரிட, இப்போது நேர்ந்தது. இந்தப் போருக்கு முன் வரையில், வனந்தரப் போர் சம்பந்தப்பட்ட மட்டில் வல்லவர்கள் உலகிலேயே இருவர்தான் என்று மதிக்கப்பட்டு வந்தது. ஒருவர் வேவல்; மற்றவர் கிராவிஸியானி. அந்த இருவரில் கிராவிஸியானி தோற்றுவிட்டார்; வேவலே வெற்றிபெற்று மிஞ்சியவர்.

இப்பேர்ப்பட்ட தளபதி வேவல் இந்தியாவின் பிரதம சேனாதிபதியாக நம்மிடையே வந்து சேர்ந்திருக்கிறார். பிரிட்டன் தனது மிகச் சிறந்த சேனாதிபதியை இந்தியாவுக்கு அனுப்பிய தன் மர்மமென்ன? யுத்தப் போக்கிலே, இந்தியா சம்பந்தப்பட்ட புதிய நிலைமைகள் எதிர்பார்க்கப் படுகின்றனவா? அல்லது, இந்தியாவின் யுத்த முயற்சியை அபரிமிதமாய்ப் பெருக்கப் பிரயத்தனம் ஏதாவது நடக்கப்போகிறதா? அதை நம்மால் சொல்ல வியலாது.

கதம்பம்

'பான்ஸர் டிவிஷன்'

ஜெர்மனியின் டாங்கிப் பட்டாளத்தைப்பற்றி, '**பான்ஸர் டிவிஷன்**' என்று அடிக்கடி செய்தி வருகிறது அல்லவா? இந்த 'பான்ஸர் டிவிஷ'னில் என்னென்ன அடங்கியிருக்கின்றன என்று தெரிய வேண்டாமா? அந்த ஜாபிதாவைப் பாருங்கள்:

கனமான டாங்கிகள் ...	48
நடுத்தர டாங்கிகள் ...	84
லேசான டாங்கிகள் ...	252
துருப்புகளைத் தாங்கிச் செல்லும் மோட்டார்கள் (டாங்கிகளைப் போலவே கம்பளிப் பூச்சிக் கால்கள் உடையவை.) ...	230
பீரங்கிகள் ...	96
தாழப் பறந்து குண்டு வீசும் 'டைவ் பாம்பர்' என்ற விமானங்கள். ...	27
கவச மோட்டார் ஸைக்கிள்கள் ...	258
இதர விதமான சேவைகள் புரியும் மோட்டார்கள்.	1000
மோட்டார்களில் ஏறிய காலாள் துருப்புகளும் எஞ்சினீர்களும் சமிஞ்ஞை ஊழியரும் அடங்கிய பட்டாளங்கள்.	4

நேரம் தவறும் சர்ச்சில்

'இன்ன நேரத்தில் உங்களைச் சந்திக்கிறேன்' என்று யாருக்காவது வாக்களித்தோமானால், நிமிஷமும் பிசகாமல் அந்த நேரத்தில் போய் நிற்பதுதான் மரியாதை. இந்த மரியாதை இந்தியருக்குத் தெரிவதில்லை என்றும், ஆங்கிலேயர் இதில் தவறுவதேயில்லையென்றும் சொல்லுவார்கள். ஆனால் பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ. சர்ச்சில் மட்டில் இதற்கு விலக்காவார். தம்மிடம் குறித்த நேரத்துக்குப் பிறர் வரத் தவறினால், சர்ச்சிலுக்கு மகா கோபம் வருமாம். ஆனால் அவர் மாத்திரம் 15 நிமிஷம் முதல் ½ மணி நேரம் வரையில் பிறரைக் காக்க வைக்காமல் விடுவதில்லையாம். பின்னால் எழாம் எட்வர்ட் மன்னரானாரே, அவர் வேல்ஸ் இளவரசராய் இருந்த காலத்தில், சர்ச்சில் ஓர் உதவி லெப்டினன்ட் பதவி வகித்துக்கொண்டிருந்தாராம். அப்போது சர்ச்சிலை வேல்ஸ் இளவாசர் ஒரு விருந்துக்கு அழைத்தாராம். அச்சமயம் 50 நிமிஷ நேரம் ராஜ குடும்பத்தினரை, விருந்தாளி சர்ச்சில் காக்க வைத்துவிட்டார்.

யோக்கியதை உண்டா?

அமெரிக்காவிலே, ஓர் அரசியல் கட்சியின் அபேட்சகராகத் தேர்தலுக்கு நிற்க ஒருவர் விரும்பினார்.

அவரிடம் கட்சிக் காரியதரிசி இவ்வாறு கூறினார்: "900 பவுன், தேர்தல் செலவுகளுக்காகக் கட்ட வேண்டும். 500 பவுன், சங்கத்துக்கு நன்கொடையளிக்க வேண்டும். 200 பவுன், உள்ளூர்த் தர்மங்களுக்கு ஆண்டு தோறும் அளிக்க வேண்டும். இதற்கெல்லாம் சம்மதித்தீர்களானால், எங்கள் கட்சி அபேட்சகராயிருக்க உங்களுக்குத் தகுதி உண்டு என்று தீர்மானிப்போம்."

வந்தவரின் பதிலாவது: "இதெல்லாம் சரிதான். ஆனால், என்னை அபேட்சகராய்ப் பெற உங்கள் கட்சிக்குத் தகுதி உண்டா என்று முடிவு செய்யவேண்டாமா? இல்லை என்பதே என் முடிவு."

பாம்பின் கால் பாம்பறியும் ; கவி
யின் பெருமையைக் கவி அறிவார் :

: தாகூரைப்பற்றி ஐரிஷ் கவிஞர் :

—(வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.)

நமது கவிஞர் தாகூரைப்பற்றி, ஐரிஷ் கவிஞர் ஏட்ஸ் தமது மனப்பூர்வமான கருத்துக்களை வெளியிட் டிருக்கிறார். தாகூரின் கீதாஞ்சலியில் மண்டிக்கிடக்கும் இலக்கியச் சுவையின் நிழலை, ஆங்கில மொழிபெயர்ப்பில் கண்ட மாத்திரத்திலேயே, ஏட்ஸ் பெரிதும் அதிசயித்து விட்டார்.

“மொழிபெயர்ப்பில் வெறும் வசன காவிய நிலையிலேயே, இவ்வளவு எண்ணப் பொலிவும், கற்பனை கதியும், சிந்தனை யொளியும், உள்ள அமைதியும், சொல் இனிமையும், ஆத்ம விமர்சனமும் கலந்து மிளிரும்போது, மூல வங்காளியில் உண்மைச் சுடர் களங்க மற்று ஜொலிக்கு மல்லவா? மூலமொழியில் கீத அலையும் சேர்ந்து வீசி இசைச் சிகரமாக வளர்ந்திருக்க வேண்டுமல்லவா? மூலத்தில் உள்ள சங்கீதச் சுடரின் ஜோதி வெள்ளத்தை, ஆங்கிலத்தில் எப்படி அழகுடன் மொழிபெயர்த்து அமைக்க முடியும்? நான் இந்தக் கீதாஞ்சலியின், ஆங்கில மொழிபெயர்ப்பை வசன காவிய நிலையிலே உணர்ந்து, அச்சிடுவதற்கு முன்னமே, கைப்பிரதியைப் படித்துக் களிப்படைந் திருக்கிறேன்............ மோட்டாரிலும் டிராமிலும் இதை விடாது படித்து மகிழ்ந்திருக்கிறேன்” என்று ஏட்ஸ் கூறுகிறார். இதுவே புதுமைக் கவியென்றும், இலக்கிய மறுமலர்ச்சி என்றும், ஓர் உண்மைக் கவியே ஆத்ம அழகை இயற்கை உள்ளத்துடன் சமைக்க ஆற்றலுடையவன் என்றும், உண்மைக் கவியின் உள்ள வெளியீடே கீத கோபுரமென்றும் ஏட்ஸ் நன்கு உணர்ந்திருக்கிறார்.

ஒரு ஜெர்மன் கவிஞரைப்பற்றி, அவர் எழுதிய கவிகளிலிருந்து மாத்திரம் பூரா வரலாற்றையும் ஒருவன் தெரிந்துகொள்ள முடியாது. அதுபோலவே தாகூர் எழுதிய கீதாஞ்சலியைப் படித்துவிட்டு, ஆசிரியரின் வரலாற்றைப் பூராவும் எவனும் தெரிந்து கொள்ளமுடியாது. அந்த வரலாற்றைத் தெரிந்து கொள்ளத் தமக்கு மிகுந்த ஆவல் உண்டானபடியால், ஒரு வங்காளி டாக்டரிடமிருந்து அதைக் கொஞ்சம் தெரிந்து கொண்டு மனந் தெளிந்து பரவசமடைந்ததாகவும் ஏட்ஸ் கூறுகிறார்.



ரவீந்திரநாத தாகூர்

தாகூரின் வாழ்க்கை சம்பந்தமான சில உண்மைகளை ஏட்ஸுக்குக் கூறினார் வங்காளி டாக்டர். “தாகூரின் கவிகளை நான் தினசரி படிக்கிறேன். உலகக் கவலைகளைப் போக்க, அவரது கவிகளின் ஒரே வோர் அடியே சிறந்த ஆத்ம சாதனமாக இருக்கிறது; வங்காளத்தில் பல கவிகள் இருக்கிறார்கள்; ஆனால் தாகூருக்கு எவரும் நிகரில்லை” என்று அவர் கூறினார். நவ இலக்கிய மலர்ச்சியை வங்காளிகள் தாகூரின் கலை இயக்கமாகக் கொண்டாடுகிறார்கள். வங்காளிகளிடம் தாகூர் கீர்த்தியில் வளர்ந்தோங்கியிருப்பதுபோல், ஐரோப்பியக் கவிகள் யாரும் கீர்த்தி பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. கவிதையிலும் சங்கீதத்திலும் சம உச்சியைத் தொட்டு, செவிநுகர் கனியாக ஆழ்ந்து அனுபவித்தவர் தாகூரே. வங்காளி பாஷை பரவிய இடமெல்லாம் அவருடைய பாட்டு எல்லாராலும் பாடப்படுகிறது. இளமையில் அவர் எழுதிய முதல் நாவலும் அதன்பின் எழுதிய நாடகங்களும் இன்னும் கல்கத்தாவில் நடித்து அனுபவிக்கப்பட்டு வருகின்றன. இளமை முதல் பூந்தோட்டத்தில் நுழைந்து, உள்ளத்தை இயற்கைக் கோயிலில் பறி கொடுத்து, விசித்திர சங்கீதமும் சித்திரக் கவிதையும் வளர்த்துப் புகழ் மண்டியவர் தாகூர். தமது இருபத்தைந்தாவது வயது முதல் முப்பத்தைந்தாவது வயது வரையில் துக்கப் பொய்கையில் வளர்ந்தோங்கிய காதற் கவிதைப் போதை, உள்ளம் பூரித்து, நிகரற்ற வங்காளி மொழியில் அவர் வரைந்து வைத்திருக்கிறார். அவரே வாழ்க்கையைக் கண்டு பயந்து வெறுக்காத உண்மை முனிவர் ; தத்துவஞானி. அவருடைய கவிதைத் தருவில் ஒளிர்வதெல்லாம் வாழ்க்கையின் உண்மைக் கனிகள்; எல்லாம் உண்மைச் சுடர்கள்.

கவிஞர் தாகூர் தினந்தோறும் காலையில் மூன்று மணிக்கு எழுந்து, தியானத்தில் ஆழ்ந்து, மனச்சாந்தியுற்று, இரண்டு மணி நேரம் கடவுளையே சிந்திப்பதாகவும், தாகூர் பிறந்த குடும்பமே கலைக் குடும்பமென்றும், தாகூரின் கவிதை, கலை அரணில் உதயமாகி உலகெங்கும் சுடர் பரப்புகிறதென்றும், கவி ஏட்ஸுக்கு மற்றோர் இந்தியர் விவரித்தார். இதைக் கேட்ட ஏட்ஸ் உள்ளம் பூரித்தார்.

வங்காளக் கவிதையும், மதமும் ஒன்றையொன்று அணைந்து ஐக்கியம் பெற்று வளர்கின்றன. எத்

தனை யுகங்கள் மாறினாலும், எவர் நாவிலும் இன்பத்தோடு தவழும் இயல்புடையது 'கீதாஞ்சலி'. யாரும் வீதியிலே பாடிப்பாடிப் பரவசமடையத்தக்கது அது. பட்டிக்காட்டுக் கோட்டிகளும் கூட இவ்வின்னிசையில் உள்ளத்தைப் பறிகொடுத்து விடுவார்கள்.

கீதாஞ்சலியின் மூலமான வங்காளக் கவிகளில் ஓசை இன்பம் மிக நுட்பமாய் அமைந்திருக்கிறதென்றும், புது முறையான சங்கீத மெட்டுக்களிலே அவை இயன்றிருக்கின்றனவென்றும், வேறு பாஷைகளிலே மொழிபெயர்க்க முடியாத இன்ப வெள்ளம் அவற்றிலே நிறைந்திருக்கிறது என்றும் ஏட்ஸுக்கு அந்த இந்திய நண்பர்கள் சொன்னார்களாம்.

தாகூரின் கீதாஞ்சலியிலே, ஏட்ஸின் சொந்த அனுபவம் என்ன? "உயர்ந்த கலையின் மறுமலர்ச்சியாகவே, அவருடைய கருத்தைக் கீதாஞ்சலியிலே நான் இன்பத்துடன் சுவைக்கிறேன். இருந்தாலும், வெறும் மண்ணிலிருந்து வளரும் பசும்புல்லும் நாணலும் போல அது மண்டி நிற்கிறது. பல தலைமுறைகளாய் உயர்ந்தோங்கிய எண்ணங்களின் வெளியீடாய் வளர்ந்து வந்த இலக்கியம், இந்தக் கவிஞரின் வாயிலாக, உவமையணியாகவும் உணர்ச்சிச் சித்திரமாகவும், திரும்பவும் சாதாரண ஜனங்களின் உள்ளத்தில் வந்து பாய்கிறது. ஆங்கிலத்திலே சாஸருக்குமுன் தோன்றியவர்கள்போல, தாகூர் தம்முடைய பாசுரங்களில் அமையும் சொற்களுக்குச் சங்கீதம் ஊட்டுகிறார். சொற்கள் இயற்கையாகவும், நிறைமொழித் தேனாகவும், வெள்ளப் புரட்சியாகவும், விந்தை பொதிந்த இனிமை சுரந்த நாதகீத அலைச் சுடராகவும், சாந்தம் நிறைந்த சிந்தனைத் தீபமாகவும் வளர்ந்து, சொல்லோவியம் தீட்டுகின்றன. கீதாஞ்சலியைக் காதலர்கள் பாடினால், கடவுட் காதல் வளர்ந்து, அதிலே துக்கம் கரைந்து, காதலர்களின் இனிய யௌவனம் திரும்புகிறது. ஏழைகளின் உள்ளத்திலும் இன்பத்தேன் கொட்டும் ஆற்றலுடைய எளிய இனிய உண்மை ஒலிபரப்பும் நடையில் சிறந்தவை இக்கவிகள். மலர்களும், ஆறுகளும், சங்கநாதச் சிறப்பும், இந்தியாவில் ஜூலையிலே பொழியும் தாங்க முடியாத மழையும், நெருப்பும் வெயிலும், காதலர்களின் உறவையும் பிரிவையும் விஸ்தரிக்கும் உவமையணிகளாய் இவற்றிலே அமைகின்றன. ஆற்றிலே மிதந்துவரும் படகில் முரளி வாசிக்கும் ஓர் உருவம், சீனர்கள் வரையுமொரு சித்திரத்தில் உள்ளது போல், இவற்றிலே தெய்வக் காட்சியளிக்கிறது. மேல் நாட்டாராகிய நமக்கு முன்பின் தெரியாததொரு நாகரிகக் கலையே இந்தக் கவியின் உள்ளத்தில் கற்பனைசன்னதமாக உருக் கொண்டிருக்கிறது. அதிலே சிற்சில சமயங்களில் ராஸெட்டியின் சிந்தனைச் சுடர் அலைவீசக் காண்கிறோம். தாகூரின் கீதாஞ்சலியில், ஒவ்வொரு சொல்லும் ஒரு தியாகச் சுடராகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அவரது கவிதை ஓர் உண்மைப் பேரோவியமாக, உணர்ச்சிக் கோபுரமாக, விந்தைச் சிறகுடன், காவிய உள்ளம் பெற்று, உள்ளும் புறமும் ஊடுருவிப் பாய்கிறது. அதிலே நான் பெற்ற இன்பம் முடிவற்ற இன்பம், வற்றாத இன்பம்" என்று கவிஞர் ஏட்ஸ் அருமையாக அனுபவித்து முடிவு கட்டுகிறார்.

பாத்திரங்களில் எழுத்து எழுத ஒரு வழி

மருந்து ஷாப்புகளில் கிடைக்கிறதல்லவா 'டிஞ்சர் அயோடின்'; அது காயங்களுக்கு உபயோகப்படுவது நம்மில் பலருக்குத் தெரியும். ஆனால், அதன் ஓர் ஆச்சரிய உபயோகம் அப்படித் தெரிந்திருக்க நியாயமில்லை.

'டிஞ்சர் அயோடினை'க்கொண்டு, இரும்பு உள்பட அநேக விதமான லோகங்களில் நம்மிஷ்டப்படி மிகச் சுலபமாக எழுத்து எழுதிவிடலாமாம்.

குளோப் விளக்குகளுக்குப் போடும் மெழுகு வர்த்தி ஒன்றை எடுங்கள். பாத்திரத்தில் எந்த இடத்தில் எழுத விரும்புகிறீர்களோ அங்கே, இந்த மெழுகு வர்த்தியைக் கொளுத்தி, அது உருகிவிழும் ஒரு சொட்டுப் பசையை விடுங்கள். அந்தச் சொட்டுப் பசை மிக மெல்லிய தகடாய்ப் பரவும் வரை சூடு காட்டிக் கொண்டிருங்கள். அது குளிர்ந்து இறுகட்டும். பிறகு, அந்தப் பசை தடவிய இடத்தில ஓர் ஊசி முனையால் உங்களுக்கு விருப்பமான எழுத்தைக் கீறி விடுங்கள். இப்படிக் கீறிய இடத்தில் ஒரு சொட்டு 'டிஞ்சர் அயோடினை' விடுங்கள். சற்றுப் பொறுத்து மெழுகுவர்த்திப் பசையையும் 'டிஞ்சர் அயோடினை'யும் அழித்து விடுங்கள். நீங்கள் எழுதிய எழுத்து இப்போது பாத்திரத்திலே நிரந்தரமாய்ப் பதிந்திருக்கக் காண்பீர்கள்.

*　　*　　*

கோரத்தின் சக்தி

லண்டனிலே உள்ள தேசீயப் பிரபலஸ்தர்களின் சித்திரப் படக்காட்சிச் சாலையில் (நேஷனல் போர்ட்டிரெய்ட் காலரி) போய்ப் பாருங்கள். சென்ற 400 வருஷங்களில் இங்கிலாந்திலிருந்த பல துறைப் பிரபலஸ்தர்களின் படங்களையும் அங்கே காணலாம். பெரிய ஆர்ச் பிஷப்புகள், மகா பண்டிதர்கள், சிறந்த ராஜதந்திரிகள் முதலிய பலரும் பெரும்பாலும் கோரமாயிருப்பதை, அந்தப் படங்களிலே கண்டு ஆச்சர்யப்படுவீர்கள்.

கோர ரூபத்துக்கு, தர்ம சக்தி உண்டாகிறது. முதலாவதாக, கோர ரூபிக்குக் காதலிலே சுலபமான வெற்றி கிடைக்காது. ஆகையால், தனது திறமைகளைப் பெருக்கிக்கொண்டு ஆச்சர்யச் செயல்கள் புரிந்து வெற்றி பெற்று அதன் மூலம் தன் காதலியின் பாராட்டைப் பெறவேண்டுமென்ற ஆவல் அவனுக்கு உண்டாகிறது.

மேலும், கோர ரூபிக்குச் சக்தியும் இருக்குமானால், பெரும்பாலும் எப்போதும், ஜனங்கள் அவனிடம் சலுகை காட்டுகிறார்கள். அவனுக்குமேல் இருப்பவர்கள், அவனிடம் பொறாமை கொள்ளுவதில்லை; அவனை அசட்டை செய்வதுமில்லை. அழகான-ஆனால் சர்வசாதாரணமான-உருவத்தைவிட, அசாதாரணமான உருவத்தையே ஜனங்கள் எப்போதும் நன்கு நினைவில் வைக்கிறார்கள்.

—ஆன்ட்ரி மராய்.

கலையில் சிறந்த திருப்பரன்குன்றம்

(ஜே. எம். சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.)

தென்னாட்டுக் கோயில்கள், கலைச் செல்வமாகும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த மலையுச்சிகளில், கண்ணுக்கினிய, கருத்துப் போதிந்த சிற்பமும் சித்திரமும் கொழிக்க, அவற்றில் பல அமைந் திருக்கின்றன. அத்தகைய தோன்று திருப்பரன்குன்றம்.

மதுரைக்குத் தென்மேற்கில், நான்கு மைல் தூரத்தில், கடல் மட்டத்துக்கு மேல் 1048 அடி உயரம் செங்குத்தாக ஓங்கிய குன்றமொன்று இருக்கிறது. அதுதான் திருப்பரன்குன்றம். அக்குன்றத்தின் பின்பக்கத்திலுள்ள நகருக்கும் அதே பெயர் வழங்குகிறது. குன்றமும் அதனடியிலுள்ள கோயிலும் முருகக் கடவுளுக்குச் சிறந்த இடமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

ரயிலடியிலிருந்து பார்க்கும்பொழுது, குன்றம் ஒரு சிவலிங்கம் போலத் தோன்றுவதால், குன்றத்தை எல்லோரும் சிவலிங்கமாகவே கருதி வணங்குகிறார்கள். கிரிவலம், அங்கப் பிரதட்சணம் செய்பவர்களும், கோயில் திருவிழா ஊர்வலங்கள் நடத்துபவர்களும், திருக்கலியாணத் தேர் ஓட்டுபவர்களும், காவடி எடுப்பவர்களும் அந்தக் குன்றத்தைச் சிவலிங்கமெனக் கருதியே, இடது புறமாகச் சுற்றி வருகிறார்கள்.

சென்னைக் கடுத்துள்ள திருக்கழுக் குன்றத்தைப் போலவே, மதுரையிலுள்ளவர்களுக்குத் திருப்பரன்குன்றம் உடல் நலத்தைக் கொடுக்கக்கூடிய இடமாகவும் பயன் விளைவித்து வருகிறது.

இந்த ஸ்தலத்தில் பன்னிரண்டு தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றிற்குள்ளே சரவணப்பொய்கை, சத்தியவாகூவம், பிரம்மகூவம், உமையாண்டவர் தீர்த்தம் ஆகியவை சிறந்தவையாகும். கோயிலுக்குள் சந்நியச்சி என்ற ஒரு கிணறு இருக்கிறது. அதன் நீர், நீரழிவு முதலிய கடுமையான நோய்களைப் போக்கக்கூடிய குணமுடையது என்று கொண்டாடுகிறார்கள்.

பழநி மலையில் இருப்பது போல, திருப்பரன்குன்றத்தையும் அதனுள்ளிருக்குங் கோயில்களையும், இந்துக்களும் முஸ்லீம்களும் தத்தமக்குரியவை என்று பாவித்து, ஒருங்கே கொண்டாடுகிறார்கள். இந்தக் குன்றத்துக்கு ஸ்கந்தர் மலை எனவும், சுப்பிரமணியர் மலை எனவும் பெயருண்டு. சுல்தான் சிக்கந்தர் ஜுல் கர்மீன் பாட்சா என்ற அருள்வாய்ந்த பக்கிரி ஒருவர் அக்குன்றத்தின் உச்சியில் அடக்கமாயிருக்கிறதாகச் சொல்லி, மலையில் ஓர் இடத்தைச் சிக்கந்தர் மலையென்று முஸ்லீம்கள் அழைக்கிறார்கள்.

ஆரம்பத்தில் பாறையில் செதுக்கியுள்ள படிகள்மீதும், பிறகு காலடி வைக்கக்கூடிய சிறு பள்ளங்கள் போன்ற மாடங்களின் மீதும் ஏறி, உயரச் செல்ல வேண்டும். இரு பெரும் பாறைகளின் இடுக்கில் அவரது சமாதி இருக்கிறது. அங்கேதான் அந்தப் பெரியார் வாழ்ந்திருந்து பின்னர் அடக்கமானாராம். அந்தச் சமாதிக்கு முன்பு ஒரு மண்டபம் இருக்கிறது. அதனுடைய தூண்கள் இந்து முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அம்மண்டபத்தின் உச்சியோ, செங்கற்களால் கட்டிய வளைவுடனும், முஸ்லீம்களின் நீண்ட சிறு கோபுரங்களுடனும் அமைந்திருக்கிறது.

இம்மலையின் தென்பக்கத்தில், பாதி உயரத்தில், அகன்ற பெரிய திமில்போன்றதொரு பாறை யிருக்கிறது. இந்தப் பாறையின் ஒரு பக்கம் வெளியே ஆகாயத்தில் நீண்டிருக்கிறது. அந்தப் பக்கத்தில், 18 அடி உயரத்தில், $2\frac{1}{2}$ அடி நீளமும் 2 அடி அகலமுமுள்ள இரு சதுரங்கள் கல்லிலே செதுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சதுரங்களில், தொங்கிய கைகளுடனும் நின்ற கோலத்திலும் ஆடையில்லாத சில சமண உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்தச் சிற்பங்கள் கைக்கெட்டாத உயரத்தில் இருக்கின்றன. அந்தப் பாறையின் பக்கத்திலுள்ள பிளவில் எப்பொழுதும் நீர் நிலைத்திருக்கிறது. இந்தச் சுனையின் ஆழம் இவ்வளவென்று சொல்லமுடியாது.

தென்பாகத்திலே சிறிது அப்பால் காசிவிசுவநாதருக்கு ஒரு சிறிய கோவிலிருக்கிறது. இங்கே, மேல் குறிப்பிட்ட சுனை அகன்றிருக்கிறது. அந்தச் சுனையின் நீரைக் கையால் அசைத்து, "காசி விசுவநாதா" என்று அழைத்தால், அதிலுள்ள மீன்கள் உணவு கொள்ள வருகின்றன. இந்தக் கோயிலின் பாறையில், காசிவிசுவநாதர், விசாலாட்சியம்மன், கணேசர், சுப்பிரமணியர், பைரவர் முதலான தெய்வ உருவங்கள் அழகாகவும் அருமையாகவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் பக்கத்தில் பிரம்மதேவர் பஞ்சலிங்கத்துக்குப் பூசை செய்வதும் செதுக்கப்பட்டிருக்கிறது.

தென்புறத்தில் மலையடிவாரத்தில் கல்லிலே குடையப்பட்ட உமையாண்டவர் கோயில் இருக்கிறது. அதன் நீளம் 19 அடி, அகலம் 17 அடி, உயரம்



திருப்பரன்குன்றம்

9 அடி. இந்தக் கோயிலின் பின் சுவராகிய பாறையில், நடராஜரின் தாண்டவ உருவமும், மகாவிஷ்ணு மிருதங்கம் அடிப்பதும், காளியும் வெகு அழகாகச் செதுக்கப்பட் டிருக்கின்றன. ஆயினும் இந்தச் சிலைகளின் கீழ்ப்பாகங்கள் முழுவதும் சிதைந்து போயிருக்கின்றன. இவற்றுக்குக் கிழக்குத் திசையில், சுப்பிரமணியர், வள்ளி தெய்வானையுட னிருக்கும் கோலமும் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோவிலின் மேற்குப் புறத்தில் 8 அடி சதுரமுள்ள தோர் அறை இருக்கிறது. அதில் அர்த்தநாரீசுவரர் - உமையொருபாகமுடையவர் - பாதி உடல் பெண்ணும் பாதி உடல் ஆணுமான வடிவம் - செதுக்கப்பட்டிருக்கிறது. கோயிலின் வெளிப்புறத்தில் பல ரிஷிகளின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கற்கோயில் மிகப் பழையதாகும். மதுரை ஜில்லாவிலுள்ள கற்கோவில்களில், இதுதான் மிகச் சிறந்தது. இக்கோயிலைப் போலவே திருச்சினாப்பள்ளி மலைக்கோட்டையிலும், பல்லவ அரசனாகிய முதலாவது மகேந்திரவர்மன் (கி.பி. 610 - 640) ஒரு கற்கோவில் வெட்டியிருக்கிறான். திருப்பரங்குன்றத்துக் கற்கோவிலின் கிழக்குப் பாகத்திலுள்ள கல் முழுவதும் எழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. முதலாவது மாரவர்மன் சுந்தரபாண்டிய அரசன் (கி. பி. 1215-1235), தான் அரசுக்கு வந்த ஆறாவது ஆண்டில், இந்தக் கோவிலின் பரிபாலனத்துக்காகப் பல கிராமங்களையும் மிகுந்த பொருளையும் நன்கொடையாக அளித்திருக்கிறான். இதை அந்த நீண்ட கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இன்னும், திருப்பரன்குன்றம் என்ற இந்தக் கிராமத்தை, பராக்கிரம பாண்டியன் என்ற மன்னன் தில தானமாக விட்டானென்றும் வெளியாகிறது. ஆங்கில அரசாட்சி நிலை பெற்றதும், கிராமத்தை அயனாக மாற்றி, அதற்குப் பதிலாக, ஆண்டுதோறும் சர்க்கார் மோகினியாக ஒரு தொகையை இக்கோயிலுக்குக் கொடுத்து வருகிறார்கள். சமீபத்தில் தான், இந்த மலையைப்பற்றிய ஒரு வியாச்சியம் பிரிவி கவுன்சிலில் முடிவாகி, இத்திருமலை தேவஸ்தானத்தாரின் உரிமையாயிற்று. சரித்திர சம்பந்தமாக இம்மலையானது இன்னும் முழுதும் ஆராய்ந்து பார்க்கப்படவில்லை. அப்படிச் செய்தால், இன்னும் பல சரித்திரக் குறிப்புக்களும், பழமையான சிற்ப-சித்திரச் சிறப்புக்களும் தென்படக்கூடும். சிறப்பாக, இதன் கல்வெட்டுச் சாசனங்களே இதற்குப் பெருமை தந்திருக்கின்றன.

இந்தத் திருப்பரன்குன்றத்தின் செங்குத்தான மேற்குப் பக்கத்தில், அதிக உயரத்தில் இரண்டு குகைகள் இருக்கின்றன. அவைகளில் ஆறு படுக்கைகள் கற்பாறையில் அமைக்கப்பட்டுள்ளன. அங்கே பிராமி பாஷை எழுத்துக்களும் செதுக்கப்பட் டிருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னூறு வருஷங்களுக்கு முன், புத்த பிக்ஷுக்கள் இந்தக் குகைகளில் வாழ்ந்திருக்க வேண்டுமென்று இவ்வெழுத்துக்களால் தெரியவருகிறது. பாறையில் வெட்டப்பட்டிருக்கும் சிறு குழிகளின் மூலம் கொஞ்சம் சிரமப்பட்டு ஏறினால், இந்தக் குகைகளுக்குப் போய்ச் சேரலாம்.

சுப்பிரமணியரின் பெருங்கோயில், மலையின் வட பக்கம் அடிவாரத்தில் இருக்கிறது. விஷ்ணு, சுப்பிரமணியர், துர்க்கை, விநாயகர், ஈசுவரர் முதலியவர்களின் மூலஸ்தானங்களும் அவற்றின் அர்த்த மண்டபங்களும் அம்மலையிலே குடையப்பெற்ற கற்கோயிலாகும். சுவாமி பெயர் பரங்கிரி நாதேசுவரர்; அம்மன் ஆவுடை நாயகி. இதன் முன்பு ஒன்றன்கீழ் ஒன்றாகப் பல பெரிய மண்டபங்கள் உள. எல்லாவற்றுக்கும் கீழே உள்ளதும், ஜனங்கள் முதன்முதல் நுழைவதுமான ஒரு மண்டபம் பெரியதாயும் சிற்ப வேலையில் சிறந்துமிருக்கிறது. அதன் தளம் பருக்கைக் கற்பாறைகளால் பாவப்பட் டிருக்கிறது. சிற்ப வேலை நிறைந்த ஒரே கல்லால் ஆகிய 20 முதல் 24 அடிவரை உயரமுள்ள 48 தூண்கள், மண்டபத்தைத் தாங்குகின்றன. அந்த மண்டபம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதன் நடுப்பாகம் 115 அடி நீளமும் 94 அடி அகலமும் இருக்கிறது. இந்த மண்டபம் திருமலைநாயக்க மன்னரால் (கி. பி. 1623-59) கட்டப்பட்டது. சுந்தரபாண்டியன் கோயில் என்று விவரிக்கப் பட்டது இதுதான்.

1559-ஆம் ௵ முதல் 1600-ஆம் ௵ வரையில் மதுரையை ஆண்ட முதல் விசுவநாத நாயக்கரின் புகழ்மிக்க மந்திரியாகிய அரியநாத முதலியாரின் கற்சிலையும் நாயக்க மன்னரில் சிறப்பு வாய்ந்த திருமலைநாயக்கரின் கற்சிலையும் பிரதான கோயிலின் அர்த்தமண்டபத்தில் இருப்பதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

சமீபகாலமாகிய 18-ஆம் நூற்றாண்டில் இந்தச் சிறு மலையும் மதுரை நகரின் ஓர் இராணுவ அரணாக இருந்ததெனத் தெரிகிறது. அதைக் காட்டும் சின்னங்கள் இதற் கணித்தாகப் பல இடங்களில் சிதறுண்டு கிடக்கக் காண்கிறோம். 1792-ஆம் ஆண்டில், ஆங்கிலப் படையினர், பலவந்தமாக இந்தக் கோயிலுக்குள் செல்ல எத்தனிக்கவே, குட்டி என்ற ஆதி சைவக் குருக்கள் ஒருவர், "அப்படிச் செய்தால், நான் கோயில் கோபுரத்தினின்றும் கீழேவிழுந்து என் உயிரைப் போக்குவேன்" என்று கூறி, அப்படியே விழுந்து விட்டாராம். அதன்மேல், ஆங்கிலேயர் அச்செயலைக் கைவிட்டனராம். குட்டியும் ஆண்டவன் அருளால் உயிர் பிழைத்துவிட்டாராம். அவரது தீரச்செயலை வியந்து அவருக்கு நில தானம் ஒன்றை அதிகாரிகள் ஏற்படுத்தியதாக இங்குள்ள ஒரு கல்வெட்டு கூறுகிறது.

தென்னாட்டிலுள்ள அருள் ததும்பிய பல திருத்தலங்களில், புராதனத்திலும், கலைகளின் வளர்ச்சியைக் காட்டக்கூடிய பண்பிலும், திருப்பரன்குன்றம் மிக்க மேம்பட்டதாகும்.

அமெரிக்காவின் மும்முரம்

ஆயுத உற்பத்தியில் அமெரிக்கா வெகு தீவிரமாக இறங்கியிருக்கும் விவரம் லண்டன் 'டெய்லி ஹெரால்டு' கட்டுரை யொன்றில் காணப்படுகிறது. நாடெங்கும் தொழிற் சாலைகள் புதிது புதிதாய் முளைத்துவருகின்றன; வேலையில்லாமல் திண்டாடிய லட்சக்கணக்கானவருக்கு வேலை கிடைத்து விட்டது. அமெரிக்க சர்க்கார் ஆர்டர் கொடுத்திருக்கும் பற்பல ஆயுதங்களில் முக்கியமான சிலவற்றின் ஜாபிதா பின் வருமாறு :

விமானங்கள்	50,000
விமான எஞ்சின்கள்	1,30,000
கன பீரங்கிகள்	17,000
குண்டுகள்	3,30,00,000
லேசு பீரங்கிகள்	9,000
மெஷின் கன்கள்	3,00,000
ஆட்டொமாடிக் ரைபிள்கள்	4,00,000
யுத்தக் கப்பல்கள்	380



பாக்டரியிலிருந்து நேராய் உங்கள் வீட்டிற்கு

அஷ்ராப் குளுகோஸ் காரமெல்

1-பவுண்டு அட்டைப்பெட்டியில் 90 துண்டுகள்

ரூபாய் **1-க்கு** உங்கள் வீட்டு வாசலில்

தும்பு தூசுகள் படாமலும் ஈக்கள் மொய்க்காமலும் காகிதம் சுற்றி காப்பாற்றியிருக்கும் தின்பண்டங்களின் தாரதம்மியத்தை தாய் தந்தையர்கள் உணரவேண்டும். உங்கள் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்காக வீட்டில் **அஷ்ராப் மயில் மார்க்கு குளுகோஸ் காரமெல்.** எப்போதும் ஒரு பெட்டி வைக்கவும்.

இண்டஸ்டிரியல் டிரேடிங் கம்பெனி,

56, வெங்கடமேஸ்திரி தெரு, மண்ணடி, மதருஸ்

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணாசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

ஆமண்டு ஜேம்ஸ் போமேட்

தலைக்குச் சிறந்தது

நல்ல

பழங்களுக்கு

FANCY FRUIT STALL

Corporation Fruit Market

Madras.

CHROMECO AGENCY

NEXT TO GOKHALE HALL

சேலைகளுக்கு

— சிறந்த இடம் —

N. C. B.

—கார்னர் ஷாப்—

C. N. பாலுசாமி ஐயர் & சன்
86, நயினியப்ப நாய்க்கன் தெரு,
மதருஸ்.

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கை கண்ட இந்திய மருந்து! இதுவே. ஆயிரக் கணக்கானவர்கள் விற்கிறார்கள்.

அமிர்தாஞ்சனம் லிமிடெட்

மதருஸ் பம்பாய் கல்கத்தா


Bengal
for
BETTER
LIGHT
BENGAL

காலத்தேர் தொடர்ச்சி

காலத்தேர்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

ஐந்தாம் அங்கம்

ஐந்தாங் காட்சி

[தியானமந்திரம், **ஜோதிமுன் மங்களம்** வணக்கமாக நிற்றல்.]

ஜோதி

குருவரு ளாலே, அன்பர்
குலத்தினைத் தாங்குந் தெய்வத்
திருவரு ளாலே, தீமை
தீர்ந்தது ; நன்மை கண்டோம் ;
இருவரும் காலத் தேரில்
இனிஅருள் வழியிற் செல்வோம் :
வருகநீ எந்தாய்! சக்தி ;
மங்களத் திருவே வாழி!

கனவோ நனவோ... காலத் தேரின்
வடத்தை யிழுக்கும் வல்வினைக் குலங்கள்
எத்தனை இடர்களை, எப்படித் தாண்டி,
நம்மை மீண்டும் நலமுறச் சேர்த்தன...
அப்துல் லாவும், அருமை மில்லரும்,
வள்ளியும், கண்ணனும், வாய்மைச் சீனுவும்,
சொன்ன வெல்லாம் சொற்பனம் போன்றன!
நண்ப ரெல்லாம் நலமுறக் கூடினோம்...
அன்புக் குலமாய் அருளில் வாழ்வோம்.

மங்களம்

மனக் கோயிலிலே தினமும் துதித்தேன்.
முருகன் கருணை முற்றிய தின்று.
இணைபிரி யாமல் இனிநாம் வாழ்வோம்...

ஜோதி

கற்புக் கரசியே, அற்புதத் தேவியே
அன்றுனை ஆசை மலரால் வணங்கினேன்.
காதற் கோயிலில் வைத்துக் கருதினேன்...
யோக முனிவரால் உள்ளந் திறந்தபின்
உன்னுள் சக்தி ஒளிரக் காண்கிறேன்.
சாரதா ஹம்ஸர், சங்கரர் சாரதா,
போலநாம் இருவரும் புனிதராய் வாழ்வோம்,

மங்களம்

உபசாந் தத்தில்; யோகக் கலப்பில்,
உமையே சிவமென உபாசனை செய்து
மாசற வாழும் மகிழ்வே போதும்.

ஜோதி

மங்களம் எனது மாதா வாருக...!
மங்களம் நிலய மாதா வாருக...!
மங்களம் தீனர் மாதா வாருக...!
மங்கள விலாசம் மங்களம் பொங்குக...!

[வருதல் **அப்துல், மில்லர், கண்ணன், வள்ளி, சீனு** முதலியோர்]

எல்லாரும்

வாழ்க ஜோதி, மங்களம் வாழ்கவே!

ஜோதி

அன்பு மணிகள் அனைவரும் வருக!
புகல் கொடுத்த புண்ணிய மில்லர்கள்,
வீரர் அப்துல், உண்மை விரதம்
பூண்ட கண்ணன், புனிதை வள்ளி,
திறமிகு சீனு, செய்யநல் லன்பர்
வருக! வாழ்க ஒருகுலமாகவே!

மில்லர்

ஜோதி, உனது தொண்டுகள் வாழ்க.
சுருக்க மாக சுவர்க்க ராஜ்யம்
இங்கே விளங்கும் இன்பங் கண்டேன்.
எனது முதுமையும், எனது பத்தினி
வாழ்வும் இங்கே வளர்கவுன் பணிக்கே.
மங்களம் எமது மகளே யாவாள்.
எங்களுக் குள்ள இருபது லட்சமும்.
அவளுக் களித்தோம்.

ஜோதி

அன்பு வாழ்க!
தாயும் தந்தையும் தமரும் அனையீர்,
சாதி மதமெனும் சச்சர வின்றி,
இந்து கிறிஸ்து இஸ்லாம் என்ற
பேதமும் இன்றிப் பேரருள் வெளியில்
ஒற்றுமையாக உலகெலாம் வாழலாம்.
அத்தகை வாழ்வு சித்தி பெறவே,
யோகமும் தொண்டும் உண்மையாய்ச் செய்வோம்...
கல்விப் பணியை மில்லர் நடத்துக!
திருமக ளுடனே திருமதி மில்லர்
மங்கள விலாச மாதரை நடத்துக...!

மில்லர்

பாரத முனிவரின் பரமாத்ம ஞானம்
பயிலவும் விரும்பினோம்...

ஜோதி

பயிலுக நன்றே...
இங்கே யோகம் எல்லார்க் கும்பொது.
வாழ்வே யோகம் ; யோகமே வாழ்வு.
கிழக்கொளி யுடனே மேற்கில் வளரும்
நல்ல தொழில்களும், நவயந் திரங்களும்,
இங்கே நாட்டவே யினிநீர் நல்கும்,
பொருளெலாம் பயனும்... புலவரைக் கொண்டு

இயந்திரக் கலைகள் இருவரும் வகுத்து
நடத்திட வேண்டும்...

மில்லர்கள்

ஆஹா நடத்துவோம்...
மின்சா ரத்தால் வெற்றி யுடனே
பலபல தொழில்கள் பயிற்றலாம் இங்கே...

ஜோதி

கிழக்கின் ஞானமும் மேற்கின் சக்தியும்,
இணைந்த வாழ்வே இனிவரும் வாழ்வாம்...

அப்துல்

அந்த வாழ்வே அடியேன் விருப்பமும்...
எனது கட்டளை இத்துடன் முடிந்தது...
இந்தியப் படையை இனிதுறப் பயிற்றலே
எனக்கு வேலை...இப்போர் முடிந்ததும்,
நிம்மதி யாக நிலயம் சேர்ந்து,
சோதிக் காகத் தொண்டு செய்வதே
எங்கள் விருப்பம்...

எல்லாரும்

இனிய விருப்பம்...

ஜோதி

ஞானமும் வீரமும் நாட்டிற் கழகாம்,
ஒவ்வொரு மனிதனும் உலகம் மதிக்க
வீர விளக்காய் விளங்க வேண்டும்...
அந்தப் பயிற்சி அப்துல் தருக !

அப்துல்

ஏசுவின் தியாகமும் இஸ்லாம் உடலும்,
வேதாந்த உள்ளமும், வேண்டும் நமக்கு.
இரும்புத் தசைகளும் இதயக் கருணையும்
இருக்க வேண்டும்...இதுவென் சம்மதம்,

கண்ணன்

எங்கள் மதமும் இப்பொது நெறியே...
செத்துப் பிழைத்தோம்...திருத்தொண் டிற்கே.
வள்ளியும் யானும் இங்கே வாழ்வோம்...
மதுரைச் செல்வமும் வந்து சேரும்
அப்புவும் புண்கள் ஆறி வருவான்.

ஜோதி

கருணைக் கடவுளே, கதிரொளி காட்டினை ;
இழந்த கண்ணை ஈந்தனை மீண்டும் ;
மறைந்த மலரை வளம்பெற வளர்த்தாய்...
எல்லாம் உன்செயல்...எங்கும் உன்னருள்
சின்மய குருவாய் என்னையாட் கொண்டாய்...
குருவடி நிழலில் அருட்பணி புரியும்
திருவே தாராய்...

[வருதல் **தொண்டர்**]

தொண்டர்

தேசிகர் வந்தார் !

ஜோதி

இமயம் சென்ற இறைவர் வந்தார்.
யோக முனிவர் உள்ளன் பருடன்
இங்கே வருகிறார்...மங்களச் செய்தி !
இறைவனை எதிர்கொண் டழைப்போம் வாரீர்...!

[எல்லாரும் எழுதல். வருதல் **யோக முனிவர், முருகனார், சிவனார், வேதாந்தப் பாட்டி.**]

எல்லாரும்

போற்றி, போற்றி, குருவே போற்றி !

ஜோதி

வருக வருக குருமணி நாதா !
எம்மையாட் கொண்ட இறைவா வருக !
அரியணை அமர்ந்தெமை ஆண்டருள் புரிக...!

[யோக முனிவர் பீடத்தில் அமர்தல்.]

ஜோதி, மங்களம், வள்ளி, முருகனார், சிவனார் பாடுதல்

சத்ய சாந்தகன ஜோதீ நமோ நம
ஸஹஜ நிஷ்டானு பூதா நமோ நம
ஸச்சி தானந்தஸ்வ ரூபா நமோ நம
—தவராஜா....
நித்ய மங்கள ப்ரஸன்ன நமோ நம
நிர்க்குண த்ரிபுரி சூன்யா நமோ நம
நிர்வி கல்பசுக போகா நமோ நம
—ஹ்ருதயேசா....
சக்தி குண்டலி ஸமேதா நமோ நம
சகல சித்திபரி பூர்ண நமோ நம
சுத்த தத்வமஸி போதா நமோ நம
—அருணேசா....
பக்த ஸங்கபரி பாலா நமோ நம
பரம ஹம்ஸகுரு நாதா நமோ நம
பாஹி பாஹி பர மாத்மா நமோ நம
—பகவானே....!

[எல்லாரும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தல். குருதேவர் அனைவரையும் புன்னகையுடன் ஆசீர்வதித்து அமர்த்தல்.]

மங்களம்

குருவே வணக்கம்...அருளே வணக்கம்.
வணக்கம் அப்பா...வணக்கம் பாட்டீ...

எல்லாரும்

ஜோதி மங்களம் சுபமாய் வாழ்க...!

சிவனார்

குருவரு ளாலே திருமிக வாழ்க !

பாட்டி

பரம ஞானப் பரிதிபோல் வாழ்க...!

முருகனார்

செந்தமிழ் முருகன் சீர்த்திபோல் வாழ்க !

[வருதல் **சுந்தரி** ; பஞ்சைக் கோலத்துடன் குவளைதட்டிப் பாடி யாடுதல் ; அவளைத் தொடர்ந்து ஒரு போலீஸ்காரன் வருகிறான்.]

சுந்தரி

(பியாகு ராகம்—ஏகதாளம்)

பஞ்சமா பாதகியான்
பாவி பழிகாரி....
அஞ்சாத கொலை காரி

ஆசை ராக்ஷஸி....கெட்ட
வேசை ராக்ஷஸி....

கொண்ட கணவனையும்
கொல்லத் துணிந்தவள்—யான்....
கண்டபேரைக் கெடுத்த
காம ராக்ஷஸி—ஐயாநான்
கர்மசண்டாளி....

பஞ்சபூத வுடலிற்
பசியொன்று துளைக்குதையா
கஞ்சி கொடுத்திடுங்கள்
கருணைவான்களே நல்ல
தரும வான்களே....!

பாட்டி

ஐயோ சுந்தரி, அசட்டுப் பெண்ணே!
இப்படி யாநீ இழிந்து போனாய்!

சுந்தரி

ஆஆ! இங்கே அனைவரும் என்னவர்.
கணவரே, கணவரே காலில் விழுகிறேன்.
மன்னிக் காதீர்...என்னைக் கொல்வீர்!
மாமீ, உங்கள் வார்த்தை பலித்தது...
மங்களம் மங்களம் மாசறு மங்களம்,
புனித மங்களம், புண்ணிய மங்களம்...
"நாயே போ!" என நன்மொழி சொல்லி
உன்னைப் படுத்திய இன்னலுக் காக
என்னைக் காலால் எட்டி மிதிப்பாய்.
மகா சனங்களே மமதை யாலே,
காமத் தாலே, கட்டு மீறி
இக்கதி யானேன்...என்னைப் பார்த்துப்
பாருல கெல்லாம் பாடங் கற்க!
கணவனுக் கடங்கிக் கற்புடன் வாழ்வதே
மாத ருக்கு மங்கல வாழ்வாம்
என்பதை யறிக...ஐயோ இனிநான்
இருக்கவும் வகையிலை; இறக்கவும் வகையிலை...
என்ன செய்வேன்...எங்கே செல்வேன்...?

மங்களம்

சுந்தரீ என்னிடம் சுகமா யிருப்பாய்...
பட்டுத் திருந்தினாய்...பாவம் போக
முனிவரைச் சேவி...!

சுந்தரி

முனிவா வணக்கம்!
தயவு செய்தொரு சாபம் வைத்து
இவ்வுடல் வீழவே இரக்கங் கொள்வீர்,
பாவி பஞ்சமா பாதகி யானே;
இங்கே இருக்கவும் இதயம் நடுங்குதே!

அப்துல்லா

அம்மா உனக்குநான் அழகான இடத்தைக்
காட்டுகின் றேன்வா...காடும் மேடும்
உன்னைத் தேடி உலைந்தனர் ஒற்றர்;
உன்மேல் வழக்குகள் உள்ளன...வாராய்
தொண்ணூற் றெட்டு...தோடா மாட்டு...!

[கூட்டத்திலிருந்து ஒரு போலீஸ்காரன் எழுந்து சுந்தரிக்கு விலங்கு மாட்டிக்கொண்டு செல்கிறான்.]

ஜோதி

அப்துல், அவளைக் காப்ப தெப்படி?

அப்துல்

சட்டம் அவளைத் தண்டனை செய்யும்.
ஐந்து கொலைகள் அவள்மேல் உள்ளன.
காதற் கொலைகள்; கடுங்கொடுங் கொலைகள்.
அவளை மறப்பதே அன்பர் கடமை.

பாட்டி

என்ன செய்வோம் எல்லாம் வினைப்பயன்!
வினையும் நிழலும் விடாது மனிதனை.
பூர்வ வாசனை புத்தியைக் கெடுத்தது.
அறிவைக் கேட்குமா அகங்காரம், ஹூம்!
அவரவர் வினையை அனுபவிக் கின்றனர்.
முக்குணப் போரில் சிக்காச் சாட்சியாய்
இருக்கும் தன்னை இதயமென் றறிந்து,
பார்ப்பறப் பார்ப்பவர் பாக்கிய வான்கள்.

எல்லாரும்

அந்தப் பார்வை வந்தால் இன்பமே!
குருவரு ளாலே பெருகுக ஞானம்!

யோக முனிவர்

ஓம் சுத்தோஹம்; ஹம்ஸஸ் ஸோஹம்!
அதுவே உண்மை; அன்பு மணிகாள்!
கைலை சென்று காளத்தி வந்தோம்.
அங்கே சிவனும், அம்மையும், முருகனும்
பக்தியும் ஞானமும் பணியும் போலே
சேர்ந்தனர். ஜோதி செய்யும் தவமும்,
புண்ணிய வினையும் புகழும் கேட்டோம்,
இன்று நேரே இங்கே பார்த்தோம்,
ஞான புரியை வானர சாக்கி,
தெய்வ வாழ்வைத் திருவுற நாட்டி,
மடமையும் அடிமையும் வறுமைப் பிணியும்
தீர்த்தெல் லாரும் தியான பரராய்
அப்பர் போலே அன்பும் பணியும்,
அருட்சுடர் போலே ஆன்ம நேயமும்,
பொலியும் யோக நிலயம் போற்றினன்.
அவனே இனிமேல் அரசன் இங்கே.
அவனது மங்களம் அரசி யாவாள்.
ஊரும் செல்வமும், யோக சத்தியும்
இருவ ருக்கும் ஈந்து முடித்தோம்,
சுத்த முத்தனாய் சுகாதீ தத்தில்
ஞான மலைக்குகை மோனம் வகித்தே,
இறுதி நாட்களில் இருக்க விரும்பினேம்.
பூரண யோகமும் சுத்த போகமும்,
துய்த்துக் கதிரும் சூரியனும் போல்,
வாழ்க ஜோதி! மங்களம் வாழ்க!

ஜோதி

குருவே சரணம்!

மங்களம்

குருவடி சரணம்!

எல்லாரும்

சுபம், சுபம், ஓங்குக ஜோதி மங்களம்!

ஜோதி—மங்களம்

பூரணானந்த வாரீ சரண் சரண்,
போத ஸற்குரு நாதா சரண் சரண்,

பாரெலாம் புகழ் பாதா சரண் சரண்,
—முனிராஜா!

தீரஞான ப்ரகாசா சரண் சரண்,
திவ்ய ஜீவன நேசா சரண் சரண்,
கோரிய வரம் ஈவாய் சரண் சரண்,
—குருநாதா!

துன்பந் தீர்க்கும் துணைவா சரண் சரண்,
சுத்த முக்தி யிறைவா சரண் சரண்,
அன்பர்க் கன்பனுய் ஆவாய் சரண் சரண்,
—அருளாளா!

இன்பமே வடிவானுய் சரண் சரண்,
எண்ணு நெஞ்சில் இனிப்பாய் சரண் சரண்
உன்பரம் என வாழும் உயர்நிலே
—தருவாயே!

யோக முனிவர்

[இருவரையும் ஆசீர்வதித்து]

அருட்சுட ரோங்கி அன்பொளி பரவி
மங்கள ஜோதி வாழிய நீடு!

ஜோதி, மங்களம், முருகன், வள்ளி

[இன்னிசைக் கருவிகளுடன் பாடுதல்]

('மற்றுப் பற்றெனக்கின்றி' எனும் பண்)

மங்களம் ஜய மங்களம் சுப மங்களம்
ஜோதி மங்களம்....
மங்களம் சச்சி தானந்த பர
மாத்மனே சிவமங்களம்....

ஞான மாமலே மீதி லேயொரு
மோனமாமலே யென்னவே,
தானே தானுக நின்ருளிர் சதா
சாந்தனே யருட் கந்தனே....!

எல்லாரும்

மங்களம் ஜய மங்களம்....

ஜோதி முதலியோர்

பொய்யிருள் கெட யோகியாய் வந்து
போதிக்கும் குரு நாதனே!
மெய்ப்பொருள் அது நீயெனப் புகல்
வேதனே குண தீதனே!

எல்லாரும்

மங்களம் ஜய மங்களம்....

ஜோதி முதலியோர்

எவ்வுலகிற்கும், எவ்வுயி ருக்கும்
இதய ஜோதியைக் காட்டியே....
திவ்ய ஜீவனம் ஈந்திடும் தவ
சித்தனே பரி சுத்தனே...

எல்லாரும்

மங்களம் ஜய மங்களம்....

ஜோதி முதலியோர்

பக்தி ஞான தியான கர்மப்
படிகளால் பர மானந்த
முத்திக்கே வழி காட்டிடும் முனி
ராஜனே திவ்ய தேஜனே.

எல்லாரும்

மங்களம் ஜய மங்களம்...

ஜோதி—மங்களம்

சீலமும் தவ யோக சித்தியும்
ஜீவ சேவையும் ஓங்கவே
ஞால வாழ்வெனுங் காலத்தேரை
நடத்துவாய் சுத்த சத்தியே!

[யோக முனிவருக்கும் நட ராஜாவுக்கும் ஜோதி மங் களம் ஆரத்தி யெடுத்தல்.]

எல்லாரும்

ஜகபதி சுத்த சுயஞ்ஜோதி
ஜயஜய தேவ பரஞ்ஜோதி
சிவகுரு சாம்ப சதாசிவவோம்,
சின்மய சக்தி மஹேஸ்வர ஓம்!

[கற்பூரத்தைச் சுற்றிவந்து எல்லாரும் நாமாவளிக்குத் தக்கபடி காலெடுத்தாடி நமஸ்கரித்தல்......எல்லாரும் தியானத்தில் அமர்தல்.]

திரை

காலத்தேர் முற்றிற்று.

இந்தத் துணியை என் முகத்துக்கு எதிரே பிடித்துக்கொள்வேனுனல், நான் முன்போலவே உன்னருகில் இருந்தாலும் என்னே நீ காணமாட்டாய். அது போல, ஈசுவரன் மற்றெல்லாப் பொருள்களேக் காட்டிலும் உன்னிடம் நெருங்கியே இருக்கிருன்; என்ருலும், உனது அகங்காரமாகிய திரை காரணமாக, உன்னுல் அவனேக் காணமுடியவில்லே.
—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

GUIDES AS LIGHT . GUARDS AS FORT



மிட்லண்டு

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட்

லோன்ஸ்குயர், சென்னை

பலத்தின் மேல் பலம் பெற்று, பாலிசிக்கு மேல் பாலிசி சேர்ந்து, மிட்லண்டு மேன்மேலும் வளர்ந்து வருகின்றது. அதன் பிற்காலத்து வளர்ச்சி இன்னும் அதிகப்படும் என்பதற்கு அறிகுறிகள் இருக்கின்றன.

சேர்மன் :

குமாரராஜா Sir M. A. முத்தைய செட்டியார், Kt. B.A., M.L.A.

டைரக்டர்கள் :

AL. SP. PL. சுப்ரமணியன் செட்டியார் அவர்கள்
ராவ்பஹதூர் C. V. CT. V. வேங்கடாஜலம் செட்டியார் அவர்கள்
R. ராமனுதன் செட்டியார் அவர்கள் (Under-Sheriff of Madras)
ST. MR. VR. முருகப்ப செட்டியார் அவர்கள்
T. S. ஷண்முகம் அவர்கள்

செக்ரடரி : Mr. K. **சுப்பையா**, B.A. *மானேஜர் :* Mr. A. V. **தியாகராஜா.**

தந்தி: "GOODWILL" த. பெ. நெ. 113 டெலிபோன்: 2724

ஸௌத் இந்தியா கார்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட்

80, செம்புதாஸ் தெரு, ஜியார்ஜ் டவுன், சென்னை

பிராஞ்சுகள்

கல்கத்தா, காரைக்குடி, கோயமுத்தூர், திருச்சினுப்பள்ளி

எம்மிடம் திரணை, சதுரம், பட்டா, இரும்புத் தகடு, கலாய்த்தகடு, கர்டர், கலாய்ப் பைப்பு, கலாய்க் கம்பி, ஆணி வகைகள், பெயிண்டு, சிமெண்டு முதலிய எல்லா விதமான, இரும்பு சாமான்களும் கட்டிட சாமான்களும் கிடைக்கும்.

சினிமா பிடிப்பதற்கு வேண்டிய 2000 பவர் முதல் 5000 பவர் வரையில் பிரகாசமான பல்புகளும் அதைச் சேர்ந்த லைட் பிட்டிங்குகளும்.

எலெக்டிரிக் வொயரிங் சாமான்கள், வொயர், பல்பு, விசிறி, எலெக்டிரிக் மோட்டார், பம்பு முதலிய எல்லா எலெக்டிரிக் சாமான்களும் கைவசமிருக்கின்றன.

Sole Distributors for Madras Presidency and States

BLOOD VITA

பிளட் விட்டா என்பது கல்கத்தா மெடிகல் ரிசர்ச் லபாரட்டரியில் டாக்டர் அத்யக்ஷ மாதூர் பாபு என்பவரால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த இரத்த விருத்தி டானிக். 8 அவுன்ஸ் பாட்டில் விலை ரூ. 1/4

*

ASCU WOOD PRESERVATIVE [ஆஸ்கூ]

இது மரப்பலகை, உத்தரம், விட்டம், டெலிபோன், எலெக்டிரிக் கம்பங்கள் முதலிய எல்லாவிதமான மரச் சாமான்களும் உளு, கறையான், மண் இவைகளால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கென்று, இந்திய சர்க்கார் காட்டு இலாகா ஆபீஸராக இருந்த டாக்டர் காமேசம் அவர்களால் கண்டு பிடிக்கப்பெற்ற, ஒரு ரசாயனப் பொருள். உபயோகப்படுத்தும் முறை இவைகளுக்கு, நேரிலோ, கடிதமெழுதியோ தெரிந்து கொள்ளலாம். ஜில்லா ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு எழுதவும்

குழந்தைகள் அறிவு :

சிறைச்சாலை

(லியோ டால்ஸ்டாய்)

செம்கா : வயது-13
அக்ஸுட்கா : வயது-10
மிட்கா : வயது-10
பலாஷ்கா : வயது- 9
வன்கா : வயது- 8

[குழந்தைகளெல்லாம் காளான்களைப் பறித்துவிட்டு, ஒரு கிணற்றினருகே உட்கார்ந்துகொண் டிருக்கின்றன.]

அக்ஸுட்கா : மாட்ரினு மாமி என்ன வேதனைப் பட்டாள்! குழந்தைகளோ! ஒன்று அழுதது; உடனே எல்லாம் சேர்ந்து புலம்பத் தொடங்கிவிட்டன.

வன்கா : ஏன் இப்படி அவர்களெல்லாம் கலங்கிவிட்டார்கள்?

பலாஷ்கா : ஏனு? அவர்களுடைய தகப்பனைச் சிறைக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களை மனங் கலங்கச் செய்ய, அது போதாதா?

வன்கா : ஏன் அவனைச் சிறைக்கு அனுப்பினுர்கள்?

அக்ஸுட்கா : அது யாருக்குத் தெரியும்? அதிகாரிகள் வந்தார்கள்; அவனைத் தயாராகும்படி சொன்னுர்கள்; அழைத்துக் கொண்டு போய் விட்டார்கள். அதை எல்லாம் நாங்கள் பார்த்தோம்.

செம்கா : குதிரைகளைத் திருடியதற்காகத்தான், அவனை அவர்கள் பிடித்துக்கொண்டு போனுர்கள். டெம்கின் திருட்டுப் போயிற்று. கிராஸனேவ் திருட்டுப் போனதும் அவனது வேலைதான். நமது குதிரைகள்கூட அவனது பிடியில் அகப்பட்டுக்கொண்டன. இப்படியெல்லாம் செய்ததற்கு, அவனைத் தட்டியா கொடுப்பார்கள்?

அக்ஸுட்கா : ஆமாம்; எனக்கு இதெல்லாம் தெரியும். ஆனுல், அந்தக் குழந்தைகளுக்காக, நான் பரிதாபப்படுகிறேன். நான்கு குழந்தைகள் இருக்கின்றனவே, உனக்குத் தெரியாதா? அவற்றுக்கு ரொட்டிகூடக் கிடையாது. இன்று அவை நம்மிடம் வந்து பிச்சை கேட்டன.

செம்கா : பின்னே, அவர்கள் திருடக்கூடாது.

மிட்கா : நிஜந்தான். ஆனுல், தகப்பன் அல்லவா திருடினுன்; குழந்தைகள் திருடவில்லையே. அப்படி யிருக்க, அவை ஏன் பிச்சையெடுக்க வேண்டும்?



செம்கா : திருடக் கூடாது என்று அவற்றுக்குப் படிப்பினை புகட்டத்தான்.

மிட்கா : ஆனுல், திருடியது குழந்தைகள் அல்லவே; தகப்பனுர் தானே?

செம்கா : சேச்சே! நீ சொன்னதையே சொல்லிக்கொண் டிருக்கிருயே! குழந்தைகள் — குழந்தைகள்! அவன் ஏன் அநியாயம் செய்தான்? அவனுக்கு ஏராளமான குழந்தைகள் இருப்பதால், அவனைத் திருடவிடுவதா?

வன்கா : சிறையிலே அவனை அதிகாரிகள் என்ன செய்வார்கள்?

அக்ஸுட்கா : அவனை அங்கே சும்மா வைத்திருப்பார்கள்—அவ்வளவுதான்.

வன்கா : அவனுக்குச் சாப்பாடு கொடுப்பார்களோ?

செம்கா : ஆமாம், கொடுப்பார்கள்; பழிகாரத் திருடன்! அவனுக்கென்ன கேடு சிறையிலேயிருந்தால்? சகல சௌகர்யங்களும் அளிப்பார்கள்; அவன் சௌக்கியமாக உட்கார்ந்து கொண்டிருப்பான். நான்மட்டில் ஜார் ராஜாவாக இருந்தால், குதிரைத் திருடர்களை எப்படி நடத்துவேன் தெரியுமா? திருட்டை மறுபடியும் நினைக்கவே நினைக்காதபடி அவர்களுக்கு நல்ல பாடம் போதிப்பேன்! ஆனுல், இப்போது என்ன நடக்கிறது? அவன் அங்கே சுகமாகத் தன் இனமான நண்பர்களோடு சேர்ந்து உட்கார்ந்து கொண் டிருக்கிருன்; அவர்கள் ஒருவருக் கொருவர், இன்னும் கெட்டிக்காரத்தனமாய்த் திருடுவதெப்படி என்று சொல்லிக் கொடுத்துக்கொண் டிருக்கிருர்கள். பெட்ருகா சிறுவனுயிருந்தபோது, நல்ல பையனுய்த்தான் இருந்தானும். அவன் ஒரே ஒரு தடவை சிறைக்குப் போய் வந்தவுடனே, மகா போக்கிரியாகி விட்டானும். அப்புறம் அவன் திருந்த வழியே யில்லாமல் போய்விட்டது என்று என் தாத்தா சொல்லியிருக்கிருர். அதுமுதல், அவன் இப்படி ஆரம்பித்து விட்டானும்....

வன்கா : அப்படியானுல், அவர்களை ஏன் உள்ளே அடைத்துப் பூட்டி வைக்கிருர்கள்?

செம்கா : ஓ! அவர்களையே போய்க் கேளு.

அக்ஸுட்கா : அவனை உள்ளே அடைத்துப் பூட்டுகிருர்கள்; பிறகு, அவனுக்கு உணவு கொடுக்கிருர்கள்........

செம்கா : தன் வேலையை இன்னும் நன்ருகச் செய்ய, அவன் கற்

றுக்கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான்!

அக்ஸாட்கா: ஆனால், அவனது குழந்தைகளும் மனைவியுமோ, பட்டினி கிடந்து சாகிறார்கள்! இவர்கள் நமது அண்டை வீட்டுக்காரர்கள் அல்லவா? ஆகையால், எனக்கு இவர்களிடம் பரிதாபமாயிருக்கிறது. இவர்களது கதி என்ன ஆகும்? நம்மிடம் வந்து பிச்சை கேட்கிறார்கள்; நாமோ கொடுக்காமல் இருக்க முடியவில்லை.

வன்கா: பின் ஏன் அவர்களை அதிகாரிகள் சிறையில் போடுகிறார்கள்?

செம்கா: அவர்களை வேறு என்னதான் செய்வது?

வன்கா: வேறு என்னதான் செய்வதா?........நல்லது, எப்படியாவது........அவர்கள் திருந்த........

செம்கா: 'எப்படியாவது' என்கிறாய்? ஆனால், 'எப்படி' என்று உனக்கே தெரியவில்லை. நம்மை விடப் புத்திமான்களெல்லாம் இதைப்பற்றி யோசித்துப் பார்த்துவிட்டார்கள். அவர்களாலேயே இதற்கொரு வழி கண்டுபிடிக்க முடியவில்லை.

பலாஷ்கா: நான் ஜார் ராணியாயிருந்தேனானால், என்ன செய்வேன் தெரியுமோ?.......

அக்ஸாட்கா: (சிரித்துக்கொண்டு) நல்லது, ஜார் மகாராணியே! என்ன செய்வாய்?

பலாஷ்கா: யாருமே திருடாதபடி செய்து விடுவேன்; குழந்தைகளும் அழமாட்டா.

அக்ஸாட்கா: சரிதான்; அதை நீ எப்படிச் செய்வாய்?

பலாஷ்கா: எல்லாருக்கும் அவரவருக்குத் தேவையான சகலமும் கிடைக்கும்படியும், யாருக்கும் அநீதி நடக்காதபடியும் செய்வேன். அப்போது, எல்லாரும் எல்லா விதத்திலும் சௌகர்யமாயிருப்பார்கள்.

செம்கா: பேஷ், ஜார் மகாராணி! ஆனால், இதையெல்லாம் நீ எப்படிச் செய்து முடிப்பாய்?

பலாஷ்கா: அது எனக்குத் தெரியாது; ஆனால் நான் எப்படியோ செய்து விடுவேன்.

மிட்கா: இந்த அடர்த்தியான காட்டுக்குள்ளே போவோமா? கொஞ்ச நாளைக்கு முன் ஒருநாள், இந்தக் குட்டிகளுக்கு அங்கே ஏராளமாய்க் காளான் கிடைத்தது.

செம்கா: பேஷான யோசனை. வாருங்கள் எல்லாரும். ஆனால், ஜார் மகாராணியே! உனது காளான் கொட்டிப் போகப் போகிறது; ஜாக்கிரதையாயிரு. ஏனெனில், உனது கெட்டிக்காரத்தனம் வர வர ரொம்ப அபாரமாகிக்கொண்டிருக்கிறது!

[எல்லாரும் எழுந்து, புறப்பட்டுப் போகிறார்கள்.]

போரும் சாந்தியும்

போர்வீரர்கள் பிளாரென்ஸ் நகரைவிட்டுப் பாய்ந்தோடுகிறார்கள். அதைக் கண்டான் ஒரு மூடன். பக்கத்திலிருந்த ஒரு புத்திசாலியிடம், "அவர்கள் ஏன் இப்படி ஓடுகிறார்கள்?" என்று கேட்டான்.

புத்திசாலி: பைஸா நகர்மீது போர் தொடங்கப் போகிறார்கள்; அது உனக்கு தெரியாதா?

மூடன்: சமாதானம் வந்து இந்தப் போர் நிற்காதா?

புத்திசாலி: யுத்தம் இப்போதுதானே ஆரம்பித்திருக்கிறது; அதற்குள் சமாதானத்தைப்பற்றிப் பேசுகிறாயே, முட்டாள்!

மூடன்: என்று ஆரம்பித்தாலென்ன? ஒரு நாள் சமாதானம் வந்துதானே ஆகவேண்டும்?

புத்திசாலி: வாஸ்தவம். யுத்தம் நிரந்தரமல்ல; ஒரு நாள் சமாதானம் வரத்தான் வேண்டும். ஆனால், இப்போது நடப்பது யுத்தந்தான்.

மூடன்: ஒரு நாள் சமாதானம் வந்துதான் தீரவேண்டும் என்றால், இப்போதே - யுத்தம் ஆரம்பித்த இப்போதே - அந்தச் சமாதானத்தைச் செய்து விடக் கூடாதா?

இது பெட்ரார்க் என்ற இதாலியக் கவிஞர் எழுதியுள்ள ஒரு கதையாகும்.

கவலையற்ற எதியோபியர்



எதியோபியக் கிராமவாசிகள், தங்களருகே நடந்துகொண்டிருக்கும் யுத்தத்தைப்பற்றிக் கவலைப்படாமல், சந்தையில் வியாபாரம் செய்கிறார்கள். ('சக்தி'க்குப் பிரத்யேகமாக வந்த படம்)

வேரையிழந்த செடிகொடிகளுக்கு, வேரை உண்டாக்கிவிடும் அமிழ்த மொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது தான் வைட்டமின்-பி:

செடிகளுக்கு அதிசய உணவு

வ. சு. மணி

நமது உணவிலே, கொழுப்பு, புரொட்டீன், சர்க்கரைச் சத்து முதலிய அம்சங்கள் எவ்வளவு நிறைந்திருந்தாலும் சரிதான்; ஆரோக்கியத்தைக் காப்பாற்றவும், உடலை வளர்க்கவும் இன்னொரு அற்புத சத்தும் தேவையாயிருக்கிறது. அதற்குத்தான் 'வைட்டமின்' என்று ஆங்கிலத்தில் பெயர் வைத்திருக்கிறார்கள். இதுவரையில் ஐந்து வித 'வைட்டமின்'கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அவற்றுக்கு ஏ, பி, ஸி, டி, இ என்று முறையே நாமம் சூட்டியிருக்கிறார்கள். அவற்றுக்குப் பின்னும் எப், ஜி என்று இன்னும் சில வைட்டமின்கள் இருப்பதாய்ச் சிலர் சொல்லி வருகிறார்கள். ஆயினும், அவைபற்றி இன்னும் ஒரு முகமான அங்கீகாரம் டாக்டர்களிடம் ஏற்படவில்லை.

இந்த 'வைட்டமின்'கள் யாவும் சமைக்காத ஆகாரப் பொருள்களில், மிகச் சொற்ப பாகந்தான் இருக்கின்றனவாம். உதாரணமாக, பாலிலுள்ள கொழுப்பு, பச்சைக் கறிகாய்கள் ஆகியவற்றில் 'வைட்டமின்'கள் உண்டு. பின்வரும் பதார்த்தங்களிலே, முக்கியமாகப் பின்வரும் 'வைட்டமின்'கள் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்:

பொருள்	அடங்கியுள்ள வைட்டமின்
பால், முட்டை, மீன் எண்ணெய், கீரைகள்	ஏ
மாமிசம், உருளைக் கிழங்கு, தானியத் தோடுகள், பழச்சதைகள்	பி
சாறுள்ள பழங்கள், கறிகாய்கள்	ஸி
மீன் எண்ணெய்	டி
கோதுமை முளை	இ

இந்த 'வைட்டமின்'கள் தேகாரோக்கியத்துக்கும் உடல் வளர்ச்சிக்கும் தாது விருத்திக்கும் அவசியமாகும் என்று தற்போது டாக்டர்கள் கருதுகிறார்கள். இந்த 'வைட்டமின்'களின் சக்தியைப் பல விதமாகச் சோதித்திருக்கிறார்கள்; இன்னும் சோதித்தும் வருகிறார்கள். ஆனால், இந்த நுண்பொருள்கள் எந்த மூலப் பொருள்களைக் கொண்டு எப்படி இந்த ஜீவ அமைப்பைப் பெற்றிருக்கின்றன என்று மட்டில் இதுவரை கண்டு பிடிக்கப்பட வில்லை.

ஜீவப் பிராணிகளுக்கும் மனிதர்களுக்கும் இந்த 'வைட்டமின்'களைச் செலுத்தி, அதனால் சிறந்த பலன்கள் விளைவதைத்தான் சமீப காலம் வரை நிரூபித்து வந்தார்கள். தாவரங்களான செடிகொடிகளுங்கூட 'வைட்டமின்' போஷணையால் ஆச்சர்ய வளர்ச்சியடைவதை, இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். இடம் மாற்றி நடும்போதும் சுழல் காற்றில் அடிபட்ட சமயத்திலும் விஷங்களினால் தீண்டப்பட்ட பொழுதும், தாவரங்கள் வளர்ச்சி குன்றி வாடி விடுகின்றன. இவ்விதம் அழியும் செடி கொடிகளை உயிர்ப்பிக்க, அநேகவிதமான முயற்சிகளைப் பல தோட்டக்காரர்கள் செய்துவந்தார்கள். முக்கியமாக, கலிபோர்னியாவில் உள்ள ஒரு ஆராய்ச்சி நிலையத்தார் அந்தச் சோதனைகளை விரிவாய் நடத்தி வந்தார்கள். அந்தச் சோதனைகளின் விளைவாக, தாவரங்களின் வேர்கள் துரிதமாய் வளர்ச்சிபெற, 'வைட்டமின்-பி' மிகவும் உதவுவதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ஆராய்ச்சிக் கூடத்தில், செடியொன்றை ஒரு விஞ்ஞானி பரிட்சிக்கிறார். அப்போது தம்முடைய மூச்சுக் காற்று பட்டுச் செடியின் வேர் பழுதடையக் கூடாதென்பதற்காக, ஒரு கண்ணாடி மறைப்பைப் போட்டுக்கொண்டு வேலை செய்கிறார்.

தாவரங்களின் வளர்ச்சிக்கு ஆதாரமானவை வேர்கள் தான். மரம், செடி, கொடி, நாற்று இவைகளை இடம் மாற்றி நடும்பொழுது அழிந்துவிடும் பாகங்கள் வேர்களே. ஆதாரமான வேர்கள் அழிந்துவிடவே, இதர பாகங்களுக்கு வேண்டிய உணவு செல்லத் தடை ஏற்படுகிறது; இலைகள் வாடிவிடுகின்றன. மரத்தின் பட்டை காய்ந்துவிடுமுன், புதிய வேர்கள் உண்டாகி, பிற பாகங்களுக்கு உணவைச் சேகரித்துக் கொடுக்காவிட்டால், மரம் பட்டு விடுகிறது. வளர்ச்சிக்கு ஆதாரமான வேர்களையே துரிதமாக வளர்க்கிறது இந்த 'வைட்டமின்-பி'.

இந்த 'பி-வைட்டமின்' சத்து, உப்பைப் போன்ற ஓர் அமைப்பை உடையது. இதில் ஒரு குண்டூசியின் தலை அளவு எடுத்து, அதை 20-சொட்டுத் தண்ணீரில் கலக்கி, ஒரு கண்ணாடிக் குழாயில் கரைத்து வைத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் கரைத்த நீரில் ஒரு சொட்டை ஒரு காலன் ஜலத்துடன் கலந்து தாவரங்களின் வேர்களில் பாய்ச்சி வரவேண்டும்.

2,500 காலன் நீரில் கலக்கக் கூடிய ஒரு புட்டி 'பி-வைட்டமின்' சத்தின் விலை 2 டாலர் ஆகிறது. இதை அவ்வப்பொழுது புதிதாகக் கரைத்தே உபயோகிக்க வேண்டும்; அப்படிக்கன்றி ஒரே யடி

யாகக் கரைத்து வைத்துக் கொண்டிருந்தால், உஷ்ணம்பட்டுக் குணம் மாறிவிடும்.

இந்த 'பி-வைட்டமின்' கரைத்த தண்ணீரை எலுமிச்சம் பதியன்களில் பாய்ச்சிச் சோதனை செய்து பார்த்தார்கள். மூன்று பதியன்களை மணலில் ஐந்து வாரங்கள் நட்டு வைத்திருந்தார்கள். ஒன்றுக்கு நீர் மட்டும் ஊற்றிவந்தார்கள். அது வேரே விடவில்லை. இரண்டாவது பதியனுக்கு 'அசெடிக் ஆசிட்' என்ற காடி கலந்த நீர் ஊற்றிவந்தார்கள். அது சிறிது வேர் விட்டிருந்தது. மூன்றாவது பதியனுக்கு 'வைட்டமின்-பி'யையும் 'அசெடிக் ஆசிட்'டையும் கலந்த ஜலம் விட்டு வந்தார்கள். அது சடைசடையாய் ஏராளமான வேர்களை நாலாபுறமும் விட்டு ஊன்றியிருந்தது.

சில செடிகளை இடம் மாற்றி நட்டால் பிழைக்காது என்று நாம் நினைக்கிறோம். அப்பேர்ப்பட்ட செடிகளைக்கூட, இன்று அமெரிக்கத் தோட்டக்காரர்கள், இந்த 'பி-வைட்ட'மினின் உதவியால், இடம் மாற்றி நட்டு, உயிரோடு வளர்த்துவிடுகிறார்கள். ஆரஞ்சுச்செடிகளைச் செழித்து வளரும்படி செய்கிறது 'பி-வைட்டமின்'. ரோஜாச் செடிகளும் இந்த 'பி-வைட்டமின்' உணவால் இரு மடங்கு பெரிய புஷ்பங்களைப் பூக்கின்றன.

லாஸ் எஞ்செல்ஸ் நகரத்தின் சிங்காரத் தோட்டத்தில் 80 அடி உயரம் வளர்ந்து நின்ற ஒரு பேரீச்சை, சுழல் காற்றில் அடிபட்டு வாடியது. அதை உயிர்ப்பிக்கப் பல முயற்சிகள் செய்து பார்த்தார்கள். அவை யனைத்தும் வீணாயின. கடைசி முறையாக, 'பி-வைட்டமின்' கரைத்த நீர் பாய்ச்சுவதென்று தீர்மானித்தார்கள். 200 காலன் நீரில் 'பி-வைட்ட'மினைக் கரைத்து அதற்கு ஊற்றிவந்தார்கள். மூன்று மாத காலத்தில், அந்த மரம் புத்துயிர் பெற்று முன்போல் செழித்து வளர்ந்தோங்கியது. இத்தகைய அற்புதங்களைப் புரியும் 'பி-வைட்டமின்' சத்தை, தாவர வர்க்கத்தின் சஞ்சீவி என்று சொல்லலாமல்லவா?

எனது சத்தியாக்கிரகம்

(டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார்)

[மகாத்மா காந்தி, 1930-ஆம் ஆண்டு தண்டி யாத்திரை சென்று, உப்பு சத்தியாக்கிரகம் செய்தார் அல்லவா? அப்போதுதான் ஸ்ரீ அவிநாசிலிங்கம் திடீரென்று காங்கிரஸிலே அங்கத்தினராய்ச் சேர்ந்தார். உடனே சிறையும் நண்ணினார். உருக்கமான அவ்விவரத்தை இங்கே எழுதியிருக்கிறார்]

சிறைவாசம் சமீபத்திலேயே நேருமெனத் தென்பட்டது. அதுவரை இதைப்பற்றி வீட்டில் எவரிடமும் அதிகம் பிரஸ்தாபிக்கவில்லை. என் தாய் கொஞ்சகாலத்துக்குமுன் விண்ணுலகு எகினாள். என் கவலையெல்லாம் என் வயோதிகத் தந்தையைப் பற்றித்தான். அவருடைய அன்பும் அருளும் எங்களை எப்பொழுதும் பின் நின்று தாங்கிக் கொண்டிருப்பன. அவர் அதிகமாய் எங்களுடன் பேசமாட்டார். நாங்களும் அவர் முன்னிலையில் மிக அடக்கமாகவேயிருந்து பழக்கம். அவர் எதிரில் உட்காரவோ அல்லது சத்தம் போட்டுப் பேசவோ மாட்டோம். என் வாழ்க்கையில் பல தடவைகளில் அவர் எண்ணங்களுக்கு மாறாகச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்கள் வந்திருக்கின்றன. ஆனால், அது காரணமாய் ஒருபொழுதும் அவர் என்னிடம் கோபித்ததும் இல்லை; அதைப் பற்றிப் பின்னால் சொல்லிக்காட்டியதும் இல்லை. அவை காலத்தின் கூத்தெனக் கொண்டு, சமாதானம் செய்து கொள்ளுவார். என் பேரில் அவருக்கு விசேஷ அன்பும் நம்பிக்கையும் உண்டு. ஆதலால், மனம் வருந்தினாலும், அவர் வாயிலிருந்து கடுஞ்சொல் ஒன்றும் வெளிவந்ததில்லை.

ஆனால், நான் சிறை செல்வதென்பது அவர் பொறுக்கக்கூடிய எல்லைக்கு மீறியதாயிருந்தது. அவரால் அதைச் சகிக்க முடியாமல் போயிற்று. விம்மி விம்மி அழலானார். அவரால் என்னிடம் பேச முடியவில்லை. எனவே நண்பர்களிடம் சொல்லி, என்னைத் தடுக்க முயன்றார். அவர் படும் வருத்தம் என் மனதிலும் ஊடுருவிப் பாய்ந்தது. அவரைக் காணவும் கண்டு பேசவும், என்னால் முடியவில்லை. ஆயினும், அவரைச் சமாதானம் செய்யாமல் போவதும் அசாத்தியமாயிருந்தது. ஒரு நாள் மாலை, அவர் இருக்குமிடம் போய், எதிரில் ஓர் ஓரத்தில் நின்றேன். என்னைப் பார்த்ததும், அவர் கண்களில் நீர் நிறைய ஆரம்பித்தது. என் கண்களும் கலங்கத் தொடங்கின. இந்நிலைமையில், அதிகம் பேச முடியாதல்லவா? "அப்பா, நான் காங்கிரஸில் சேர்ந்தாகி விட்டது. அதை இப்பொழுது விட்டுவருவது மனிதத் தன்மைக்கு அழகல்ல; கண்ணியமான வாழ்வுக்கும் ஏற்றதல்ல. நான் கண்ணியமின்றி வாழ வேண்டுமென்று தாங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டேன். அவ்வளவுதான். அவரது துக்கம் அதிகரித்தமாதிரி யிருந்தது. ஆனால், என் வார்த்தைகளின் உண்மையையும் உணர்ந்தார். "ஆண்டவன் இருக்கிறார், போ" என்றார். அதையே அவருடைய ஆசியெனக் கொண்டு திரும்பினேன்.

வீட்டில் ஒரே கூச்சல். "ஐயாவிடம் சொல்லிப் பயனில்லை. அவர்கள் கண்டிப்பா யிருக்க மாட்டார்கள். அண்ணன்தான் (என் சிறிய தந்தை ஸ்ரீ டி. எ. ராமலிங்கம் செட்டியார் அவர்களை 'அண்ணா' என்றுதான் நாங்கள் அழைப்பது) கண்டிப்பாகச் சொல்லுவார்கள்" என்று எண்ணி, அவரிடம் போய்ச் சொன்னார்கள். என் தந்தைக் கடுத்தபடி, அவரே நாங்கள் அன்புடன் பேணும் பெரியார். அவர் ஒன்று சொல்லி, நான் இதுவரை தட்டியதில்லை. அவரிடம் இதைப் பற்றிப் பேச எனக்கு லஜ்ஜை. என்ன சொல்லிவிடுவாரோ வென்ற பயம். ஆனால், வீட்டாருக்கு அவர் சொன்ன பதில் என் பயத்தை நீக்கி, எனக்குச் சந்தோஷத்தையும் தைரியத்தையும் கொடுத்தது. "காங்கிரஸில் சேருவதற்குமுன் வேண்டுமானால், நாம் அவனைத் தடுக்கலாம். ஆனால், அதில் சேர்ந்து இவ்வளவு தூரம் போனபின், அவனைத் தடுப்பது தவறு. அவனது விருப்பம்போல் செய்யட்டும்" என்று அவர் உரைத்தார்.

ஜூலை 1-ஆம் தேதி கோவையில், முதலில் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான் பாலாஜி ராவ், ஸ்ரீ சி. பி. சுப்பையா, ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய ஐயர், ஸ்ரீ சுப்ரி முதலியோர் கைதியானார்கள்.

•

என்னுடைய முறை ஜூலை 5-ஆம் தேதி என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நானும் ஸ்ரீமான் டி. ராகவாச்சாரி அவர்களும் பொதுக்கூட்டத்தில் பேசித் தடை உத்தரவை மீறவேண்டுமென்

பது ஏற்பாடு. ஸ்ரீ டி. ராகவாச்சாரி, சர் டி. விஜயராகவாச்சாரியின் தமயனர் மகன். நாங்கள் இருவரும் சேர்ந்து சத்தியாக்கிரகம் செய்வது ஊருக்குள் கிளர்ச்சியை அதிகமாக்கி யிருந்தது. அன்று கூடிய கூட்டமும் பெரிதா யிருந்தது. சத்தியாக்கிரகம் செய்யச் செல்லு முன், என் தந்தையிடம் சென்றேன். அவர் கண்ணீர் சொரிந்த வண்ணம் இருந்தார். அவருடைய பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு, அவரது ஆசியைக் கேட்டேன். அவரால் பேச முடியவில்லை. தயாராக வைத்திருந்த ஒரு விபூதிப் பையை, என் கையில் கொடுத்தார். அதுவே அவராசியெனப் பெற்றுக் கொண்டேன். பிறகு, என் சிறிய தந்தையிடம் சென்றேன். அவர் ரவுண்ட் ரோடில் உலாவப் போய்க்கொண்டிருந்தார். அங்கே போய் என் கார் நின்றதும், திரும்பிப் பார்த்து, "என்ன சமாசாரம்?" என்று கேட்டார். "இன்று சத்தியாக்கிரகம் செய்யச் செல்லுகிறேன்" என்று சொல்லிக் குனிந்து, அவரது பாதத்தைத் தொட்டுக் கும்பிட்டேன். அவருடைய கண்களிலும் நீர் துளிர்த்தது. "சரி" என்றார். அவரிடமும் வீட்டில் மற்றவர்களிடமும் விடை பெற்றுக் கூட்டத்துக்குச் சென்றேன்.

கூட்டத்தில் பேசிய பிறகு, வீடு வந்து சேர்ந்தேன். அன்று நாங்கள் கைது செய்யப்பட வில்லை. மறு நாளும் கைது செய்யப்பட வில்லை. எங்களைக் கைது செய்தால், கொஞ்சம் கலவரமாகலாம் என்று நினைத்தார்கள் போலிருக்கிறது. கைது செய்யாமலிருந்தால், மறுபடியும் சத்தியாக்கிரகம் செய்வதெனத் தீர்மானம் செய்தோம். இது விஷயம் போலீசாருக்கு எட்டியிருக்கலாம். 7-ஆம் தேதி காலை குளித்த பிறகு, சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தேன். அந்தச் சமயம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் இருவர் ஒரு காரில் வந்திறங்கினார்கள். அவர்களுக்கும் சிற்றுண்டி கொடுக்கச் சொன்னேன். அருந்தியதும், 'புறப்படலாமே?' என்றார்கள். சில நிமிஷங்களில் தயார் செய்துகொண்டு, அவர்களுடன் புறப்பட்டேன். நேராகக் கோர்ட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீ ராகவாச்சாரி முன்னமேயே அங்கு கொண்டுவரப்பட்டிருந்தார். மாஜிஸ்ட்ரேட்டும் தயாராக இருந்தார். காலை சுமார் 8 மணிதான் இருக்கும். எனினும், கோர்ட்டில் கொஞ்சம் கூட்டம் இருந்தது. விசாரணை செய்ய, அதிக நேரம் ஆகவில்லை. நாங்கள் 'குற்றவாளி' என ஒப்புக் கொண்டோம். அவ்வாறுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டோம். சில நிமிஷங்களில் கோவை சென்டிரல் ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்.

அழையா விருந்து

('உல்லாஸி')

எனது வேலைக்காரனான கலியன் மகா வேலைக்காரன். உண்மையில், அவனாலேயே எனக்குப் பூர்வ ஜன்மத்தில் நம்பிக்கை வந்தது. ஏனெனில், பூர்வ ஜன்ம புண்ணியத்தால்தான் அவனைப் போல் ஒரு வேலைக்காரனைப் பெறும் பாக்கியம் எவருக்கும் கிடைக்க முடியும்.

என் மனங்கோணாமல் பணிவிடை செய்வது மட்டிலுமல்ல; எப்பேர்ப்பட்ட சங்கடத்தினின்றும் என்னை அவன் காப்பாற்றி விடுவான். என் வேலைக்காரன் என்பதைவிட, 'என்னுடைய மந்திரி' என்று அவனைச் சொல்லலாம். கலியனைக் கலந்து ஆலோசிக்காமல் நான் ஒரு காரியமும் செய்வதில்லை. இன்றைக்கு இட்டலி சாப்பிடலாமா, தோசை சாப்பிடலாமா என்ற சந்தேகம் தொடங்கி, எந்த சினிமாப் பார்ப்பது அல்லது பார்க்காமலே யிருப்பது என்ற விஷயம் வரையில், அவனைநான் யோசனை கேட்பேன்; நான் கேட்காவிட்டாலும், அவன் தன் யோசனையைத் தானாகவே எனக்குச் சொல்லாமல் விடமாட்டான்.

ஒரு நாள் வண்ணான் கணக்கில் காலணா எப்படி ஏறியது என்பதைப் பற்றி நான் தீவிரமாய் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த சமயத்தில், கலியன் பூனைபோல் உள்ளே வந்து, "ஸார்! ஸ்ரீமதி பேபாபூ உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்" என்றான்.

"என்னடா அது? யாரடா அவள்? ......பேபா பூவா? என்ன, கேலியா செய்கிறாய்?" என்று நான் கோபித்துக் கொண்டேன்.

"கலியன் பேசுவதெல்லாம் கேலியாய்த்தான் இருக்கும் உங்களுக்கு! கூடத்துக்கு வந்து பாருங்கள், தெரிகிறது" என்றான் கலியன்.

"யாரது?" என்று மறுபடியும் கேட்டேன்.

"யாரோ, மலேயாவிருந்து வந்திருக்கிற மாதிரி தோன்றுகிறது. சீனக்காரியோ, ஜப்பான்காரியோ தெரியவில்லை" என்றான் கலியன்.

"இதென்னடா இது! மலேயாவிலிருந்து என்னை யார் தேடிவருகிறார்கள்?" என்று ஆச்சர்யத்துடன், உடைகளைச் சரி செய்துகொண்டும், தலையைக் கோதிக்கொண்டும், கூடத்துக்குப் போனேன்.

வாஸ்தவம், அது யாரோ ஒரு சீனக்காரி போலத்தான் தோன்றியது. சுமார் 55 வயது இருக்கும் அவளுக்கு. அவளது பக்கத்திலே இருபத்தைந்து மதிக்கக்கூடிய ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் முகத்திலே அசடு வழிந்தது.

"வாருங்கள், அம்மா! தாங்கள் யார்?" என்று கேட்டேன்.

ஸ்ரீமதி பேபாபூ ஒரு கடிதத்தை என்னிடம் நீட்டினாள். நான்கு வருஷங்களுக்குமுன் மலேயாவுக்குச் சென்ற எனது நண்பன் சிவசைலத்தின் கடிதம் அது. அவனைப்பற்றி நான் ஏறக்குறைய மறந்தே போய்விட்டேன். ஒரு பணக்கார நண்பரிடம் அவனது கப்பல் கட்டணத்துக்கு 120 ரூபாய் நான் கடன் வாங்கிக் கொடுத்ததை, இதுவரை அவன் திருப்பி அனுப்பவில்லை. அது மாத்திரமல்ல; போட்ட கடிதத்துக்குப் பதில் கூட எழுதவில்லை. அப்பேர்ப்பட்டவன், இதோ பணத்தை அனுப்பி விடுவதாகவும், ஏகமாய் மன்னிப்புக் கேட்டுக்கொண்டும், இந்தக் கடிதத்தை ஆரம்பித்திருந்தான்.

இந்தப் பேபாபூ யாரோ பெரிய பணக்காரியாம். இந்தியாவைச் சுற்றிப் பார்த்து ஏதோ புஸ்தகம் எழுதப் போகிறாளாம். தேசீய இந்தியாவிடம் அனுதாபங்கொண்டவளாம். ஆகையால், இவளுக்கு வேண்டிய உதவியெல்லாம் நான் புரிய வேண்டுமென்று, நண்பன் சிவசைலம் தனது கடிதத்திலே எனக்குச் சிபார்சு செய்திருந்தான்.

"இதென்ன புதிய உபத்திரவம்!" என்று மனதுக்குள்ளே நினைத்துக்கொண்ட நான், "ரொம்பச் சந்தோஷம். தங்களுக்கு என்னால் ஆகக்கூடிய ஒத்தாசையைச் சொன்னால், நான் செய்யத் தயார்" என்று அந்த அம்மாளிடம் உபசாரமாக ஆங்கிலத்தில் சொன்னேன்.

"வந்தனம்" என்றாள் ஸ்ரீமதி பேபாபூ.

சிறிது நேரம் இருவரும் மௌனமாயிருந்தோம். பிறகு, "இங்கே எத்தனை மாதம் தங்க உத்தேசமோ?" என்று நான் விசாரித்தேன்.

அவள்: வேலையைப் பொறுத்தது—ஆமாம்; பம்பாய்க்கு எப்போது டிரெயின்?

நான் : இராத்திரி — என்ன அவ்வளவு அவசரம் ?"

அவள் : அதொன்று மில்லை. வந்த வேலையைப் பார்க்க வேண்டாமா? நான் ராத்திரியே புறப்பட வேண்டும்.

நான் : அப்படியானால், சரி.

உள்ளுக்குள்ளே எனக்குச் சந்தோஷந்தான். அவளை ரயிலில் கொண்டு போய் ஏற்றிவிட்டு வந்துவிட்டால், அதோடு நமது பாரம் தீரும் என்று எண்ணினேன். முதலாவது, அவளுடன் வந்த அந்த மக்குப்பிளாஸ்திரியை எனக்குப் பார்க்கச் சகிக்கவில்லை. அவன் தொலைந்தால், பெரிய க்ஷேமம் என்று என்னவோ எனக்கு தோன்றியது.

ஆனால், ராத்திரி ஸ்ரீமதி பே பா பூ ரயிலுக்குப் புறப்படும்போது, அவன் புறப்பட வில்லை.

" இவன் என் மகன் சிங் டூ. இவனைப் போலப் பரம சாது யாரு மிருக்கமாட்டார்கள். ஒன்றும் தெரியாத அப்பாவிக் குழந்தை. இவனையும் கூடக்கூட அழைத்துக்கொண்டு ஊர் சுற்றுவதென்றால், ரொம்பக் கஷ்டமா யிருக்கும். பொறுப்பான இடத்தில் இவனை விட்டுவிட்டுப் போக வேண்டும். நான் திரும்பி வரும் வரையில், இவனை நீங்கள் பத்திரமாய்க் கவனித்துக்கொள்ள வேண்டும். இது தான் நீங்கள் எனக்குச் செய்யவேண்டிய உபகாரம். பெரிய நகரமா யிருப்பதால், துஷ்டர்கள் வசம் சிக்காமல் அவனை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். அவனாக ஒரு தப்புத் தண்டாவுக்கும் போகமாட்டான்" என்றாள் ஸ்ரீமதி பே பா பூ.

வேறு வழியில்லாமல் நானும் " சரி " என்று ஒப்புக் கொண்டேன்.

பிறகு, ஸ்ரீமதி பே பா பூ போய்விட்டாள். தாய் அப்பால் போனாளோ இல்லையோ, அதுவரையில் அழுதுவழிந்த சிங் டூவின் முகம் பளிச்சென்று பிரகாசமடைந்தது. என்னிடம் அவன் கலகலப்பாக ஹிந்தியில் ஏதோ கூறினான். நான் கலியனைக் கைகாட்டினேன். ஏனெனில், கலியனுக்குத்தான் ஹிந்தி தெரியும். எனக்குத் தெரிந்த அந்நிய பாஷையெல்லாம்கூடி, ஏதோ கொஞ்சம் அரைகுறையான ஆங்கிலந்தான். ஸ்ரீமான் சிங் டூவுக்கு ஆங்கிலமும் நன்றாய்த் தெரிந்தது ; ஹிந்தியும் நன்றாய்த் தெரிந்தது. சற்றுநேரம் வரையில், கலியனிடமும் என்னிடமும் அவன் மாறிமாறி என்னென்னவோ தமாஷாய்ப் பேசிக் கொண்டிருந்தான்.

பிறகு, நான் கொஞ்சம் வெளியில் போய் வருகிறேன்" என்றான் சிங் டூ.

எங்கிருந்தோ ஒரு விருந்தாளி வந்தாள். அவளோடு வந்தது ஒரு உபத்திரவம். அதைக் கலியன் தீர்த்து வைத்த அதிசயமே அதிசயம். படித்துப் பாருங்கள்.

நான் : இந்த ராத்திரியிலா ? தவிர, இது அசலூ ராயிற்றே! உன் அம்மாள் வேறே—

அவன் : ஓ ! அம்மாளைக் கொண்டு ஆற்றிலே போடு. அவள் சாகும்வரையில், நான் சுகம் அனுபவிக்காமல் காத்துக்கொண் டிருக்க முடியுமா ?—போய் இதோ வந்து விடுகிறேன்.

நான் : கலியனைத் துணைக்கு அனுப்புகிறேன். சற்று இரு.

" ஓ! " என்று கூவி, கலகலவென்று நகைத்த சிங் டூ, " அதெல்லாம் யாரும் வேண்டாம். நான் என்ன பச்சைக் குழந்தையா ?—பரவா யில்லை " என்று சொல்லிவிட்டு, என் பதிலை எதிர்பாராமலே விர்ரென்று வெளியே போய்விட்டான்.

எனக்குப் பெரிய கலவரமாய்ப் போய் விட்டது ; மனசு ' விதுக்கு விதுக்கு ' என்று அடித்துக் கொண்டது.

" கலியா ! "

" ஸார் ! "

" இதென்ன பெரிய வில்லங்கமா யிருக்கிறதே ! "

கலியன் மௌனமாய்த் தலையை ஆட்டினான், ' நிராட்சேபனையாய் இது ஒரு வில்லங்கம்தான் ' என்கிற பாவனையில்.

" நீ என்ன நினைக்கிறாய் ? "

" படுக்கையைப் போடவா ? "

" நான் கேட்டதற்குப் பதில் ? "

" கவலைப்படாதீர்கள். சுவாமி இருக்கிறார். "

" எங்கே யிருக்கிறார் ? "

" இதென்ன கேள்வி ! "

" பின்னே என்ன ? சுவாமி இருந்தால், இந்த மாதிரி உபத்திரவமெல்லாம் நமக்கு ஏன் வருகிறது ? "

" சுவாமி விளையாடுகிறார். "

" பேஷ் ! நம்மை உபத்திரவம் செய்வதே சுவாமியின் விளையாட்டானால், அந்தச் சுவாமி நமக்கு வேண்டாமப்பா. "

" அது சரிதான். சுவாமி ஒரு 'கம்பளி மூட்டை', தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் அவரை விட்டாலும், உங்களை அவர் விடமாட்டார். "

" சரி, கலியா ! உன் தமாஷெல்லாம் ஒருபுற மிருக்கட்டும் ; இந்த இக்கட்டிலிருந்து எப்படி விடுதலை யடைவது ? அதற்கு ஒரு வழி சொல். "

" அதுதான் சொன்னேனே ? நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நீங்கள் பேசாமல் இருங்கள். "

" சரி, நடந்தது நடக்கட்டும் " என்று நினைத்துக்கொண்டு, படுக்கையில் படுத்தேன்.

வெகுநேரம் வரையில் தூக்கம் வரவில்லை ; சிங்டூவும் திரும்பி வரவில்லை. கலியனோ நிஷ்கவலையாய் ' ஜம் ' என்று குறட்டை விட்டுக்கொண்டு தூங்கலானான்.

பாதிராத்திரியில் நான் கொஞ்சம் கண்ணயர ஆரம்பித்த சமயத்தில், வாசல் கதவில் ஏதோ சத்தம் கேட்டது. கலியனை எழுப்பினால், அவன் மண்ணாந்தை மாதிரி படுத்திருந்தானே யொழிய, எழுந்திருக்கக் காணோம். நானே போய்த் தாழ்ப்பாளைத் திறந்தேன்.

சிங்டூதான். நான் கதவைத் திறந்தேனோ இல்லையோ, அவன் ' பொதீர் ' என்று என் காலடியிலே நெடுஞ்சாங்கிடையாக விழுந்தான். இந்தச் சத்தத்திலே கலியனும் விழித்தெழுந்து விளக்கேற்றிக்கொண்டு ஓடிவந்தான்.

சிங்டூவுக்குச் சுயப் பிரக்ஞையே இல்லை. அவ்வளவு அதிகமாய்க் குடித்து, லாகிரி மயக்கத்தி லிருந்தான் ! படுக்கையிலே ஒரு மரக்கட்டை மாதிரி அவனைக் கலியன் தூக்கிப்போட்டான்.

மறுநாள் பகலெல்லாம் சிங்டூ சரியாய்த்தான் இருந்தான். இரவு வந்ததோ இல்லையோ ; முதல் நாளைப் போலவே, சவாரி வைத்துவிட்டான் ; என்ன சொல்லியும் கேட்க வில்லை.

இம்மாதிரியே நாளுக்கு நாள் சிங்டூவின் அட்டகாசம் வர வர ஜாஸ்தியாகிக்கொண்டேவந்தது. கடைசியில் ரொம்ப மிதமிஞ்சிப் போய்விட்டது. அவன் வெளியில் போவதோடு நிற்கவில்லை. வெளியிலிருந்து யாராரோ குட்டிகளையும் பயல்களையும் வீட்டுக்கே அழைத்துவரத் தொடங்கிவிட்டான் ! வீட்டுக்குச் சொந்தக்காரன் தானேபோல நடந்துகொண்டானே யொழிய, என்னைப்பற்றி லட்சியமே செய்யவில்லை.

இந்த நிலையில் கலியனைத் தவிர, எனக்கு வேறு யார் உதவிசெய்ய முடியும்:

"கலியா!"

"ஸார்."

"இந்த ஆளை மடக்க ஒரு வழி கிடையாதா?" என்று மிக எக்கத்தோடு கேட்டேன்.

"நான் பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று கலியன், வழக்கப்படியே ரொம்ப அமைதியாய்ப் பதில் அளித்தான்.

"என்ன பார்த்துக்கொள்கிறாய்?"

இதற்குக் கண்டிப்பாய் ஒரு மாற்றுக் கண்டுபிடிப்பதாக, கலியன் மிகத் திடமாக எனக்கு உறுதி கூறினான்.

இரண்டொரு நாள் கழிந்தது. ஒரு நாள் காலை வெளியேபோன சிங்டு மறு நாள் காலை வரையில் திரும்பி வரவே யில்லை.

"கலியா!"

அவன் விஷமப் புன்சிரிப்புடன், "என்ன?" என்று கேட்டான்.

"பெரிய தொல்லையாய்ப் போய் விட்டதே! அந்த ஆசாமி வரவே யில்லையே, என்ன செய்வது?"

"இன்னும் இரண்டு மாசத்துக்கு அவரைப்பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம்."

"என்ன விஷயம்?"

"ஒரு போலீஸ்காரனை அநாவசியமாய் அடித்துவிட்டு, அவர் ஜெயிலுக்குப் போய்விட்டார்."

"என்ன, என்ன! ரொம்ப மோசமாகி விட்டதே! அந்த ராட்சஸி வந்தால், என்ன செய்வது?"

"அவள் வருமுன் இவர் விடுதலையடைந்துவிடுவார். அது தவறினாலும் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்; கவலைப்படாதீர்கள்" என்று மறுபடியும் அபயமளித்தான் கலியன்.

எப்படியானாலும் சரி; இன்னும் இரண்டு மாசத்துக்கு இந்தச் சனியன் பிடித்த சிங்டுவின் தொல்லை இல்லாமலிருக்குமல்லவா? அது எனக்குச் சந்தோஷமாய்த்தான் இருந்தது.

நாளைக்குச் சிங்டு விடுதலையாகப் போகிறான். இன்று ராத்திரி வந்து சேர்ந்துவிட்டாள் அந்தப் பீடை பிடித்த பே பா பூ.

"எங்கே என் மகன் சிங்டு? நாளைக்கே பிரயாணமாக வேண்டும்" என்று ஆத்திரத்தோடு கேட்டாள் பே பா பூ.

நான் பேசாமலிருந்தேன். கலியன் சமாதானம் சொல்லத் தொடங்கினான். அதை நான் மொழிபெயர்த்துமட்டில் கூறினேன்.

கலியன்: அதென்ன அம்மா, அவர் மகா பிடிவாதக்காரர்! நான் வேண்டாமென்றேன்; அவர் கேட்கவில்லை. 'என் அம்மாள் இவ்வளவு தூரம் வந்து புஸ்தகத்திற்கு விஷயம் சேகரிக்கிறாள். நான் மட்டும் சோம்பேறியாய்த் தண்டச்சோறு தின்றுகொண்டு சும்மா இருப்பதா? அது முடியாது. இந்த நாட்டுச் சிறை நிலைமைகளை நான் நேரே ஆராயப்போகிறேன். அதற்கு ஒரு தந்திரம் செய்கிறேன்' என்று சொல்லி ஒரு போலீஸ்காரனை அடித்து ஜெயிலுக்குப் போய்விட்டார். நாளைக்கு விடுதலையாவார்.

பே பா பூ: பேஷ்! பேஷ்! அப்படியா செய்தான்? பார்த்தால், அசடு போல் இருக்கிறானே யொழிய, அவன் மகா புத்திசாலி! மகா புத்திசாலி! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், மிஸ்டர் உலகநாத்?

நான்: ஓ! அதற்கென்ன ஆட்சேபணை!

ஒரு தினுசாய் இந்தச் சங்கடம் தீர்ந்தது; நாளைக்கு எல்லாச் சங்கடமும் தீர்ந்துவிடும் என்று சந்தோஷ முற்றேன்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம், என் படிப்பறையில் தனியாய் உட்கார்ந்திருந்தேன். கலியன் மெல்லத் தலையை நீட்டினான்.

நான்: அச்சா! நல்ல வேலை செய்தாயப்பா, கலியா! உன் சாமர்த்தியத்தை மெச்சுகிறேன்.

கலியன்: அது கிடக்கட்டும். உடனே எனக்கு முப்பது ரூபாய் பணம் வேண்டும்?

நான்: இதொரு பிரமாதமா? என்ன வேண்டுமானாலும் தருகிறேன். ஆனால், உனக்கென்ன அப்படி அவசரமுடை?

கலியன்: ஒன்று மில்லை. நாளைக்குச் சிங்டு வந்துவிடுவா ரல்லவா?

நான்: வரட்டுமே! அவனிடம் ஏதாவது கடன் வாங்கி யிருக்கிறாயா, என்ன?

கலியன்: கடன் வாங்க வில்லை; கடன் பட்டுவிட்டேன்.

நான்: இதென்ன விசித்திரம்?

கலியன்: அவரிடம் ஒரு பந்தயம் போட்டேன்; அதில் தோற்றுவிட்டேன். ஆகையால், அவருக்கு நான் முப்பது ரூபாய் தரவேண்டும்?

நான்: குடிகாரனிடம் பந்தயமா?

கலியன்: ஆமாம். ஒருநாள் அவர் பெரிதும் குடித்துவிட்டு, லாகிரியோடு, தலை சுற்றிய வண்ணம், ரோட்டிலே வந்துகொண்டிருந்தார். நானும் அவரோடு நடந்தேன். எதிரே ஒரு போலீஸ்காரன் நின்றான். 'இந்தப் போலீஸ்காரனை நீர் அடிக்க முடியாது', என்று அவரிடம் நான் சொன்னேன். "நன்றாய் முடியும்" என்றார் அவர். 'முடியவே முடியாது' என்றேன் நான். 'என்ன பந்தயம்?' என்றார் சிங்டு. 'முப்பது ரூபாய்' என்று நான் சொன்னேன். தட்சணமே அவர் அந்தப் போலீஸ்காரனை விட்டார் ஓர் அறை. நான் பந்தயத்தை இழந்தேன். அது தான்......

"போதும்! போதும்! கலியா, வாஸ்தவமாகச் சொல்லுகிறேன். நீ இப்போது எங்கே யிருக்கவேண்டும் தெரியுமா? மேல் நாட்டிலே ஒரு ராஜதந்திரியா யிருந்துகொண் டிருக்க வேண்டும். ஆஹா! எப்பேர்ப்பட்ட புத்திமான் நீ" என்று அவனைப் பாராட்டி விட்டு, பரம சந்தோஷத்தோடு பெட்டியைத் திறந்து, முப்பது ரூபாய் பணத்தை அவனிடம் நீட்டினேன்.

மத பக்தி

ஜீவஹிம்சையே கூடாது என்று புத்தர் பெருமான் சொல்லி யிருக்கிறார். புத்த மதத்தில் மிகுந்த நம்பிக்கையுடைய ஒரு பர்மாக்காரனுக்கு மீன் பிடிப்பதில் ரொம்ப ஆசை. ஆகையால், அவன் ஒரு யுக்தி செய்தான். ஒரு மரக்கட்டையை எடுத்தான். வெள்ளை வெளேர் என்று அதற்கு வர்ணம் பூசினான். அதன்பின் அதை ஆற்றிலே தண்ணீரில் கரையோரமாய்ப் போட்டான், மீன்கள் அதைக்கண்டு, என்னவோ ஏதோ வென்று பயந்து துள்ளி மணலிலே வந்து விழுந்து மாண்டன. அந்த மீன்களைப் பொறுக்கிப் பொறுக்கிப் பையிலே நிறைத்துக்கொண்டான் அந்தப் பர்மியன்.

"இப்படிக் கொலை செய்யலாமா?" என்று அவனை ஒரு நண்பர் கேட்டார்.

"நான் எங்கே கொலை செய்கிறேன்? அவை தற்கொலை செய்து கொள்கின்றன. அப்படித் தற்கொலை செய்துகொள்பவற்றை நான் பொறுக்கிக் கொள்கிறேன். இவ்வளவுதானே" என்று அவன் பதிலிறுத்தான்!



உடம்பும் மருந்தும்

மேல் நாட்டில் ஒரு வழக்கம் உண்டு. பிள்ளை யில்லாதவர்கள், அநாதை நிலையங்களிலிருந்து குழந்தைகளை எடுத்து வளர்ப்பதுண்டு.

டாக்டர் வில்லியம் இ. ஆகின் பாக் என்பவரிடம், வயது வந்த இரு பணக்காரத் தம்பதிகள் சென்றார்கள். "டாக்டர்! எங்களுக்கு அநாதை நிலையத்திலிருந்து ஒரு ஆண் குழந்தையையும் ஒரு பெண் குழந்தையையும் பொறுக்கித் தாருங்கள். அழகான குழந்தைகள் எங்களுக்கு வேண்டாம். அவற்றை யாராவது எடுத்து வளர்த்து விடுவார்கள். குரூபமும் நோயுமுள்ள குழந்தைகளே எங்களுக்கு வேண்டும்" என்று கேட்டார்கள். இதைக் கேட்ட டாக்டருக்கு ஆச்சர்யமா யிருந்தது.

இருந்தாலும், அவர்கள் விரும்பியபடியே, கோணல் விழியும், சப்பைக்காலும், வேறு குரூபங்களும் உள்ள இரு குழந்தைகளைப் பொறுக்கி, அந்தத் தம்பதிகளிடம் டாக்டர் அளித்தார். அவற்றை அவர்கள் சந்தோஷமாகவே வாங்கிச் சென்றார்கள்.

இரண்டு வருஷத்துக் கெல்லாம் மீண்டும் அவர்கள் வந்து, வேறொரு பெண்ணும் ஒரு பிள்ளையும் முன் போலவே வேண்டுமென்று டாக்டரைக் கேட்டார்கள்.

முன்னே கொண்டுசென்ற குழந்தைகள் என்ன ஆயின? நிபுணர்களான வைத்தியர்களைக் கொண்டு, கோணல் கண்களை நேர்ப்படுத்தி, சப்பைக் கால்களை நிமிர்த்தி, இதர அங்கங்களையும் சீர்ப்படுத்தி, அழகான குழந்தைக ளாக்கி விட்டார்கள் அந்தத் தம்பதிகள். அதனால் ருசி தட்டிய அவர்கள், மீண்டும் அதேமாதிரி இரு குழந்தைகளை வளர்க்க விரும்பிவிட்டார்கள்.

இம்மாதிரியே மேலும் இரண்டு மூன்று ஜோடிகளை அவர்கள் சீர் படுத்திவிட்டதாக, அந்த டாக்டரே எழுதிவைத்திருக்கிறார்.

ஆகையால், எந்த நோயாயினும் எந்த அங்கவீனமாயினும், குணப்படுத்தவே முடியாததா யிருக்குமோ என்று நம்பிக்கை தளர வேண்டியதில்லை என்பது அந்த டாக்டரின் கருத்து. நோய் வந்த எவரும் இதை மனதில் முடிபோட்டுக் கொள்வது பாதி வைத்தியமாகும். ஏனெனில், மனத்தளர்ச்சி தான், பெரும்பாலோரின் நோயை முற்றச் செய்கிறது.

படிக்கும் முறை

இந்தப் பத்திரிகையை நீங்கள் எப்படிப் பிடித்துக்கொண் டிருக்கிறீர்கள்? ஒரு வேளை இது உங்களது மடியில் உங்கள் கண்ணுக்கு இருபது அங்குல தூரத்தில் இப்போது விரிந்துகிடக்கக்கூடும். இது தவறாகும். ஏனெனில், ஆரோக்கியமான கண்கள், பத்தங்குல தூரதிலுள்ளதை மிகத் தெளிவாகப் பார்க்கக் கூடியவை. அதற்கு மேல் எட்டிப் புஸ்தகங்களைப் பிடித்துக்கொண்டு நாம் படிப்போமானால், கண்ணுக்கு அதனால் மிகுந்த சிரமம் உண்டாகும். ஆகையால், சரியாய்ப் பத்தங்குல தூரத்தில் புஸ்தகங்களைப் பிடித்துப் படிக்கப் பழகுங்கள்.

ஆறு மாதத்துக் கொருமுறை, உங்கள் கண்களை டாக்டரிடம் காட்டி, பரீட்சித்துக் கொள்ளுங்கள்.

ஒரே நிலையில் பல மணி நேரம் இருந்துகொண்டு படிக்காதீர்கள். சில நிமிஷநேரத்துக் கொருமுறை எழுந்து கொஞ்ச தூரம் நடந்து விட்டு வாருங்கள். அப்போது, முடிந்தவரையில், மிக எட்டவிருக்கும் ஏதாவது ஒரு பொருளைச் சிறிது நேரம் ஊன்றிப் பாருங்கள். இப்படிச் செய்தீர்களானால், படிப்பிலே திடீரென்று சலிப்புத் தட்டாது.

படிக்கும்போது, சரியான வெளிச்சம் மிக்க அவசியமாகும். மெள்ள வாசிக்காதீர்கள். மிக வேகமாக வாசியுங்கள். முதலிலே, வார்த்தைகளின் அர்த்தம் புரியாமற் போகலாம். கொஞ்சம் பழகிய பிறகு, அது சரிப்பட்டுவிடும். மெள்ள வாசிப்பதால்தான், புஸ்தகத்திலே சலிப்பேற்படுகிறது.

சௌக்கியமாக உட்கார்ந்து, சிரமப்படாமல் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டீர்களானால், படிப்பிலே பெருங் களிப்பு அடைய முடிவதை, நீங்கள் காண்பீர்கள்.

கடார நாரத்தையின் குணம்

கடார நாரத்தையால், பித்த நோய், வாய் நீரூறல், அருசி இவை போகும் என்று சர்க்கார் பிரசுரமான **குணபாடம்** கூறுகிறது.

இதன் பழரசம் உஷ்ணத்தையும் தேக அனலையும் தணிக்கும். தாகத்தை அடக்கும். பித்த வாந்தியை நிறுத்தும். பழத்தின் மேல் தோலைச் சருக்கரைப் பாகிலோ தேனிலோ ஊறவைத்து, சீதபேதிக்குக் கொடுக்கலாம். பழரசத்தை மணப்பாகு செய்து, சுரம், வாந்தி, அரோசகம் ஆகியவைகளுக்குக் கொடுக்கலாம்.

சரீரத்தை அழுக்காக்கிக் கொள்வது குழந்தைகளின் சுபாவம். ஆனால், அவர்களை அப்படியே விட்டுவிடாமல் அடிக்கடி குளிப்பாட்டிச் சுத்தம் செய்வது தாய்மாரின் காரியம். ஒரு மனிதன் எவ்வளவு பாபம் செய்திருந்தாலும், கடைசியில் அவனுக்கு நல்வழியை ஈசுவரன் காட்டுவது நிச்சயம்.

—ஸ்ரீ பரமஹம்ஸர்.

பறித்த பூக்கள்

ஒரு மனிதனை வண்டியிலே உட்கார்த்தி வைத்து, அதை மற்றொரு மனிதன் இழுப்பது ஒரு கோரமாகும். இத்தகைய ரிக்ஷாவைப்பற்றி, 'ராஷ்டிரவாணி'யிலே காணும் ஒரு ரஸமான குறிப்பு இது :

சில வருஷங்களுக்கு முன்னே ஒரு நாட்டுப்புறத்து அம்மணி, சென்னைக்கு விஜயம் செய்திருந்தாள். ஒரு வாரம் பட்டணத்திலே தங்கி யிருந்துவிட்டு, கிராமத்துக்குச் சென்றாள். பட்டணத்தில் ஏதாவது அதிசயமுண்டா வென்று, மேற்படி அம்மணியை ஊரார் கேட்ட போது, அவள் சொன்னாளாம்: "பட்டணத்திலே சின்னச் சின்னக் குதிரை வண்டிகள் இருக்கின்றன. ஆச்சரியமென்னவென்றால், அந்த வண்டிகளின் குதிரைகள் மனிதர்களைப் போலவே தலையும் காலும் கையுமாக இருக்கின்றன" என்றாளாம். அந்த அம்மணி எதைக் கண்டு இந்தத் தப்பபிப்பிராயம் கொண்டாள் என்பதை விவரிக்கத் தேவை யில்லை. அதுதான் ரிக்ஷா என்ற நர வாகனம்.

திலகரும் கோகலேயும்

அமிதவாதி திலகரையும், மிதவாதி கோகலேயையும் பற்றி, பின்வரும் ருசிகரமான தகவலை, 'ஹிந்துஸ்தா'னில் நண்பர் கி. ச. எழுதியுள்ளார் :

திலகர் பம்பாய் நகரத்துக்கு வந்தால், சர்தார் கிரஹத்தில் தவிர வேறெங்கும் தங்கமாட்டார். அவர் சர்தார் கிரஹத்தில் தங்கியிருக்கும் சமயத்தில் கோபால கிருஷ்ண கோகலேக்குப் பம்பாய் நகரத்தில் அலுவல் ஏற்பட்டுவிட்டால், எங்கே வந்து தங்குவார்? திலகர் பம்பாய் நகரத்துக்கு வந்தால், கோகலே பூனாவுக்குச் சென்றுவிடுவார். திலகர் பூனாவுக்குச் சென்றால், கோகலே பம்பாய் நகரத்துக்கு வந்து தம் அலுவல்களையெல்லாம் கவனிப்பார்! இப்பேர்ப்பட்ட இரு தலைவர்களுமே சித்பவன் பிராமணர்கள் தான்.

திலகருக்கும் கோகலேக்கும் இவ்வளவு அபிப்பிராய பேதம் இருந்தபோதிலும், அவ்விருவர்களும் சந்தித்துப் பேசுவதில்லை என்ற நிலைமை ஏற்பட்டிருந்த போதிலும், இரண்டு பேர்களும் சேர்ந்து ஒரு பொதுக் காரியத்தைச் செய்ய வேண்டி ஏற்படும்போது, இருவரும் சேர்ந்து விடுவார்களாம். இவ்விருவரையும் ஒரே காரியத்தில் ஈடுபடச் செய்வதற்கு ஓர் உபாய மிருந்தது. அது என்ன தெரியுமா? பூனாவில் பந்தேர்க்கார் என்னும் தலைவர் ஒருவர் இருந்தார். அவரிடம் திலகருக்கும் மரியாதையுண்டு; கோபால கிருஷ்ணரும் மரியாதை செலுத்தினார். அவர் எது சொன்னாலும் இவ்விரு தலைவர்களும் தட்டாமல் செய்வார்கள். இந்த ரகசியத்தை அறிந்தவர்கள், ஸ்ரீபந்தேர்க்காரை அணுகி, இரு தலைவர்களுடைய ஆதரவையும் தேடிக் கொள்வார்கள்.

கவிஞனின் பலம் !

இந்த அரிய ஜீவிய சரித்திரக் குறிப்பு, 'ஜோதி'யின் தலையங்கக் கட்டுரையிலே காணப்படுகிறது :

ஸ்பெயின் தேசத்தில் ஸெர்வாண்டெஸ் என்ற ஒரு கவிஞன் இருந்தான். இவன் வாழ்நாளின் பிற்பாகம் வறுமையின் உருவமா யமைந்துவிட்டது. போதாக் குறைக்குச் சிறைவாசமும் ஏற்பட்டது. இந்தச் சிறைவாசத்தின் போதுதான், உலகத்தின் பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிற 'டான் க்விக்ஸோட்' என்ற பிரபல கிரந்தத்தை எழுதினான். இவனுடைய கடைசி நாட்களில் இவனுக்கு எழுதுவதற்குக் காகிதங்கூடக் கிடைக்கவில்லை. அவ்வளவு தரித்திரம். ஆனால், தன் எண்ணங்களை இவனால் அடக்கிவைக்க முடியவில்லை. எனவே, அவ்வப்பொழுது அகப்பட்ட தோல் துண்டுகளின் மீதெல்லாம் கிறுக்கி வைத்தான். இவனுடைய பரிதாப நிலையைப் பார்த்த ஒரு சிலர், இவனுக்கு உதவி செய்யுமாறு ஒரு பிரபுவைக் கேட்டார்கள். அப்பொழுது அந்தப் பிரபு கூறினான் :—"ஓ! ஸெர்வாண்டெஸின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலே இருக்கவேண்டும். ஏனென்றால், அவனுடைய வறுமைதான், இலக்கிய உலகத்தைச் செழுமையாக்கிக் கொண்டு வருகிறது." கவிஞர்கள் சிறையிலே வசித்தாலும், அவர்கள் அதனைச் சிறையாகக் கருதுவதில்லை. அவர்களுடைய சுதந்திர உணர்ச்சியானது, சிறையின் இருட்டைப் பிரகாசமயமாக்கி விடுகிறது.

பௌராணிகர்

'திருநகரின் புறம்பு' என்று மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர், 'கலைமக'ளில் வரைந்துள்ளதொரு கட்டுரையில், பின் வருமாறு சித்தரிக்கிறார் :

அங்கே மின்மினி போன்ற விளக்கொன்று எரிந்துகொண் டிருந்தது. அதன் வெளிச்சத்தில் கிழவருடைய முகமும் அவர் நெற்றியில் அணிந்திருந்த விபூதியும் பளிச்சென்று தெரிந்தன. அவர் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார். அந்தக் கண்ணாடியும் கிழவரைப் போல் பல வருஷங்களாக உபயோகப்பட்டு முதிர்ந்திருந்தது. அக்கண்ணாடியின் இரண்டு பக்கங்களிலும் கயிறுகளைக் கோத்து அவற்றைப் பின் புறத்தில் குடுமியிலே கட்டியிருந்தார். அவர் குனிந்து குனிந்து சுவடியைப் பார்ப்பதும் பிறகு நிமிர்ந்து நிமிர்ந்து பிரசங்கம் செய்வதுமாக இருந்தார். அப்படி நிமிர்ந்து வாயைத் திறந்தபோது அதில் இருந்த பற்களிற் பல முன்பே விடை பெற்றுக்கொண்டன வென்று தெரிந்தது.

அவர் ஒரு வெள்ளைக் கம்பளியை மேலே போர்த்திருந்தார். கழுத்தில் ருத்திராக்ஷம் அணிந்திருந்தார். மதுரை ஸ்தலத்தின் பெருமையையும் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் இயற்றியருளிய திருவிளையாடல்களையும் விரித்துச் சொல்லும் ஹாலாஸ்ய மஹாத்மியம் என்னும் புராணத்தை அவர் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

நாள் தோறும் அதை வாசித்துப் பிரசங்கம் செய்வதும், வருகிறவர்கள் உண்டிப் பெட்டியில் போடும் தம்படி காலணா அரையணாக்களைச் சேர்த்து அந்தச் சிறு தொகையைக்கொண்டு ஜீவனம் செய்வதும், அவருடைய வழக்கமாக இருந்தன. அந்த நிலையிலே அவருக்கு ஒரு விதமான திருப்தி இருந்தது.

புத்தக உலகம்

பாபூ அல்லது நானறிந்த காந்தி : ஆசிரியர் : கனச்யாமதாஸ் பிர்லா. மொழிபெயர்த்தவர் : அ. சுப்பையா. வெளியிட்டோர் : லலிதா அண்ட் கம்பெனி, லிங்கி செட்டித் தெரு, சென்னை. விலை ரூ. 1-8-0.

இந்தியாவிலே இது மகாத்மா காந்தி சகாப்தம். ஆயிரம் வருஷங்களுக்கொரு முறை அவதரிக்கும் அபூர்வ புருஷர்களில் ஒருவர் அவர். இப்பேர்ப்பட்ட மகானைப்பற்றி எத்தனையெத்தனையோ புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன. என்றாலும், அவருடைய புருஷாகாரம் அளக்க அளக்க அகண்ட ஆகிருதி கொண்டதாகும். ஜி. டி. பிர்லா, காந்தியின் பக்தர்களில் ஒருவர்; இணையற்ற செல்வர். மகாத்மாஜியின் அருகே யிருந்து, அவரது குணாதிசயத்தைத் தாமறிந்தவாறு வர்ணிக்கிறார் பிர்லா. அங்கங்கே அருமையான சம்பாஷணைகளும் நிறைந் திருக்கின்றன இந்த நூலில். மொழிபெயர்த்துள்ள நண்பர் அ. சுப்பையாவின் நடை, மிக எளிதாயும் அழகாயு மிருக்கிறது.

கபால குண்டலா : ஆசிரியர் : பங்கிம் சந்திரர். மொழிபெயர்த்தவர் : த. நா. குமாரசாமி, பி. ஏ. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை ரூ. 1-8-0.

பங்கிம் சந்திரரின் மிகச் சிறந்ததொரு நவீனம் இது. அபூர்வமும் ஆச்சர்யமும் நிறைந்த கதைப் போக்கு. நவகுமாரன், விதியின் குழந்தையாகி, எதிர்பாராத புது மனைவியைப் பெற்று, பழைய மனைவியின் புதிய காதலால், வாழ்விழக்கும் சோகக் கதை. மயானத்திலே ஆற்று வெள்ளத்தி விழியும் கபால குண்டலையின் ஆத்ம சாந்தியும் கம்பீரமும் படிப்பவரின் உள்ளத்தை விட்டு அகலமாட்டா. நூல் முழுதும் இடை யிடையே நிரவியுள்ள சம்பாஷணைகளின் சாதுர்யமும் கவிதைக் கருத்துக்களும் சிந்தைக்கினிய விருந்தாகும். தேனென்ன இனிக்கும் நடையிலே ஸ்ரீ குமாரசுவாமி மொழிபெயர்த் திருக்கிறார்.

தமிழ் வேதம் : ஆசிரியர் : தென் ஆப்பிரிக்கா, டர்பன் 'செந்தமிழ்ச் செல்வன்' ஆசிரியர் கோ. இராமசுவாமி. கிடைக்குமிடம் : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், பவழக்காரத் தெரு, சென்னை. விலை ரூ. 1-4-0.

சைவ சமயத்தைப்பற்றியும், சில முக்கியத் தென்னாட்டுச் சிவாலயங்களைப் பற்றியும், சைவ சமயாசாரியர்களைப் பற்றியும் மிகச் சுலபமான முறையில் விளக்கும் ஒரு நல்ல நூல் இது. அங்கங்கே ஏராளமான பாடல்கள் மேற்கோள்களாய்த் தரப்பட் டிருக்கின்றன. நேர்த்தியான பல ஆப்டோன் படங்கள் கண்ணைப் பறிக்கின்றன. அருமையான காகிதம். சுத்தமான பதிப்பு. கெட்டியான அமைப்பு.

ரவீந்திரநாத் தாகூர் : ஆசிரியர்கள் : அரு. காந்தி அண்ணாமலை, பி. இராஜேந்திர லால். வெளியிட்டோர் : சிதம்பரநாதன் கம்பெனி, மாங்தாலே வீதி, இரங்கோன். விலை அணா 12.

வங்காளத்தின் இணையற்ற கவிஞரான ரவீந்திரநாத தாகூரின் வாழ்க்கை வரலாறும் இந்தியக் கலைகளின் வளர்ச்சிக்காக அவர் செய்துள்ள சேவைகளும் இந்தியர் அனைவரும் அறிய வேண்டியவை யாகும். இந்த நூலிலே, அவ்விவரமெல்லாம் கோவையாய் எழுதப்பட்டிருக்கின்றன. ரஸமான கதைப் போக்கிலோ, கவிஞரின் மனவளர்ச்சி ஆராய்ச்சியாகவோ, அவரது ஸேவைகளின் பரிசீலனை மதிப்பாகவோ இந்நூல் அமையாவிட்டாலும், இதற்குள்ளே அவரைப்பற்றிய ஏராளமான தகவல்கள் சேகரித்து நிறைக்கப்பட் டிருக்கின்றன.

சந்தனக் காவடி முதலிய கதைகள்—ஆசிரியர் : தி. ஜ. ர. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை (காலிகோ) ரூ. 1-0-0.

முன் பதிப்பிலே எட்டுக் கதைகள் தான் இருந்தன. பதிப்பும் மிக மட்டமாயிருந்தது. இந்த உயர்ந்த பதிப்பிலே, இன்னும் நான்கு கதைகள் கூடுதலாகச் சேர்ந்திருக்கின்றன. அமைப்பும் பதிப்பும் அல்லயன்ஸ் கம்பெனியின் வழக்கமான சிறப்புடன் பொலிகின்றன.

தேயிலைத் தோட்டம் : ஆசிரியர் : த. ரா. வெளியிட்டவர் : ஜீ. தர்மராஜா, பி. ஏ., காரைக்குடி. விலை அணா 12.

இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே வேலை செய்யும் கூலிகளைப்பற்றியது இந்த நாடகம். தோட்ட மானேஜர், தனக்குக் கட்டுப்படாத பெண்ணையும் அவளைச் சேர்ந்தவர்களையும் எவ்வளவோ கஷ்டப்படுத்துகிறான். கடைசியில் பெண் பரிதாபமாய் உயிர் துறக்கிறாள். பெண்ணின் காதலனும் பெற்றோரும் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்து தேச சேவையில் ஈடுபடுகிறார்கள். கதாபாத்திரங்கள் அங்கங்கே சமயோசித சாமர்த்தியத்துடன் பேசுகிறார்கள்.

மேஹர் உன்னிஸா : ஆசிரியர் : கமல காந்த வர்மா. மொழிபெயர்த்தவர் : அ. கி. ஜயராமன். வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், ஜி. டி., சென்னை. விலை அணா 8.

ஜீவ சித்திரங்களடங்கியதொரு அரிய நவீனம். பாதுஷாவின் மோஹத்துக்காளாகி, புருஷனை இழந்த மேஹர், கதியற்று, அரண்மனையையே அடைகிறாள். இறுதியில் பாதுஷாவின் காதல் கிழத்தியாகிறாள். அந்த மேஹர் உன்னிஸா தான், தாஜ்மஹால் என்ற ஈடில்லா உன்னதச் சிற்பச் செல்வம் சிருஷ்டிக்கப்படுவதற்குக் காரணமான நூர்ஜஹான். உருக்கமும் காதலும் நிறைந்த அவ்வரசியின் அருங்கதை இது. மொழிபெயர்ப்பு மிகவும் சரளமாய் அமைந்திருக்கிறது. வர்ணமும் வர்ணனையும் நிறைந்த நடை.

மழையும் புயலும் : ஆசிரியர் : வ. ரா. வெளியிட்டோர் : நவயுகப் பிரசுராலயம், ஜார்ஜ் டவுன், சென்னை. விலை ரூ. 1-8-0.

தலை சிறந்த தமிழ் எழுத்தாளரான வ. ரா. அவர்களின் 44 கட்டுரைகள் இதிலே அடங்கி யிருக்கின்றன. அத்தனை

யும் ஒவ்வொரு தமிழனின் சிந்தனை யுலகிலும் அடிக்கவேண்டிய 'மழையும் புயலு' மாகும். "தூங்குகிற பம்பாத்தில் கை வைத்தால், கையில் 'பட்' என்று விழும். படுக்கையில் கிடக்கிற பம்பாத்தை, சிறு குழந்தைகூடத் தட்டிக் கொடுக்கலாம். படுக்கையில் கிடக்கும் பம்பாத்தின் கதி நமக்கு நேர்ந்து விட்டதே! யாரிடம் முறையிட்டுக் கொள்வது?" என்று வ. ரா. உள்ளங் குமுறுகிறார். இந்த வருத்தம், அவரது சிந்தனை மிக்க கட்டுரைகள் அத்தனைக்கும் ஜீவ சுரமாகும். செத்த வாழ்வு, அபத்தப் பேச்சு, அறியாமை இவற்றுக் கெல்லாம் சாட்டையடி கொடுப்பன அவருடைய எழுத்துக்கள். அவரது நடையிலே ஒரு தெளிவும் விறுவிறுப்பும் தமிழனின் தற்காலச் சீரழிவைக் கண்டதொரு மன வேதனையும் நிறைந்திருக்கின்றன. தமிழன் தலை நிமிர்ந்து, வாழ்வுபெற வேண்டுமானால், இவை போன்ற கட்டுரைகளைப் படித்து, சிந்தித்து, மனம் பண்படவேண்டியது அவசியமாகும்.

தமிழ்நாட்டு ராஜ்யத்தலைவர்கள்: ஆசிரியர்: ரா. நாகராஜன். வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை: அணா 6.

எங்கேயோ சீமையிலுள்ள சர்ச்சிலைப் பற்றியும், ஜெர்மனியிலுள்ள ஹிட்லரைப்பற்றியும் பக்கம் பக்கமாக நாம் படிப்போம்; நமது தலைவர்களைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. அந்தக் குறையை நீக்கும் ஒரு சிறிய முயற்சி இது. இதிலுள்ள ஒவ்வொரு கட்டுரையும் மிக்க ருசிகரமா யிருக்கிறது.

ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை: ஆசிரியர்: டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி) வெளியிட்டோர்: லோக சக்தி பிரசுராலயம், மௌண்ட் ரோட், சென்னை. விலை அணா 8.

தேசீய ஒற்றுமையை இந்தச் சிறு நூலிலே ஆசிரியர் நன்கு வற்புறுத்துகிறார். பாகிஸ்தான் வந்தால், முஸ்லீம்களுக்கே கெடுதல் என்று ஓரிடத்தில் விளக்குகிறார். இந்து-முஸ்லீம் பிரச்னைகள் பலவற்றையும் சுருக்கமாக அலசியிருக்கிறார்.

இடையிலே, குர்ரான் மேற்கோள்களோடு, உண்மை முஸ்லீம்களின் கடமை யாது என்பதையும் மிக அழகாக விளக்குகிறார். தேசபக்தியோடும், பிற சமூகத்தாருடன் ஒற்றுமையாகவும் வாழ்வதே முஸ்லீம்களுக்கு அழகு என்பது அவரது முடிவு. தேசீய ஆர்வம் கொண்டதொரு முஸ்லீமின் இந்த நூல் எல்லாரும் படிக்க வேண்டியதாகும்.

பாலர் பாட்டு:



செங்கதிர்ச் செல்வன்

மலரை யெல்லாம் சிரிக்க வைத்து
    மது வளிப்பேனே—என்றும்
பலவர்ணம் தீட்டிமணம்
    பரக்கச் செய்வேனே

ஒளியை யெல்லாங் கண்ட வுடன்
    ஒடுங்க வைப்பேனே—என்றன்
ஒளியாலே இருளை யெல்லாம்
    ஓட்டிடுவேனே

பருவத்தைப் பலவிதமாய்ப்
    படைத்திடுவேனே—என்றன்
உருவத்தைக் காட்டிநிதம்
    ஒளித்திடுவேனே

ஜாதிமத பேதமின்றி
    ஜகத்திற் கொளியை—ஒரு
ஜோதியாக நின்றுநானும்
    ஜொலித்திடுவேனே

எல்லை யில்லாக் கடலை யெல்லாம்
    யான் குடிப்பேனே--உங்கள்
தொல்லை யெல்லாம் நீங்க மழை
    சொரிந்திடு வேனே

மக்களோடு செடிகொடிகள்
    மரம் விலங்குகள்—என்றும்
சொக்கிவாழ வேண்டியென்னைத்
    தேடி நிற்பரே

பா மணக்கப் பாடும் வண்ணம்
    பச்சைப் போர்வையால்—இதோ
பூ மாதின் பொன்னுடலைப்
    போர்த்திடு வேனே

காற்று வீசி உலகை யெல்லாம்
    களிக்க வைப்பேனே—நித்தம்
ஆற்றி லலை மோதும்படி
    அலங்கரிப்பேனே

வேளையிலே விரைந்தோடி
    வந்திடுவேனே—உங்கள்
நாளை யெலாம் நலம்பெறவே
    நன்கு வைப்பேனே

—'உமா'

பாலர் கதை :

கருணை மேகம்

ஒரு காலத்தில் ஒரு ஊரில் மழையே பெய்ய வில்லை. ஏரி, குளம் எல்லாம் வறண்டு விட்டது. ஜனங்களெல்லாம் தவியாய்த் தவித்தார்கள்.

இப்படியிருக்கையில், சமுத்திரத்திலிருந்து ஒரு சிறிய மேகம் கிளம்பியது. அது மெள்ள நீல ஆகாயத்திலே உல்லாசமாக மிதந்து கொண்டிருந்தது. காற்றிலே தாழ்ந்து நாலா திசையிலும் சுற்றியது. அப்போது, இந்த ஊரை அது பார்த்தது. ஜனங்களெல்லாம் தண்ணீரில்லாமல் கஷ்டப்படுவதைக் கண்டது. வயலெல்லாம், பயிர் பச்சையில்லாமல் பாழாய்க் கிடப்பதைப் பார்த்தது.

"ஐயோ! ஜனங்களெல்லாம் இப்படி வருந்துகிறார்களே! பிராணிகளெல்லாம் திண்டாடுகின்றனவே! பயிர்களெல்லாம் பட்டழிகின்றனவே! நான் மாத்திரம் கவலையற்று இவ்விதம் திரிவது நியாயமா?" என்று அந்த மேகம் நினைத்தது. "நான் இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்றும் எண்ணியது.

இப்படி நினைத்ததும், வர வர அது பெரிதாக வளரலாயிற்று. ஏனென்றால், அதன் இதயத்திலே ஜனங்களிடம் அவ்வளவு அகண்டமான அன்பு குடிகொண்டுவிட்டது. அன்புள்ளவர்கள், ரொம்பப் பெரியவர்களாகிவிடுவது வழக்கம்.

சூரியனோ வர வர உக்ரமாய்க் காய்ந்தது. ஜனங்கள் ரொம்ப ரொம்பத் துவண்டு போய் விட்டார்கள்.

"ஜனங்களே! நான் உங்களுக்கு உதவி செய்கிறேன்" என்று கூவியது அந்த மேகம். பிறகு, மெல்ல மெல்லக் கீழே இறங்கத் தொடங்கியது.

ஆனால், பூமியின் கிட்ட வந்தபோது, அதற்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. "என் கண்ணே! நீ பூமியின் கிட்ட மாத்திரம் போகாதே; போனால் செத்துப் போவாய்" என்று, அதன் அம்மா சமுத்திர அரசி, மேகக் குழந்தைக்குச் சொல்லியிருந்தாள். மேகத்துக்கு, அது இப்போது ஞாபகம் வந்தது.

இதை நினைத்ததும், மேகத்துக்குக் கொஞ்சம் சஞ்சலம் ஏற்பட்டது. அது இப்படியும் அப்படியும் கொஞ்ச நேரம் தத்தளித்தது. கடைசியில், "என் உயிர் போனாலும் இந்த ஜனங்களுக்கு உதவி செய்தே தீர்வேன்" என்று துணிந்தது. "பூலோக ஜனங்களே! என்ன வந்தாலும் சரி; உங்களுக்கு உபகாரம் செய்கிறேன். பயப்படாதேயுங்கள்" என்று பெருமையோடு சொல்லியது.

இந்த எண்ணம் அதற்கு வந்தவுடனே, அது ஆச்சர்யமாய் அகண்டு, வளர்ந்து, வலிமை பெற்றது. தான் இவ்வளவு பெரிதாக முடியும் என்று அது கனவுகூடக் கண்டதில்லை. ஏதோ வொரு பெரிய தேவதையைப் போல், கம்பீரமாய் நிமிர்ந்து, பரந்து, விரிந்தது. "இதோ உதவுகிறேன்" என்று, பூலோக ஜனங்களைப் பார்த்து, மறுபடியும் சொல்லியது: "ஆமாம்; என்னையே நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுக்காக, என் உயிரையே அர்ப்பணம் செய்கிறேன்" என்று கூறியது.

இப்படி அது சொன்னவுடனே, அதன் இதயத்திலிருந்து ஓர் அற்புத ஜோதி மின்னியது; வானமெல்லாம் அதிர, இடி முழக்கம் ஒன்று கிளம்பியது; வார்த்தையால் சொல்ல முடியாத அன்பு வெள்ளம் ஒன்று மேகத்தின் இதயத்திலே நிறைந்தது. மேகம் தனது உயிரைத் தியாகம் செய்து, குளிர்ந்த, அமிழ்த தாரை போல், மழையாய்ப் பொழிந்தது.

மழை அந்த மேகத்தின் மகத்தான தியாகச் செயலாகும்; ஆனால், அதன் சாவுமாகும். அந்தச் சாவு அதற்குப் பெருமை தந்தது. கண்ணுக் கெட்டிய மட்டில் மழை சொரிந்த இடமெல்லாவற்றையும் வளைத்து, ஆகாயத்திலே, மஞ்சளும் நீலமும் பச்சையும் சிவப்பும் ஊதாவுமாய்ப் பல வர்ணம் ஒளி செய்ய, வானவில் ஒன்று தோன்றியது.

கொஞ்ச நேரத்திலே, அதுவும்கூட மறைந்து விட்டது. ஆனால், அந்த ஊர்வாசிகள், தங்களைக் காப்பாற்றிய கருணை மேகத்தைத் தங்கள் இதயத்துக்குள்ளே, வெகு காலம் வரையில் வாழ்த்திக்கொண்டிருந்தார்கள்.

'நீலா'

கவனியுங்கள் ! **தக்க லாபம் !!**



No. 1914

எங்களிடம் பலவிதமான கெடியாரங்கள்
குறைந்த விலைக்கு உத்திரவாதத்துடன் கிடைக்கும்

கெடியார ரிப்பேர்கள் தேர்ச்சி பெற்ற பேர்களைக்கொண்டு குறித்த காலத்தில் உத்திரவாதத்துடன் செய்து அனுப்பப்படும்.

No. 1914. சுபீரியர் ஸ்டேபிரைட் (Staybright Steel back) 15 ஜூவல்கள் உள்ளது. நீண்டகாலம் யாதொரு ரிப்பேர் அன்றி சரியான காலம் காட்டக்கூடியது. 2 வருஷம் உத்திரவாதம். லீவர் வாட்சு சதுர சையிஸ் உள்ளது. ரூ. **21-0-0.**

No. 101. 10 வருஷம் உத்திரவாதமுள்ள ரோல்டு கோல்டு இலிசா (Elisa Lever) லீவர் ரெக்டாங்குலர் ரிஸ்டு 15 ஜூவல்கள் உள்ளதும் $7\frac{3}{4}$ சையிஸ் 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **31-0-0.**

No. 102. ஷை மாதிரி எவர் பிரைட் ஸ்டீல் ரூ. **29-0-0.**
No. 103. ரோல்டுகோல்டு காப்டன் (Captain Lever) $7\frac{3}{4}$ சையிஸ் ரெக்டாங்குலர் 16 ஜூவல்கள் உள்ளது. (West End Pattern) 5 வருஷம் உத்திரவாதமுள்ளது. ரூ. **41-0-0.**



Elisa
No. 101

வரவழைத்து திருப்தி யில்லாவிடில் ஒரு வாரத்தில் பணம் வாபஸ் செய்யப்படும். ஆர்டர் செய்வோர்களுக்கு அழகிய கிருஷ்ணன் போட்டோ கியாலண்டர் இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர் : **நியூ அமெரிக்கன் வாட்சு கம்பெனி,**
201, பெரிய கடைவீதி, திருச்சிருப்பள்ளி.

‘பாபூ’

அல்லது

நானறிந்த காந்தி

ஜீ. டி. பிர்லா எழுதிய இந்த அரிய நூலை

அ. சுப்பையா

நேர்த்தியான தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

மாகாத்மா காந்தியின் குணாதிசயங்கள் இதிலே அற்புதமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1—8—0

சக்தி காரியாலயம்
ஜி. டி. : : சென்னை

எம். எஸ். சுப்பிரமணிய அய்யர்

எழுதிய

சரித்திர தீபம்

[ஸ்ரீ. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முகவுரையுடன் கூடியது]

நம் நாட்டின் பெருமையை எடுத்துரைப்பது அதன் சரித்திரமே. மாக்ஸ் முல்லர், பால் டியூஸன் போன்ற எண்ணிறந்த பல அறிவாளிகள் நம் புராதனப் பெருமையை வியந்தும், புகழ்ந்தும் கூறியுள்ளனர். நமது பூர்வீக வரலாற்றை உணரவேண்டி எழுதப்பெற்றது இந்நூல்.

விலை ரூ. 1-4-0

சக்தி காரியாலயம்
ஜி. டி. : : சென்னை.

அறிக்கை

சந்தா பாக்கி உள்ளவர்கள் தங்கள் சந்தாக்களை அனுப்புவதுடன், பத்திரிகை விஷயமாகத் தகவல் எழுதும்போது சந்தா நெம்பர்களைக் குறித்தனுப்ப வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நமது பிரதிநிதி : நமது பிரதிநிதி திரு. ரா. பாலசுப்ரமண்யம் ‘சக்தி’யின் அபிவிருத்தியை நாடி, தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணஞ் செய்து வருவதால், ஆங்காங்கு உள்ள நண்பர்கள், அவருக்கு ஒத்தாசை புரிந்து இயன்ற ஆதரவு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மானேஜர்,
சக்தி காரியாலயம், சென்னை.

சக்தி மலர்கள்

1. **இனி நாம் செய்யவேண்டுவது யாது?** [லியோ டால்ஸ்டாய்] ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு — அணா 12

சுத்தமான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு தமிழனும் படித்துப் பயன்பெறத் தக்க அனுபவக் களஞ்சியம்.

2. **உலகம் சுற்றும் தமிழன்** ஏ. கே. செட்டியார் — அணா 12

பல நாட்டின் பழக்க வழக்கங்களேயும், புதுமைகளேயும் எளிய இனிய தமிழில் சித்தரித்துக் காட்டும் பல கட்டுரைகள் கொண்ட நூல் இது ஒன்றே நந்தமிழ் மொழியில் வந்துளது.

3. **நிர்மலகுமாரி** காழி. சிவ. கண்ணுசாமி — அணா 12

இந்து தேச சரித்திரத்தை யொட்டி யெழுந்த ஒப்பற்ற இனிய நவீனம். எளிய நடை. படிப்பதற்குகந்த இனிமையான கதை.

4. **அசலா** [கிருஹதாஹ்] [சரத் சந்திர சட்டர்ஜி] ஆர். ஷண்முகசுந்தரம் மொழிபெயர்ப்பு — ரூ. 1½

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜியின் நாவல்களில் அசலா தலே சிறந்த தென்று எல்லோராலும் புகழப் பெற்றது. இனிய நடையில் ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் மொழி பெயர்த்திருக்கிறார்.

5. **சிறை அனுபவங்கள்** கி. சடகோபன் — அணா 12

மனிதனுடைய உண்மைச் சொரூபத்தைக் காட்டிவிடக் கூடியது சிறைதான். அந்தச் சிறை நம் நாட்டில் எப்படி யிருக்கிறது என்பதை, உருக்கமாகவும் நகைச்சுவை யுடனும் இதிலே வர்ணிக்கப்பட் டிருக்கிறது.

6. **கூண்டுக் கிளி** (முதலிய நாடகங்கள்) [ஹரீந்திரநாத சட்டோபாத்யாயா] தி. ஜ. ர. மொழிபெயர்த்தவர் — ரூ. 1

தெவிட்டாத இனிய நடை ; அரிய கருத்துக்கள் ; உள்ளத்தை அள்ளும் கற்பனே.

7. **அமெரிக்கா** ஏ. கே. செட்டியார் — ரூ. 1

பிரயாண நூல்

காந்தித் தாத்தா கதை ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன், ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்ராமன் — அணா 8

முதியோர் கல்வி அபிவிருத்திக்காகவும், சிறுவர் அறிவைப் பெருக்க வேண்டியும் பொதுவாக அனைவருக்கும் பயன்பட வேண்டியும் எழுதப்பட்டது இந்தப் புஸ்தகம். அருமையான பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. படிக்கப் படிக்கத் தெவிட்டாத நடையில் இயற்றப்பட் டிருக்கிறது.

இன்னும் ருஷிய மகான் டால்ஸ்டாய் எழுதிய மற்றெல்லா நூல்களேயும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடப்பெறும்.

சக்தி காரியாலயம்

46, முத்துமாரி செட்டித் தெரு, ஜி.டி. சென்னே

Fashion Insists on-

Smartness !

FOR MODERN SAREES

SHOP AT

RANGOON HALL

RANGOON MERCHANT

அழகு செய்வது தற்கால நாகரீக ஆடைகளே !

உயர்தர ஜவுளிக்கு

உத்திரவாதமுள்ள இடம்

ரெங்கோன் - - - ஹால்

கு. அ. அங்கமுத்து முதலியார்

பட்டு ஜவுளி வியாபாரம்

அம்மன் சன்னதி :: காரைக்குடி

Your **EASTERN BUSINESS**

Is safe with us. We transact every description of Banking & Exchange business. We offer Special facilities for Collection on Malaya. Promptness & Service are our watchwords.

INDIAN OVERSEAS BANK LTD

ஹெட் ஆபீஸ் :

மதராஸ்

பிராஞ்சுகள் :

கன்னனூர்	சிங்கப்பூர்
கோயம்புத்தூர்	புதுக்கோட்டை
தேவகோட்டை	ரங்கூன்
காரைக்குடி	சிவகங்கா
குலாலம்பூர்	மேட்டூர் டாம்
பினங்கு	தலைச்சேரி (சப் ஆபீஸ்)

மேல்நாட்டு ஏஜண்டுகள்

தி சேஸ் நேஷனல் பாங்க் ஆப்
தி ஸிடி ஆப் நியூயார்க்
லண்டன் & நியூயார்க்

உங்கள் விலை யுயர்ந்த சாமான்களை
Safe Deposit Vault-இல்
பத்திரப் படுத்துங்கள்

இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கு

லிமிடெட்

எஸ்ப்ளனேட் :: மதராஸ்

சக்தி காரியாலயம், புத்தக வியாபாரிகள்

சக்தி மலர்கள்

		ரூ.	அ.
1	இனி நாம் செய்யவேண்டுவது யாது?	0	12
2	உலகம் சுற்றும் தமிழன்	0	12
3	நிர்மலகுமாரி	0	12
4	அசலா [கிருஹதாஹ்]	1	8
5	சிறை அனுபவங்கள்	0	12
6	கூண்டுக் கிளி முதலிய நாடகங்கள்	1	0
7	அமெரிக்கா	1	0
	காந்தித் தாத்தா கதை	0	8
	டால்ஸ்டாய் சிறு கதைகள் I,II,III each	1	0
	போரும் காதலும் I, II, III, IV each	1	8
	சரித்திரக் கதைகள்	1	0
	டால்ஸ்டாயின் நாடகங்கள்	1	0

அன்பு மலர்கள்

சுவாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியது

பைந்தமிழ்ச் சோலை	0	4
இன்ப மாலை	0	6
உடலுறுதி	1	0
பொது நெறி	0	2
திருக்குறளின்பம்	1	4
,, ,, காலிக்கோ	1	12
இன்று மனிதனும் இனிவரும் மனிதனும்	0	6
வரகவி தாகூர்	0	3
தியான மாலை	1	0
புதுமையும் பழைமையும் (நாடகம்)	0	8
சிவாஸ்திரம்	0	8
புத்தர் கருணை	0	8
அன்பின் அற்புதம்	0	10
திருநூல் அல்லது தூயவாழ்வு	1	0
தமிழுணர்ச்சி	1	0
யோகசித்தி	2	8
அரவிந்த யோக தீபிகை	0	8
மஹாகவி காளிதாசன்	1	4
நாடகக் கலை	0	3
மஹரிஷி தாயுமானுர்	0	4
ஏழை படும் பாடு	1	8
இளிச்சவாயன்	1	0
பக்திப் பரவசம் (பாமலர்-க)	0	10
குழந்தை யின்பம் (,, -உ)	0	3
பேரின்பம் (,, -ங)	0	4
திருமணப் பாட்டு (,, -ச)	0	4
கவிக்கனவுகள்	0	10
அன்னை	0	4
சிலம்புச் செல்வம்	1	12
ஹிந்தி அவசியமா?	0	4
அருட்சுடர் வள்ளலார்	0	12
மகா கவி தாந்தே	1	0
அன்பு வழி	0	6

அல்லயன்ஸ் வெளியீடுகள்

	ரூ.	அ.
வாழ்க்கையே வாழ்க்கை!	1	0
கதைக் கோவை, கிளேஸ்பதிப்பு	3	0
,, பெதர் வெயிட்	3	8
விஷ விருக்ஷம்	1	8
ஆனந்த மடம்	1	8
துர்க்கேசநந்தினி	1	8
மாதங்கினி	1	4
இந்திரா	0	12
ரஜனி	0	14
தேவி சௌதராணி	1	4
கிருஷ்ணகாந்தன் உயில்	1	8
கபால குண்டலா	1	8
விஜயா	1	8
அமூல்யன்	0	15
லலிதா	0	12
காங்கிரஸ் 50 வருஷ சரித்திரம்	1	0
பண்டித மோதிலால் நேரு	0	12
வீரகேசரி விட்டல்பாய் படேல்	0	12
ஷண்முக விஜயம் (19-போடோ படங்களுடன்)	0	12
ஷண்முக சுந்தரம்	2	0
விஜய பாஸ்கரன்	2	0
விக்ரம சிங்கன் கோட்டை மர்மம் (கற்பின் வெற்றி)	1	0
மோகனங்கி	1	4

நவயுக வெளியீடுகள்

கம்பன் கவிதை	1	8
புதுமைப் பித்தன் கதைகள்	2	0
கட்ட பொம்மு	1	8
பேஷிஸ்ட் ஜடாமுனி	1	8
தேவதாஸ்	1	0
உலகத்துச் சிறு கதைகள்	1	0
மாகாண சுயாட்சி	0	8
தேய்ந்த கனவு	0	8
மழையும் புயலும்	1	8
பாகிஸ்தான்	1	0
பெண்	1	8
ஸப்த நதிகள்	0	12
எல்லோரும் ஓர் குலம்	0	8
வார்தா திட்டம்	0	8
இரட்டை மனிதன்	0	8
பொம்மையா, மனைவியா?	0	8
லெனின்	0	8
சீனு—ஜப்பான்	0	8
மைக்கேல் காலின்ஸ்	0	8

இன்னும் மற்றெல்லா இதர நூல்களும் எங்களிடம் கிடைக்கும்.

46, முத்துமாரி செட்டித் தெரு, ஜி. டி. சென்னை

New Model 75 *DeLuxe*

Remington

Room Air Conditioner



பழைய காலம் முதல் இந்நாள் வரை கடுமையான உஷ்ணமும், மித சீதோஷ்ண மந்தாரமும், உதறச் செய்யும் உறை பனியும் மனிதனின் ஆரோக்யத்தையும், சுறுசுறுப்பையும் சந்தோஷத்தையும் கெடுத்து வருகிறது. இப்பொழுதோ வென்றால், 'ஏர் கன்டிஷனிங்' எனும் புதுமை, இயற்கையின் இடைஞ்சல்களை அறவே ஒழித்துவிட்டது.

மனித வாழ்க்கைக்கு மிக ஆரோக்யமான சீதோஷ்ண ஸ்திதி ஒரு வருஷத்தில் சில நாட்களே இயற்கையாய் அமைந்திருக்கிறது. ஆனால் மாசற்ற "ஏர் கன்டிஷ' னிங்கோ தமக்கு இன்றியமையாத சம சீதோஷ்ண நிலையை, தானாகவே வருஷத்தில் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மணியிலும் ஏற்படுத்துகிறது.

'ஏர் கன்டிஷனிங்' எவ்விதமான சௌகர்யத்தையும் கொடுக்கிறது. ஒருவனுக்கு, பொறுக்க முடியாத கோடை வெப்பத்திற்கு மாற்றாக 'ஜில்' லென்று தனது வேலையில் ஈடுபடக்கூடிய சுகத்தை கொடுக்கிறது. மற்றொருவருக்கு மிக குளிரினால் ஏற்படக்கூடிய ஜலதோஷம், ஆஸ்த்மா, காய்ச்சல் முதலியவைகளைத் தடுக்கிறது. சகிக்க முடியாத உஷ்ணப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு குளிர்ச்சியான, சுகமான சம சீதோஷ்ண ஸ்திதியை அளிக்கிறது.

அநேக விதமான சௌகர்யங்களுக்காக அநேகர் "ஏர் கன்டிஷனிங்"கை அடிக்கடி ஆதரித்தாலும், நாம் எதிர்பாராத வேறு பல சௌகர்யங்களையும் "ஏர் கன்டிஷனிங்" அளிக்கும் என்று சொல்வது மிகையாகாது.

மேலே இருப்பது உங்களுக்கு வருஷம் **365** நாட்களும் ஆரோக்யமான சம சீதோஷ்ண நிலையை கொண்டுவரும் புதிய "ரெமிங்க்டன் மாடல் **75** டீ லக்ஸ்" எல்லோருக்கும் எங்கிருப்பவர்களுக்கும் திருப்தி அளிப்பதற்காகவே மேலேயுள்ள 'ஏர் கன்டிஷனர்' ஏற்படுத்தப்பட்டது.

"புதிய மாடல் **75** டீ லக்ஸ்" ஏர் கன்டிஷனர் எங்கள் லக்ஷியத்தின்படி எல்லாவித சௌகர்யங்களுக்கும் ஏற்பட்டது என்று நம்புகிறோம்.

ரெமிங்டன் ஏர் கன்டிஷனிங் கம்பெனி

ஹென்ரி டி. ஜோஸ்லின்

ப்ரெஸிடென்ட்

Remington
AIR CONDITIONER
WILMINGTON
1872

Tel. ARASAR   Phone: No. 4551

Sub dealers:

UNITED TRADING CO.
No. 22, Second Line Beach
G. T. MADRAS

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited
(Shanti Press), 46, Muthumari Chetti Street, G.T., Madras. Joint Editor: T. J. Ranganathan.